الحمد لله رب العالمين والصلوة والسلام على سيد المرسلين وامام المتقين وخاتم النبيين محمد واله

واصحابه واتباعه اجمعين

# இஸ்லாமியக் கொள்கைகள்-Islamic Akeedah

*மூலாசிரியர்:* **அல்லாமா அஷ்ஷெய்கு அப்துல்ஹக் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ்.**

*தமிழில்:* **மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ் எப்.எம். இப்றாஹிம் ரப்பானி ஆலிம் ரஹிமஹுல்லாஹ்.**

இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் தன்னைத்தானே இயக்கிக் கொள்கின்றன. அவைகளை இயக்குபவரென யாருமில்லை என்னும் கருத்தை அறிவாளர்கள் என்றைக்குமே ஒப்புக் கொண்டதில்லை. ஏனெனில் மனிதஅறிவு ஒரு காரியத்தை காரணத்தின் பக்கமாக திருப்புவதே இதற்குக் காரணமாகும். ஆம். காரணமின்றி எந்தவொரு காரியமும் எப்போதும் நடக்காது.

பாருங்கள்! ஒருமரம் தானாகக் கீழேவிழுந்து, காய்ந்து, கட்டையாகி, தானே துண்டு துண்டாகப் பிளந்துகொண்டு, தானே ஒரு மேஜையாக, அல்லது ஒரு நாற்காலியாக உருப்பெற்றுவிட்டதென்று யாராவது சொன்னால் அவருடைய பேச்சு சிரிப்புக்குத்தான் இடமாகுமேயன்றி, அப்படியா! என்று அதை யாரும் கேட்கவும் மாட்டார்கள். ஏற்கவும் மாட்டார்கள்.

அவ்வாறாயின் வானமோ பூமியோ தானாக தோன்றவில்லை. சூரிய நட்சத்திரக் கோளங்கள் போன்றவை எதுவும் தாமாக சுழலவில்லை. பூமியிலுள்ள ஜீவராசிகள் எதுவும் தாமாக இயங்கவில்லை. மாறாக அவையனைத்தையும் தோற்றுவித்த ஒன்றுள்ளது. அதுதான், தான் தோற்றுவித்த ஒவ்வொன்றுக்கும் அவை அவைகளுக்கென ஒரு எல்லையை வகுத்து அந்த எல்லைக்குள் இயங்க வைத்துக் கொண்டுள்ளது என்பது அறிவாளர்களின் தீர்க்கமான முடிவாகும்.

அதேநேரம் அது எது என்பதில் அறிவாளர்கள் திகைத்துப் போயுள்ளனர். அத்துடன் அதனுடைய தோற்றமென்ன என்பதில், அது எத்தனை என்பதில் அறிவின் பார்வையில் இன்றுவரை கருத்துக் குழப்பம் நீடித்துக் கொண்டே இருக்கிறது. அதை அடிப்படையாகக் கொண்டே இன்று உலகில் பார்க்கப்படும் சமயங்களிடையே பல்வேறு வகையான நம்பிக்கைகளும் கருத்துச் சிதறல்களும் காணப்படுகின்றன.

இருப்பினும் இஸ்லாமியரிடையேயுள்ள அடிப்படை நம்பிக்கைவாதிகள், இப்பிரபஞ்சத்தை இயக்கும் அதை ஆண்பாலிலோ, அல்லது பெண்பாலிலோ குறிப்பிடாமல் பொதுவாகவே

பேசுகின்றனர். ஆனால் தமிழ்கூறும் முஸ்லிம்கள் அதை ஆண்பாலில், அவன் இவன் எனக் குறிப்பிடுவதால் நாமும் அவ்வாறே பேசுவோம்.

அதேநேரம் அவன் என்னும் அது எப்படி இருக்கிறது? என்பதை கொஞ்சம் விளக்குங்களேன் என மனிதஅறிவு அதை தெரிந்து கொள்ள முற்பட்டபோது, 'அது எதைப் போலவும் இல்லை' என்பதாக அதற்கு பதில் தரப்பட்டது சரி. அது போகட்டும். நாங்கள் பார்த்த, அல்லது பார்த்துக் கொண்டுள்ள பொருட்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டு அதை உவமைபடுத்துவதன் மூலமாக அது அப்படி இருக்கிறது. அல்லது இப்படி இருக்கிறது என்றாவது விளக்குங்களேன் என மீண்டும் மனித அறிவு வினா தொடுத்தபோது, பொருட்களாகவே இருப்பவை அனைத்தையும் அதுதான் தோற்றுவித்திருப்பதால் அதை ஒருபொருளை கொண்டு எவ்வாறு உவமைப்படுத்த முடியும்? எனவே அதற்கு அதுதான் உவமையேயன்றி வேறு எதுவும் அதற்கு உவமையாகாது என திட்டவட்டமாகக் கூறிற்று.

இந்நிலையில் சகல பிரபஞ்சத்தையும் தனது அதிகார வரம்பிற்குள் வைத்து ஆட்சி செய்து கொண்டிருக்கும் அதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் மனித அறிவின் தவிப்பு மேற்காணும் பதில்களை கொண்டு சமாதானம் அடையாததால் அதை எப்படியாவது தெரிந்தே தீருவது என்னும் வேகம் அதற்குள் ஏற்பட்டு அதைப் பற்றிய அடுக்கடுக்கான பல கேள்விகளை கேட்க ஆரம்பித்தது. இவ்வாறு கேள்வி கேட்பதன் மூலம் அதை எப்படியும் தெரிந்து கொண்டு விடலாம் என அறிவு கணக்கு போட்டது. ஆனால் இஸ்லாமியம் அதனுடைய இருப்பைக் குறித்து சரமாரியாக பதில் தந்ததால் மனித அறிவுக்கு அதைப்பற்றி எதுவுமே புரியாமல் போனாலும் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. அது, நம்மை நாமே இயக்கிக் கொண்டிருப்போமாயின், நமது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறிட வேண்டும். ஆனால் பெரும்பாலும் நமது விருப்பத்திற்கு மாறாகத்தானே எல்லாமே நடக்கின்றன. அப்படியானால் இஸ்லாமியம் கூறும் அந்த ஒன்று இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம் என்னும் தீர்மானத்திற்கு வந்தது.

இதனிடையே மனித அறிவின் கேள்விக்கு இறைவன் என்னும் அது ஒரு பொருளாக இருந்திருந்தால், அல்லது அது ஏதாவதொரு பொருளுக்குள் வந்து நுழைந்திருந்தால், அல்லது ஏதாவதொரு பொருளுக்குள் வந்து இரண்டறக் கலந்திருந்தால், அல்லது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்தால், அல்லது அது எத்தனை காலமாக இருக்கிறது என்பது தெரிந்திருந்தால் இவைகளில் ஏதாவது ஒன்றைக் கொண்டு மனித அறிவால் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால் என்ன செய்ய! மனித அறிவு எதை வைத்தெல்லாம் ஒன்றை அளவெடுக்குமோ, கணக்கிடுமோ அந்தப் பாதைகளனைத்தும் அதனுடைய விசயத்தில் மூடப்பட்டு போய்விட்டதால் இறுதியில் வேறு வழியின்றி இறைவன் என்னும் ஒன்று இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள எனக்கு ஆதாரம் எதுவும் வேண்டாம். ஆதாரமின்றியே அதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்பதாக முடிவில் தனது தோல்வியை ஒப்புக் கொண்டது.

இப்படிப்பட்ட நம்பிக்கையை தான் இஸ்லாமிய முன்னோடிகள் 'அகீதா' என்பதாகக் கூறுகின்றனர். இது இறைவனை மட்டும் கட்டுப்படுத்துவதல்ல. மாறாக இறைத்தூதர்களின்

'தூதுத்துவம்' அவர்களுக்கு இறைவனாகிய அதனிடமிருந்து இறக்கியருளப்பட்ட 'வேதங்கள்' பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு காரணவாதிகளாக முன்னிறுத்தப்பட்டுள்ள வானவர்கள் என்னும் 'மலக்குகள்' சிருஷ்டிப் பொருட்களின் இறுதிநிலையை குறிக்கின்ற 'மறுமை' அவைகளின் மீது நிர்ணயிக்கப்பட்டுள்ள 'விதி' போன்ற அனைத்தையும் இந்த அகீதா என்னும் நம்பிக்கை கட்டுப்படுத்துகிறது.

மேலும் இந்த அகீதா என்னும் நம்பிக்கை இடம், பொருள், காலம், சந்தர்ப்பம், சூழ்நிலை என்னும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாறாது. மாறவும் கூடாது. மனித அறிவில் சுழலும் எண்ணங்களும் நினைவுகளும் கற்பனைகளும் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப மாறலாம். அதனுடைய செயல்பாடுகளும் மாறலாம். ஆனால் மனித அறிவுக்குள் அழுத்தப்பட்டுள்ள இந்த அகீதா என்னும் நம்பிக்கை மட்டும் மாறக்கூடாது. ஒருவேளை மாறுமாயின் மனித வாழ்வின் பாதையே தடம் மாறிப் போய்விடும்.

**இறைவன்**

ஒரு நம்பிக்கையாளர் தனது இதயத்தில் வைத்து பாதுகாக்க வேண்டிய நம்பிக்கையில் முதன்மையானதும் தலையானதும் இறைவன் என்னும் பரம்பொருளைக் குறித்த நம்பிக்கையே ஆகும். இதனை உறுதிப்படுத்துகின்ற வாக்கியங்களில் எல்லாம் தலையானதும் முதன்மையானதும் **'லா இலாஹ இல்லல்லாஹ்'** ((இறைவனையன்றி வேறு யாருமில்லை) என்னும் வாக்கியமாகும் என்பதாக மனித குலமனைத்துக்கும் முதல் படைப்பாகிய இறைத்தூதரான முஹம்மத் ஸல்லல்லாஹு அ லைஹி வஸல்லம் அவர்களும் மற்ற இறைத்தூதர்களும் கூறுகின்றனர்.

இனி சிந்தனாவாதிகளில் சிலர் இப்பிரபஞ்சம் என்பது ஒரு 'மாயை' என்றும், இதிலுள்ள பொருட்களெல்லாம் மாயையான தோற்றமேயன்றி எதார்த்தமல்ல என்றும், நமது அறிவும், பார்வையும் இவ்விசயத்தில் நம்மை ஏமாற்றிக் கொண்டுள்ளதென்றும் கூறுகின்றனர்.

ஆனால் தெளிவான, தீர்க்கமான, விவேகத்திற்குரிய அறிவுடையோர் மேற்படி கூட்டத்தாரின் கூற்றுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லையென மறுக்கின்றனர். அத்துடன் நம்பிக்கை என்பது வெறுமனே சந்தேகத்தின் மீதும், கற்பனையின் மீதும் நிலை நிறுத்தப்படுவதல்ல என்றும், மாறாக அறிவின் தீர்க்கமான பார்வையை கொண்டுதான் அது அமைகிறதென்றும் கூறுகின்றனர்.

பாருங்கள்! நெருப்பு என்பது உண்மையில் நெருப்புதான். இனி யாராவது இது நெருப்பல்ல. நீர் என்று சொன்னால் இப்படி சொல்பவரின் வார்த்தை சந்தேகத்தை அடிப்படையாக கொள்வதால் சந்தேகத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். இதேபோல குளிர்ச்சியை உஷ்ணமென்றோ, உஷ்ணத்தை குளிர்ச்சி என்றோ சொல்வதால் நீரின் குளிர்ச்சித் தன்மை உஷ்ணமாகவோ, அல்லது நெருப்பின் உஷ்ணத்தன்மை குளிர்ச்சியாகவோ மாறிவிடுமா என்ன? அல்லது இதனை அறிவுள்ள எந்த மனிதனாவது ஏற்றுக் கொள்வானா? இவ்வாறாக நம்பிக்கைவாதிகளை தான் இஸ்லாமியக் கொள்கைவாதிகள் 'சூ∴பஸ்தாயிய்யா' எனக் கூறுகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு பொருளையும், அவைகளுக்குரிய தன்மைகளையும், அவற்றின் எதார்த்தமான குணாதிசியங்களையும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் எனில், இந்த நம்பிக்கையைதான் இஸ்லாமிய முன்னோடிகள் 'அகீதா' என்று கூறுகின்றனர். அடுத்து மேற்கண்ட சூஃபஸ்தாயிய்யாக்களை போல இப்பிரஞ்சத்தை மாயை எனக்கூறும் இன்னொரு சாராரும் இருக்கினரென முன்னால் நாம் கூறியது உங்களுக்கு நினைவிருக்கும். இவர்கள் தாங்கள் ஒரு படைப்புத்தானா என்பதிலேயே சந்தேகம் கொண்டுள்ளனர். இத்தகையோரிடம் வாதிப்பது என்பது வீண். ஏன்! காலவிரயமும் கூட. இருப்பினும் இவர்களுக்கு இவர்களுடைய இருப்புத்தன்மை என்பது உண்மைதான் என்பதை புரியவைக்க வேண்டுமானால் இவர்களை எரியும் நெருப்பில் வீசியெறிந்தால் அதனுடைய உஷ்ணம் இவர்களை கரிக்கத் துவங்கியதும் எதுவுமே மாயையல்ல. எல்லாமே உண்மைதான் என்பதை தாமாகவே இவர்கள் புரிந்து கொள்வார்கள்.

**பிரபஞ்சம் நவீனம்**

இப்பிரபஞ்சமும் இதில் காணப்படும் பொருட்களனைத்தும் நவீனமாக தோன்றியவைகளே. அதேநேரம் இறைவன் என்னும் அப்பரம்பொருளின் தாத்து(தன்மயமு)ம், அதனுடைய ஸிஃபாத்துக்(தன்மை)களும் பூர்வீகமானவைகளாகும். அதேநேரம் இல்லாமையில் இருந்து தோன்றக் கூடிய எல்லாமே நவீனமானவைகளாகும். இதை குறித்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

كان الله ولم يكن معه شيئ

'இறைவன் என்னும் பரம்பொருள் அனாதியாக இருக்கும்போது அதனுடன் எதுவுமே இல்லாதிருந்ததை போன்று இப்போதும் அனாதியாகத்தான் இருக்கிறது' எனக் கூறுகின்றனர்.

இனி இதைப் பற்றி நமது அறிவைக் கொண்டு யோசிப்போமாயின், பிரபஞ்சம் என்பது ஒவ்வொரு வினாடியும் மாற்றத்தையும் ஏற்ற இறக்கங்களுக்குரிய வித்தியாசத்தையும் சந்தித்துக் கொண்டே இருக்கிறது. முன்பு நம்மால் பார்க்கப்பட்டது இப்போது இல்லை. நேற்று நம்மோடு இருந்தவர் இன்று நம்மோடு இல்லை. முன்னர் சிறு குழந்தையாக இருந்தவர் இப்போது வாலிபராக தோற்றமளிக்கிறார். வாலிபராக தோற்றமளித்தவர் இப்போது வயோதிகராக தோற்றமளிக்கிறார். ஆக இப்படிப்பட்ட மாற்றங்களுக்கும், ஏற்ற இறக்கங்களுக்கும் உரிய வித்தியாசத்தை தனக்குள் கொண்டுள்ள எதுவாக இருந்தாலும் அது ஒருபோதும் பூர்விகமானதாக இருக்கவே முடியாது. ஏனெனில் பூர்வீகம் என்பது இப்படிப்பட்ட நிலைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. இனி ஏற்குமாயின் அப்போதே அது பூர்வீகம் என்னும் நிலையை விட்டும் நவீனம் என்னும் நிலைக்கு தாழ்ந்து விடும். ஆனால் இறைவன் எனப்படும் பரம்பொருளின் தன்மயமும், குணாதிசியங்களும் ஆதியில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே இப்போதும் எவ்வித மாற்றமும் இல்லாமல் கூடுதல் குறைவின்றி இருந்து

கொண்டுள்ளது. அதனுடைய இருப்பு என்பது மிக மிகத் தெளிவானதும் அசைக்கமுடியாத ஒன்றுமாகும்.

**பிரபஞ்சம் அழியும்**

நமது பார்வைக்கு தோற்றமளிக்கும் இப்பிரபஞ்சமும் இதிலுள்ளவைகளும் அழிந்து போகும். இதுபற்றி இறைவன் கூறுவதைப் பாருங்கள்.

كان شيئ هالك الا وجهه

'அனைத்தும் அழிந்து போகும். மகத்துவமிக்க உமது ரட்சிப்புக்குரிய (ரப்பின்) தோற்றம் மட்டுமே நிலைத்திருக்கும்.'

அடுத்து வானவர்கள் என்னும் மலக்குகள், சுவர்க்கம், நரகம் போன்றவை, எதில் சுகத்தையோ அல்லது துக்கத்தையோ நிரந்தரமாக மனிதர்கள் அனுபவிப்பார்கள் என்று எல்லா சமயங்களாலும் குறித்துக் காட்டப்பட்டுள்ளதோ அந்த சுவர்க்கமும் நரகமும் கூட மேற்காணும் இறை வாக்குப்படி அழிந்துதான் போகும். அது ஒருவினாடி நேரமாயினும் சரியே. அதன்பின் அவை மீண்டும் தோற்றுவிக்கப்பட்டு அவைகளுக்கு நிரந்தனமானதொரு வாழ்க்கையை தரவும் செய்யலாம். இது அப்பரம்பொருளுடைய கிருபையும், ஆற்றலுமாகும்.

**பிரபஞ்சம் சிருஷ்டி**

இப்பூவுலகை தோற்றுவித்த ஒன்று கண்டிப்பாக உள்ளது. அதுதான் இல்லாமை என்னும் நிலையிலிருந்த இவ்வுலகை உள்ளமை என்பதன் பக்கமாகக் கொண்டு வந்தது. காரணம் நவீனம் என்பதன் அர்த்தமே அது முன்னர் இல்லாதிருந்திருக்க வேண்டும். அதன்பின் அதை வெளிக் கொண்டு வரஒ ரு பூர்வீகமான தாத்து (தன்மயப் பொருள்) வேண்டும். அவ்வாறின்றி இவ்வுலகம் தானாகத் தோன்றியதென்று சொல்லப்பட்டால் அந்நிலையில் இவ்வுலகை நவீனமென்று சொல்ல முடியாது. மாறாக பூர்வீகமென்றுதான் சொல்ல வேண்டிவரும். ஆனால் இக்கருத்து அறிவுக்குப் பொருந்தாது. காரணம் எந்த ஒன்று இன்னொன்றால் தோற்றுவிக்கப்படுகிறதோ அதை பூர்வீகமென்று சொல்லமுடியாது. இதை குறித்து இறைவன் தனது வேதத்தில்...

انا لله وانا اليه راجعون

'திடனாக நாம் இறைவனுக்குரியவர்களே. மேலும் நிச்சயமாக அதனிடமே திரும்பிச் செல்லக் கூடியவர்களாக இருக்கிறோம்' எனக் கூறுகிறான்.

மேலும் எவ்வித சந்தேகத்திற்கும் அறவே இடமில்லாது இறைவன் என்னும் அப்பரம்பொருள் ஒன்றே என்பதும், சர்வ பிரபஞ்சத்தையும் தோற்றுவித்தது அந்த ஒன்றுக்கு மேற்பட்டதாக நிச்சயம் இருக்கவே முடியாது என்பதையும் நாம் நம்ப வேண்டும். ஏனெனில் ஒரு

சிருஷ்டியை தோற்றுவிக்கும் பரம்பொருள் என்பது ஒன்றுக்கு மேற்பட்டதாக இரண்டாகவோ, அல்லது இரண்டுக்கு மேற்பட்டதாகவோ இருக்குமாயின் படைப்புக்களின் பரிபாலனம் என்பது ஒரேசீராக நடக்க முடியாது. காரணம் இருவகையான கருத்துக்கள் தலைதூக்கும்போது முடிவில் அது மோதலில்தான் போய் முடியுமேயன்றி ஒன்று சேருதல் என்பதோ ஒருங்கிணைதல் என்பதோ அறவே சாத்தியமாகாது. இதுபற்றியும் இறைவன் தனது வேதத்தில்..

لوكان فيهما آلهة الا الله لفسدتا

'இறைவனல்லாத வேறொரு நாயன் இருக்குமாயின் இந்நேரம் வரை அவை இரண்டும் (ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு) அழிந்து போயிருக்கும்' என்பதாகக் கூறுகிறான்.

அடுத்து இறைவன் என்னும் அப்பரம்பொருள் வெறுமனே ஒரு சக்திப் பொருளாக மட்டும் இருந்தால் அதனால் படைப்புத் தொழிலை நடத்தவோ, படைக்கப்பட்டவைகளை ரட்சிக்கவோ முடியாது. அந்நிலையில் அந்த சக்திப் பொருள் எதில் வெளிப்பட்டாலும் அதை அழித்து சின்னாபின்னாப்படுத்தி விடும். இதைக் குறித்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

كل ذات احمق

'தாத்த(சக்திப் பொருள)hக மட்டுமே இருப்பவை அனைத்தும் அறிவற்றவைகளாகும்' எனக் கூறுகின்றனர்.

ஆதலால் பரம்பொருள் என்பது மகா சக்திப் பொருளாக இருக்கின்றதெனக் கூறப்பட்டாலும் அதனை முறையாக வெளிப்படுத்த அதற்கென பல்வேறு தன்மைகள் அதற்குத் தேவை. அந்தத் தன்மைகள் என்பவை இத்தனை தான் என்பதை நம்மால் வரையறுத்துக் கூற முடியாவிட்டாலும் அப்பரம்பொருளை அறிந்தோர் அதற்குரிய கோடிக்கணக்கான தன்மைகளிலிருந்து சில குறிப்பிட்ட தன்மைகளை மட்டும் நமக்கு சொல்லித் தருகின்றனர். அது...

'ஜீவன், அறிவு, நாட்டம், தத்துவம், பார்வை, கேள்வி, மொழிதல்' என்னும் இவ்வேழு தன்மைகளும் முதன்மையானவை எனக் கூறுகின்றனர்.

ஆதலால் இறைவன் என்னும் அப்பரம்பொருள் ஜீவனுள்ளதாக, அருள் பாலிப்பதாக, சக்தியுள்ளதாக, தான் செய்ய நினைப்பதை செய்து முடிக்கும் சுதந்திரநிலை கொண்ட ஆற்றலுக்குரியதாக இருக்கிறது.

மேலும் அது எதை செய்தாலும் சுதந்திரமாக தன்னுடைய விருப்பப் பிரகாரம் செய்கிறது. அதனுடைய செயலில் யாருடைய முட்டுக்கட்டையும் நிர்பந்தம் என்பதும் அறவே கிடையாது.

ஏனெனில் இம்மாபெரும் உலகை தோற்றுவித்து, இதில் பல்வேறு வகையான தன்மைகளை வெளிப்படுத்துதல் என்பது அப்பரம்பொருளுக்கேயன்றி வேறு எதற்குமே சாத்தியமில்லை. அதேநேரம் ஜீவனற்ற, அறிவில்லாத, சுதந்திரமாக செயல்பட முடியாத ஒன்றால் இப்படிப்பட்ட ஓர் உலகையோ, அதில் பல்வேறு வகையான தன்மைகளையோ ஏற்படுத்த முடியாது.

அதேநேரம் அப்பரம்பொருளுக்குள் காணப்படும் ஜீவனும், அறிவும், விருப்பமும், தத்துவமும், பார்த்தலும், கேட்டலும், மொழிதலும் அதனுடைய படைப்புக்களாகிய சிருஷ்டிப் பொருட்களிலும் இருப்பதை நாம் காணலாம். இது பரம்பொருளுக்குள் இருக்கும் அத்தன்மைகள் அதற்குள் பூரணமாக இருப்பதால் தான் அதனுடைய சிருஷ்டிப்பொருட்களாகிய படைப்புக்கள் அப்பண்புகளின் தாக்கத்தை தமக்குள்ளிருந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இல்லையேல் படைப்புக்களில் இத்தன்மைகளை நம்மால் பார்க்கவே முடியாது.

மேலும் இறைவன் என்னும் அப்பரம்பொருள் பார்க்கக் கூடியதாகவும், கேட்கக் கூடியதாகவும் இருப்பதால், இந்நிலையில் செவிடு, ஊமை, குருடு என்னும் தன்மைகள் மேற்காணும் தன்மைகளுக்கு நேர் எதிரானதால் இவ்வாறான குறைகளை பரம்பொருளுக்குரியதாக நாம் கொள்ளக் கூடாது. மேலும் இப்படிப்பட்ட குறைகளை விட்டெல்லாம் அது மகாத் தூய்மையானது.

அடுத்து அப்பரம்பொருளுக்குரிய தன்மைகளை மனித அறிவோ, அல்லது மனித உணர்வுகளோ பெற்றுக் கொள்ளுதல் என்பதும் அறவே சாத்தியமில்லை. அதேநேரம் அப்பரம்பொருள் அத்தன்மைகளை தனது அடையாளமாக மனிதனில் அமைத்துள்ளதென்று சொல்லலாம். எனவே மனிதனில் வெளியீடாகும் பரம்பொருளின் பண்புகளுக்குரிய தாக்கத்தை கொண்டு மனிதர்கள் அப்பரம்பொருளை தெரிந்து கொள்ள முயலுகின்றனர். இருப்பினும் மனிதப்பண்புகள் இறைப்பண்புகளுக்கு உவமையாகாது. அத்துடன் இறைபண்புகள் அப்பரம்பொருளுக்குரிய தாத்(தன்மயத்)தை போன்றே பூர்வீகமானதும், சுயமானதும், தன்னில் தானே நிலைத்திருப்பதுமாகும். அத்துடன் அந்த தாத்(தன்மயத்)தோடு எந்தவொரு நவீனமும் இணையவோ, சேரவோ முடியாது. காரணம் அதனுடைய பூரணத்துவம் என்பது ஆதியானதாகும். அதேநேரம் நவீனம் என்பது தன்னை வெளிப்படுத்த ஒரு ஸ்தானத்தை தேடுமாகையால் மனிதன் கண்களை கெகாண்டு காண்பதை போல, செவியைக் கொண்டு கேட்பதைப் போல, நாவை கொண்டு பேசுவதைப்போல அப்பரம்பொருள் தனது தன்மைகளான குணங்களை வெளிப்படுத்த அதற்கு எந்தவொரு ஸ்தானமும் தேவைப்படாது. கண்களின்றியே காணவும், செவியின்றியே கேட்கவும், நாவின்றியே பேசவும் செய்கிறது.

ஆதலால் இவ்வையகம் முழுவதும் இறை பண்புகளின் தாக்கங்களை கொண்டே நிலைபெற்றுள்ளன. இதில் அப்பரம்பொருள் இவ்கையத்திற்குரிய பண்புகளனைத்தையும் கடந்து மிகத் தூய்மையாக இருக்கிறது. இவ்வாறே அதை காலமானது தனக்குள் வரித்துக் கொள்ள முடியாதாகையால் அது காலமாகவும் இல்லை என்பதோடு அதனுடைய தோற்றத்தை காலம் தனக்குள் கொள்ளவும் முடியாது.

ஏனெனில் காலமென்ற ஒன்று இல்லாதிருந்த போதும் அது இருந்தது. இப்போதும் இருக்கிறது. இனி காலம் அழிந்து போன பின்னரும் அது இருக்கும். ஆதலால் அது காலத்திற்குள்ளும் இல்லை. காலமாகவும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறே அப்பரம்பொருள் தன்னல்லாத தனக்கு அன்னியமான ஒன்றோடு இணைந்து அது ஒன்றென்பதாகவும் இல்லை. இதேபோல அது இன்னொன்றில் வந்து நுழைந்தோ அல்லது கலந்தோ இருக்கவும் இல்லை. ஏனெனில் இரண்டு என்னும் எண்ணிக்கை ஒரு போதும் ஒன்று என்பதாக ஆக முடியாது. பின்னும் ஒன்று மற்றொன்றுடன் கலத்தல் என்பதும், நுழைதல் என்பதும் சரீரங்களுக்குரிய பண்புகளாதலால் இந்நிலையில் பரம்பொருளுக்கு சரீரமென்று எதுவுமில்லை. சரீரங்களை விட்டெல்லாம் அது தூய்மையானது. அத்துடன் அது தனது பண்புகளை கொண்டு பரிபூரணமாக இருக்கிறது. இதுபோன்றே குறைதல் என்பதும் கூடுதல் என்பதும் மறைதல் என்பதும் அதனுடைய பண்புகளுக்கு மாற்றமான ஒன்றாகும்.

**கனவில் இறை தரிசனை**

கனவில் இறைவனாகிய பரம்பொருளை காண்பது குறித்து பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. எனினும் உண்மை நிலை என்னவெனில், கனவில் இறைதரிசனை என்பது சாத்தியமான ஒன்றுதான். இதைப்பற்றி இஸ்லாமிய முன்னோடிகளிடமிருந்து பற்பல சம்பவங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் என்பார், 'நான் இறைவனை கனவில் கண்டு, இறைவா! வணக்கங்களிலெல்லாம் மிகச் சிறந்த வணக்கம் எது? அது போன்றே உன்னை வெகுசீக்கிரம் நெருங்கிச் சமீபிக்கும் பாதை எது? எனக் கேட்க, அதற்கிறைவன், குர்ஆன் என்னும் வேதத்தை ஓதி வருவதாகும் எனக் கூறினான்' என்பதாக கூறுகிறார்.

இவ்வாறே இஸ்லாமிய சட்டக்கலை மேதைகளில் ஒருவரான இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் என்பார், 'நான் நூறு முறை இறைவனை கனவில் கண்டேன்' என்று கூறுகிறார்.

இதுபோன்றே இப்னு ஸிரீன் என்பார், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தை அடுத்து வந்தவர்களுக்கெல்லாம் தலைவராகவும் கனவுகளுக்கு விளக்கம் சொல்பவராகவும் இருந்தவர். இவர், 'எவரேனும் இறைவனை கனவில் கண்டேனென்று சொல்வாராயின், அவர் சுவர்;க்கத்தில் ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்வதோடு, துன்பம், கவலை போன்றவற்றிலிருந்தும் விடுதலை பெறுவார்' என்று கூறுகிறார்.

இதில் இறைவனை கனவில் காணுதல் என்பது மனக்கண்ணை கொண்டுதான் காணப்படுமேயன்றி முகக் கண்ணை கொண்டல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இனி யாராவது இறைவனை தமது முகக் கண்ணால் கண்டேனெனகூறுவாராயின், அவர் இறைவனுக்குரிய ஒரு மாதிரியை கண்டாரென்று வேண்டுமானால் சொல்லலாம். அதேநேரம் இறைவனுக்கு உவமை என்பது கிடையாது.

இது எதைப் போல எனில், அறிவை சூரியனுக்கு உவமைபடுத்திப் பேசுவதுண்டு. அதேநேரம் அறிவின் தன்மைகளை சூரியனென்று சொல்ல முடியாது. இதுபோன்றே சூரியனையும் அறிவுக்கு உவமைபடுத்துவதுண்டு. ஆனால் சூரியன் என்பது அறிவல்ல.

பிறகு எதற்காக சூரியனை அறிவுக்கும், அறிவை சூரியனுக்கும் உவமைபடுத்தப்பட்டது எனில், பார்க்கப்படும் பொருட்களனைத்தையும் சூரியனுடைய ஒளியைக் கொண்டு பார்க்கப்படுகிறதல்லவா! இவ்வாறே அறிவின் வெளிச்சத்தை கொண்டு அறிவார்த்தமான விசயங்கள் பார்க்கப்படுவதால் இப்படிப்பட்ட உவமைகள் பேசப்படுகின்றன.

இவ்வாறே ஒரு அரசனை சூரியனோடும், மந்திரியை நிலவோடும் உவமைப்படுத்துவதுண்டு. இதனால்தான் எவரேனும் சூரியனை கனவில் கண்டால் அவர் அரசனை சந்திப்பார் என்றும், நிலவை கனவில் கண்டால் அவர் மந்திரியை சந்திப்பார் என்றும் கனவுக்கு விளக்கம் தருவோர் கூறுகின்றனர்.

இப்போது நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விசயம் யாதெனில், பரம்பொருளை அதனுடைய படைப்புக்களோடு உவமைப்படுத்தலாம். ஆனால் எந்தப் பொருளை கொண்டு பரம்பொருள் உவமைப்படுத்தப்படுகிறதோ அந்தப் பொருளை போன்றோ அல்லது அந்தப் பொருளாகவோ பரம்பொருள் இல்லை என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இதுபற்றி முஸ்லிம் வேதமாகிய குர்ஆன் தருகின்ற ஆதாரத்தைப் பாருங்கள்

مثل نوره كمشكوة فيها مصباح المصباح فى زجاجة

'இறைவனின் பேரொளிக்கு உவமையானது, ஒரு விளக்கை போலுள்ளது. அவ்விளக்கு ஒரு பளிங்குக்குள் இருக்கிறது. அப்பளிங்குக்குள் அப்பேரொளி இலங்கிக் கொண்டுள்ளது'

மேற்கண்ட வசனத்தில் இறைவனின் தாத்தாகிய தோற்றத்தை விளக்கு, திரி, பளிங்கு போன்ற பொருட்களை கொண்டு உவமைப்படுத்தப்படுகிறது. ஆனால் அப்பரம்பொருளின் தாத்த(தன்மயம)hனது இவையனைத்தையும் விட்டு பரிசுத்தமானதாகும். அடுத்து ஸைத்தூன் என்னும் மரமும் உவமைப்படுத்தப்படுகிறது. அதுவும் அதனுடைய தா(தன்மய)த்துக்கு நிகரல்ல. இத்தனைக்குப் பிறகும் அந்த விளக்குடைய ஒளியைக் கொண்டு அப்பரம்பொருளுக்கு தரப்பட்ட உவமையானது எதைப்போலவெனில், குர்ஆன், இறுக்கமாக்கப்பட்ட கயிறுக்கு உவமையாக்கப்படுவதை போல என்று சொல்லலாம். அதேநேரம் கயிறு குர்ஆனுக்கு நிகராகவே அல்லது குர்ஆனாகவோ ஆகாது.

இதேபோல நாம் கனவு காணுகிறோமே அந்த உலகத்தை உதாரணத்திற்குரிய உலகமெ(ஆலமுல் மிதாலெ)ன்று கூறப்படுகிறது. இப்படித்தான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தமது இறைவனை கண்டார்கள். இதுகுறித்து முழு விபரத்தையும் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் நூல்களில் பார்க்கலாம்.

இனி இப்பூமியில் இறைவனை ஒருவர் தமது முகக்கண்ணால் காண முடியுமா என்பது குறித்து இருவேறு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. இதைப் பற்றி இமாம் அபுல்காசிம் குஷைரி என்பார் தமது 'ரிஸாலத்துல் குஷைரிய்யா' என்னும் நூலில் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டு அறிவிக்கப்படும் அறிவிப்பில், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தவிர முகக் கண்ணைக் கொண்டு தெளிந்த நிலையில் எவராலும் இறைவனை பார்க்க முடியாது என்பதாக அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

மேலும் நபிமொழி வல்லுனர்கள், சட்டக்கலை மேதைகள், அறிஞர்கள், ஞானவான்கள் போன்ற யாருமே இதுவரை இறைவனை தங்களின் முகக் கண்ணால் கண்டதில்லை. இவ்வாறு எந்த ஞானியும் இதுவரை வாதித்ததுமில்லை. ஆனால் அறிவிலிகளான ஞானிகளில் சிலர், இறைவனை விழிப்புடைய நிலையில் முகக் கண்ணால் காண முடியுமென கூறித் திரிகின்றனர். ஆனால் உண்மையான ஞானிகள் இவர்களை பொய்யர்கள் எனக் கூறுவதோடு, இவர்கள் இறைவனை அறிதல் என்பது பற்றிய ஞானமற்றவர்களென்றும், இறைவனை பற்றி அறவே தெரிந்து கொள்ளாதவர்களென்றும் கூறுகின்றனர்.

இதுபோன்றே 'தப்ஸீர் கஷ்ஷாபி' என்னும் நூலில், இவ்வாறு வாதிப்பவரும் அதை நம்புகிறவரும் இறை நம்பிக்கையாளரல்ல எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறின்றி வாதிப்பவரும் நம்புகிறவரும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விழிப்புடைய நிலையில் தமது முகக் கண்ணால் இறைவனை கண்டார்களென்று கூறுவாராயின் அவருடைய நம்பிக்கை சரியானதென்று சொல்லப்படும்.

அரூபிலி என்பார் தமது பிரபலமான (ஷாபி மத்ஹபின்) சட்ட நூலான 'கிதாபுல் அன்வார்' என்னும் நூலில், யாராவது இறைவனை இப்பூமியில் தமது முகக் கண்ணால் கண்டேனென சொல்வாராயின், நான் அவரது முகத்திற்கு நேராகவே அவரை இறை மறுப்பாளரெனக் கூற கொஞ்சமும் தயங்கமாட்டேன் எனக் கூறுகின்றனர்.

**சிருஷ்டிகளின் சிருஷ்டிகர்த்தா**

சிருஷ்டிகள் அனைத்தையும் தோற்றுவித்தது பரம்பொருளாகிய இறைவனாகும். வானம், பூமி மற்றும் அவை இரண்டுக்கும் மத்தியில் எத்தனை சிருஷ்டிகள் உள்ளனவோ அவையனைத்தின் தா(தோற்ற)த்தையும், அவைகளின் செயல்பாடுகளையும் தோற்றுவித்தது இறைவனென்னும் அப்பரம்பொருளேயாகும். இதுபோன்றே அப்பரம்பொருளுடைய தத்துவத்தின் மீதே சிருஷ்டிகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சிருஷ்டிகள் மீது ஏவப்படும் கட்டளைகள் பற்றிய அறிவு முழுவதும் அப்பரம்பொருளை கொண்டு முன்பே தீர்மானிக்கப்பட்டு விட்டது. இன்னும் ஒவ்வொரு சிருஷ்டியைப் பற்றிய விதியும் அவைகள் படைக்கப்படுவதற்கு முன்பே தீர்மானிக்கப்பட்டு விட்டது. இன்னும் ஒவ்வொரு சிருஷ்டிகளைப் பற்றிய விதியும் அவைகள் படைக்கப்படுவதற்கு முன்பே அப்பரம்பொருளை கொண்டு தீர்மானிக்கப்பட்டு விட்டது. நன்மை,

தீமை, லாபம், நஷ்டம், அழகு, அழகின்மை போன்றவை அனைத்தும் அதனுடைய நாட்டத்தின் மீதும் தத்துவத்தின் மீதும் முன்பே வரையறுக்கப்பட்டு விட்டன.

**அனைத்தையும் அறிவது பரம்பொருளே**

இறைவனென்னும் பரம்பொருள் எல்லா ஜீவராசிகளுடையவும் சக்ரவர்த்தி. எல்லாமே அதனுடைய அறிவுக்குள் இருக்கிறது. அது ஒரு அணுவாக இருந்தாலும் சரியே. அதுவே அனைத்தையும் தனது அறிவைக் கொண்டு அறிந்துள்ளது. எந்தவொரு சிருஷ்டிக்கும் அது சந்தோஷத்தையோ அல்லது துக்கத்தையோ, தண்டனையையோ அல்லது வெகுமதியையோ தரவேண்டும் என்பது அதன்மீது கட்டாயமல்ல. அது எதை விரும்புகிறதோ அதை செய்கிறது. அதன் மீது யாரும் அதிகாரம் செலுத்த முடியாது. வணக்கம் புரிவோர் அதனுடைய பேரருளை கொண்டு நன்மையை பெறுகின்றனர். இவ்வாறே பாவம் செய்வோர் அதனுடைய நீதத்தை கொண்டு தண்டனையை அடைகின்றனர். அது சகல நிலைகளிலும் தனது கோபம், கிருபை, நீதம், சாய்கை போன்றவற்றை கொண்டு புகழப்பட்டதாக இருக்கிறது. எந்த மனிதனும் அதனிடம் தனது உரிமையை கோரமுடியாது. மாறாக அதுதான் வழிப்படுவோருக்கு நன்மையை தருவதாகவும், மீறுவோருக்கு தண்டனையை கொடுப்பதாகவும் கூறியுள்ளது. ஒவ்வொரு காரியமும் அதனுடைய கட்டளையை கொண்டே முறையாக நடைபெறுகிறது. அதேநேரம் ஒரு காரியத்தின் முறையை அது மாற்றுமாயின் இவ்வாறு ஏன் செய்தாய் என அதை யாராலும் கேட்க முடியாது.

அது செய்யும் எந்தவொரு காரியத்திலும் அதற்கு எந்தத் தேவையுமில்லை. இனி தேவையுடைய ஒவ்வொருவரும் அதனிடமே தேவையாகின்றனர். அதேநேரம் அதனுடைய ஒவ்வொரு காரியத்திலும் பல நுணுக்கங்கள் மறைந்துள்ளன. மனித அறிவால் அவைகளை விளங்கிக் கொள்ள முடியாது. அதன்றி அதனுடைய நுணுக்கத்தை கொண்டு ஏற்படும் பிரயோஜனங்கள் அனைத்தும் அதனுடைய படைப்புகளுக்கே உரியதாகும். காரணம் அந்தப் பிரயோஜனங்களை கொண்டு அதற்கு எந்தத் தேவையுமில்லை. இவ்வாறே படைப்புக்கள் படைக்கப்படுவதும் அழிந்து போவதும், அவைகள்; பலன் பெறுவதும் நஷ்டமடைவதும் அதை பொறுத்தவரை அதற்கு எல்;லாமே ஒன்றுதான். அது விரும்பியதை தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு செய்கிறது.

**பரம்பொருளே கட்டளையிடக் கூடியது**

அதை தவிர ஆணையிடுபவர் வேறு யாரும் இல்லை. அதனுடைய கட்டளைதான் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். நன்மை, தீமையில் வெகுமதியும் தண்டனையும் அதனுடைய கட்டளையை கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. இந்நிலையில் நன்மை என்பது, அது எதை செய்யலாம் எனக் கட்டளையிட்டுள்ளதோ அதுவாகும். இவ்வாறே தீமை என்பது, அது எதை செய்யக் கூடாது எனத் தடுத்துள்ளதோ அதுவாகும். செயல்பாடுகளில் நன்மை என்பதும், தீமை என்பதும் ஷாரிவு ((முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களு)டைய ஏவல் மற்றும் விலக்கலை கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. இங்கே அறிவு என்பதெல்லாம் காரியத்திற்கு உதவாது.

இதுபோன்றே மலைகளிலும், பொதும்புகளிலும், காடுகளிலும், தீவுகளிலும் வாழுவோர் நகரத்திலுள்ளோரை சந்தித்து அவர்கள் மறுமை நாளில் தண்டனைக்குரியவர்களாக மாட்டார்கள். ஆனால் சில ஞானவான்களின் பார்வையில் இப்படிப்பட்ட குறைந்தபட்சம் இப்பிரபஞ்சத்தை தோற்றுவித்த ஒன்றுள்ளது என்பதையும், அது தனது எல்லாவகையான பண்புகளை கொண்டும் பூரணமாக உள்ளது என்பதையும் இப்பூமியில் நிகழ்ந்து கொண்டுள்ள மாற்றங்களையும் வேறுபாடுகளையும் தமது அறிவைக் கொண்டு அறிந்து கொள்ளத்தான் செய்கின்றனராதலால் அவர்களுக்குள் ஏகத்துவம் பற்றிய நம்பிக்கையாவது குறைந்தபட்சம் இருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் எனக் கூறுகின்றனர். இதுபற்றி இறைவன் தனது வேதத்தில்,...

وماكنا معذبين حتي نبعث رسولا

'எதுவரை அவர்களிடம் ஒரு ரஸூலை (இறைத் தூதரை) அனுப்ப மாட்டோமோ, அதுவரை அவர்களை நாம் வேதனை செய்ய மாட்டோம்' எனக் கூறுகிறான்.

இனி ஒரு இறைத்தூதர் ஒருவரிடம் வருகை தந்து அவரிடம் அப்பரம்பொருளை குறித்த அழைப்பை கொடுக்க, அதை அவர் ஏற்க மறுப்பாராயின், அந்நிலையில் அவர் தண்டனைக்குரியவராக கருதப்படுவார். அடுத்து மேற்கண்ட திருமறை வசனத்தில் குறித்துக் காட்டப்படும் இறைதூதர் எனப்படுபவர் மனித அறிவுதான் என்பதாக சிலர் கூறுகின்றனர். இது ஆதாரமற்றதும் அர்த்தமற்ற ஒன்றுமாகும்.

**நன்மை தீமை என்பது என்ன?**

எந்தச் செயலை ஷாரி஀ (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) நன்மையென்று கூறினாரோ அந்தச் செயல் தான் நல்லதாகும். இதுபோன்றே எந்தச் செயலை ஷாரி஀ (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) தடுத்தார்களோ அந்தச் செயல்தான் தீமையாகும். அதேநேரம் ஒரு செயல் அதனுடைய எதார்த்தத்திற்குரிய நிலையை வைத்து பார்க்கப்படுமாயின் அது நல்லதுமல்ல கெட்டதுமல்ல.ஏனெனில் நன்மை என்பதும், தீமை என்பதும் மறுமை நாளன்றுதான் தீர்மானிக்கப்படும். அதேநேரம் ஒரு செயலை நன்மை என்றோ அல்லது தீமையென்றோ தீர்மானிப்பது அறிவை பொறுத்துள்ள நிலையாகும்.

**வானவர் (மலக்கு)**

மலக்குகள் எனப்படும் இவைகள் நினைத்த உருவத்தை எடுக்கும் ஆற்றலுள்ளவைகள். இவைகளது தேகம்தான் இவைகளுக்கு ஆடையாகவும் பயன்படுகிறது. இவைகளில் ஆண்,பெண் என்னும் இனபேதமெல்லாம் கிடையாது. இவ்வாறே இவைகளுக்கு மனைவி,

மக்கள், குடும்பம் என்னும் எந்தப் பந்தமுமில்லை. வானம், பூமி போன்ற எல்லா உலகங்களுக்கும் இவைகள் தான் முவக்கல(பாதுகாவர்களா)hக இருக்கின்றன.

ஒவ்வொரு மனிதன் மீதும் பல்வேறு மலக்குகள் நியமிக்கபட்டுள்ளன. இவைகளில் சில மனிதர்களது செயல்பாடுகளை குறிக்கவும், வேறுசில ஷைத்தான், விஷ ஜந்துக்கள், உயிர் கொல்லி விலங்குகள் போன்றவைகளிடமிருந்து மனிதர்களை பாதுகாக்கவும் நியமிக்கப்பட்டுள்ளன.

வானம், பூமி போன்ற எல்லா இடங்களிலும் இவைகள் இல்லாத இடமேயில்லையென்று சொல்லலாம். இவைகளை குறித்து நபிமொழியில் 'சிருஷ்டிப் பொருட்கள் அனைத்தையும் பத்து பங்காக ஆக்கப்பட்டால் அதில் ஒன்பது பங்குகள் மலக்குகளாகத்தான் இருக்கின்றன' எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் இவைகளுக்கு புஜங்களும், இறக்கைகளும் இரண்டிடண்டாக,. மும்மூன்றாக, நன்நான்காக உண்டு. முஸ்லிம் வேதமான குர்ஆனில் இவைகளின் புஜங்களை (தத்துவங்கள்) பற்றி குறிப்பாகப்பேசப்பட்டுள்ளது.

ஆதலால் மேற்கண்ட மலக்குகள் சம்பந்தமான எல்லா விஷயங்களின் மீதும் ஒரு விசுவாசி நம்பிக்கை கொள்வது கடமையா(வாஜிபா)கும். இதுபோன்றே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மலக்குகளை குறித்து நமக்கு சொல்லித் தரும்போது,...

خلقت الملئكة من نور وخلق الجان من نار وخلق آدم مما وصف لكم

'மலக்குகள் ஒளியைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே ஜின்கள் என்னும் பூதகணங்கள் புகையுள்ள நெருப்பின் பிரகாசத்தை கொண்டு படைக்கப்பட்டுள்ளன. மேலும் மனிதனை அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பொருளை கொண்டு, அதாவது கறுப்பும், வெள்ளை நிறமும் கலந்த மண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளனர்' இந்த நபிமொழி அபீஸயீத் ரலியல்லாஹு அன்ஹு என்பாரை கொண்டு அபீதர் ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் வாயிலாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர். நூல்: அஹ்மத், முஸ்லிம்

ياجابران الله تعالى قد خلق قبل الاشياء نور نبيك من نوره (الى قوله) فلما اراد الله ان يخلق الخلق قسم ذالك النور اربعة اجزاء فخلق من الجزء الاول القلم ومن الثاني اللوح ومن الثالث العرش ثم قسم الرابع اربعة اجزاء فخلق من الاول حملة العرش ومن الثاني الكرسي ومن الثالث باقي الملئكة

'அடுத்து அப்துர் ரஸ்ஸாக் என்பார், ஜாபிர் பின் அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

நவின்றதாக அறிவிக்கின்றனர். ஜாபிரே! திடனாக இறைவன் சகல ஜீவராசிகளையும் படைக்கும் முன் உமது நபியின் நூரை (பேரொளியை) தனது நூரி(பேரொளியி)ல் நின்றும் படைத்தான். பின்னர் உலகங்களை அவன் படைக்க நாடியபோது அந்த நூரை (பேரொளியை) நான்கு பங்காக ஆக்கினான். அதில் முதல் பங்கிலிருந்து கலமை (எழுது கோலை)யும், இரண்டாவது பங்கிலிருந்து லௌஹை(விதியை குறிக்கும் பட்டோலையை)யும், மூன்றாவது பங்கிலிருந்து அர்ஷை(தெய்வாசன பீடத்தை)யும், படைத்து பின்னர் நான்காவது பங்கை மறுபடியும் நான்கு பங்குகளாக்கி, அதில் முதலாவது பங்கிலிருந்து அர்ஷ் என்னும் தெய்வாசன பீடத்தை சுமக்கும் மலக்குகளையும், இரண்டாவது பங்கிலிருந்து குர்ஸியையும், மூன்றாவது பங்கிலிருந்து மீதமுள்ள மலக்குகளையும் படைத்தான்'.

التقدم من نور ضيائك ناقل: قد قال الاشعري انه تعالى نور ليس كالانوار والروح النبوية المقدسة لمعة من نوره والملئكة

شرر تلك الانوار وقال صلى الله عليه وسلم اول ما خلق الله نوري ومن نوري خلق كل شيئ

'அஷ்அரி ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகிறார்: இறைவன் ஒளியாக இருக்கிறான். ஆனால் பிரகாசம் அதற்கு உவமையாகாது. இதுபோலவே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆன்மா அவனது ஒளியின் பிரகாசமாகும். இதில் மலக்குகள் நபியவர்களின் பிரகாசத்திற்குரிய நிழலாகும்.'

'அடுத்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இறைவன் முதன் முதல் எனது பேரொளியைப் படைத்தான். அதன்பின் எனது பேரொளியைக் கொண்டே சிருஷ்டிகளனைத்தையும் படைத்தானெனக் கூறுகின்றனர்'

خلقت الملئكة من نور العزة

'அபுஷ்ஷைகு என்பார் இக்ரிமா ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அறிவிக்கின்றனர். மலக்குகள் கண்ணியத்திற்குரிய இறைவனுடைய ஒளியைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன.'

ان الملئكة خلقت من نور الله

யஸீத் பின் ரூமான் என்பார் அறிவிக்கிறார்: 'மலக்குகள் இறைவனுடைய ஆன்மாவை (நூரைக்) கொண்டு படைக்கப்பட்டுள்ளன.'இதைக் குறித்து ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் சொல்லும்போது...

يسبح الله تعالى بتلك اللغات كلها يخلق من كل تسبيحة ملك يطير مع الملئكة الى يوم القيامة

'ஆன்மா என்பது ஒரு மலக்காகும். அதற்கு 70000 தலைகளும், ஒவ்வொரு தலையிலும் 70000 நாவுகளும், ஒவ்வொரு நாவிலும் 70000 மொழிகளும், ஒவ்வொரு மொழியிலும் 70000 இலக்கணங்களும் அமைந்திருக்கும். அந்த மலக்கு எல்லா இலக்கணங்களைக் கொண்டும் 168070 இடங்களில் பரவி நின்று இறைவனை போற்றிப் புகழுகிறது. அதனுடைய ஒவ்வொரு புகழிலிருந்தும் ஒரு மலக்கு படைக்கப்படுகிறது. இவ்வாறு அந்த புகழைக் கொண்டு படைக்கப்படும் அம்மலக்குகள் மறுமைநாள் வரை மலக்குகளுடனேயே சுற்றிக் கொண்டிருக்கும் என்பதாகக் கூறுகின்றனர்'

يسبح كل يوم اثني عشر الف تسبيحة يخلق من كل تسبيحة ملك. ان في السماء الدنيا وهي من ماء ودخان ملئكة خلقوا

من ماء و ريح عليهم ملك يقال له الرعد وهو ملك مؤكل بالسحاب والمطر

ஸஃலபி ரஹிமஹுல்லாஹ் என்பார், ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அறிவிப்பதாவது: 'ஆன்மாவானது வானம், பூமி மற்றும் மலைகளிலுள்ள மலக்குகளை விட மிகவுயர்ந்த ஓர் மலக்காகும். அந்த மலக்கின் எல்லை நான்காவது வானமாகும். அது தினந்தோறும் 12000 முறை இறைவனை புகழுகிறது. அதனுடைய ஒவ்வொரு புகழிலிருந்தும் ஒரு மலக்கு தோன்றுகிறது. ஆன்மாவைக் கொண்டு படைக்கப்பட்ட இம்மலக்குகள் இறுதி நாளன்று தனி அணியிலும், மற்ற மலக்குகள் வேறு அணியிலும் நிற்கும். இவ்வாறே வானம் பூமியாகிய இரண்டும் தண்ணீரைக் கொண்டும், புகையைக் கொண்டும் படைக்கப்பட்டுள்ளன. இதற்குரிய மலக்குகளும் மேற்கண்ட பொருட்களை கொண்டே படைக்கப்பட்டுள்ளன. இவைகளுடைய கூட்டத்திலுள்ள தலைவர்களில் ஒன்றுக்குப் பெயர் 'ரஃத்' என்பதாகும். இவைகள் நீர் மற்றும் புகையின் அதிகாரிகளாக இருக்கிறார்கள்.ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் என்பார், 'இறைவன் தன்னிலிருந்து ஒரு ஒளியை வெளியாக்கினான். அதன்பின் இருளை படைத்து அந்த ஒளியின் இறகை அந்த இருளுக்குள் போட, அதிலிருந்து அர்ஷ் என்னும் தெய்வாசனபீடம் வெளிப்பட்டது. அதன்பின் அந்த இருள் கலந்த ஒளி விடியற்காலை போல தோற்றமளித்தது. அதிலிருந்து அர்ஷை சுற்றியுள்ள மலக்குகளை படைத்தான். பின்னர் குர்ஸியைப் படைத்தான். அதன்பின் அதிலிருந்து அவனது பழக்கவழக்கங்களைக் கொண்ட மலக்குகளைப் படைத்தான்' எனக் கூறுகின்றனர்.

ان في الجنة لنهرا ما يدخله جبريل دخل فيخرج فينتقض الا خلق الله من كل قطرة تقطر منه ملكا

இதுபோன்றே ஹழ்ரத் அபூஸயீத் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர். 'சுவர்க்கத்தில் நதியொன்று இருக்கிறது. அதில் ஜிப்ரீல் என்னும் ஒரு மலக்கு மூழ்கி எழுந்து தமது இறக்கையை உதறுகிறது. எத்தனை நீர்த்துளிகள் அந்த இறக்கையிலிருந்து விழுகிறதோ அந்த ஒவ்வொரு துளியிலிருந்தும் ஒரு மலக்கை இறைவன் படைக்கிறான். இந்நிலையில் ஜிப்ரீல்

என்னும் அந்த மலக்குக்கு மொத்தம் 600 இறக்கைகள் உள்ளன. அதில் ஒரு இறக்கையை அது விரித்தாலே வான மண்டலம் முழுவதும் அந்த இறக்கைக்குள் மறைந்து போய்விடும்.'

في السماء الرابعة نهر يقال له الحيوان يدخله جبريل كل يوم فينغمس فيه الغماسة منه يخرج فينتفض انتفاضة فيخرج عنه

سبعون الف قطرة يخلق الله من كل قطرة ملكاهم الذين يؤمرون ان يأتو البيت المعمور فيصلوا فيفعلون ثم يخرجون فلا

يعودون اليه ابدا ويتلي عليهم احدهم ثن يؤمران يقف بهم فى السماء موقفا يسبحون الله الى ان يقوم الساعة

இப்னு அபீ ஹாத்தம் என்பார், ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர். 'நான்காம் வானத்தில் நதியொன்று உண்டு. அதனை 'நஹ்ரே ஹயாத்' எனக் கூறப்படுகிறது. அந்த நதியில் தினந்தோறும் ஜிப்ரீல் மூழ்கி எழுந்து தனது இறக்கைகளை உதறுகிறது. அதிலிருந்து 70000 நீர்த்துளிகள் சிந்துகின்றன. அதனுடைய ஒவ்வொரு துளியிலிருந்தும் இறைவன் ஒரு மலக்கை படைத்து அதை பைத்துல் மஃமூர் என்னும் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுமாறு கட்டளையிடுகிறான். அங்கே சென்று தொழுது விட்டு வெளியேவரும் அது பிறகு மீண்டும் எப்போதுமே அங்கே செல்வதில்லை. அதன்பின் அம்மலக்குகளில் ஒன்று அவைகளுக்கு தலைவராக்கப்பட்டு அவைகளனைத்தும் குறிப்பிட்ட ஓரிடத்தில் நின்று இறுதிநாள் வரை இறைவனை புகழ்ந்து கொண்டிருக்குமாறு கட்டளையிடப்படுகின்றன'

ان عن يمين العرش نهرا من نور مثل السموات السبع والارضين السبع والبحار السبع يدخل فيه جبريل عليه السلام كل

سحر ويفتسل فيه فيزداد نورا الى نوره وجمالا الى جماله ثم ينتقض فيخلق الله تعالى من كل نقطة تقغ من ريشه كذا كذا

الف ملك يدخل منهم البيت السبعون الفا ثم لا يعودون اليه الى ان تقوم الساعة

இமாம் ழஹ்ஹாக் ரஹிமஹுல்லாஹ் என்பார், ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டு அறிவிக்கிறார்: 'அர்ஷின் வலதுபக்கம் ஒளியாலான நதியொன்று ஏழுவானம், ஏழு பூமி, ஏழு கடலின் அளவுக்கு உள்ளது. அதில் ஜிப்ரீல் சென்று குளிக்கிறது. அதைக் கொண்டு அதற்கு ஒளிக்குமேல் ஒளியும், அழகுக்குமேல் அழகும் கூடுகிறது. அதன்பின் அது தனது இறக்கைகளை உறுகிறது.அதிலிருந்து நீர்த்துளிகள் சிந்துகின்றன. சிந்துகின்ற ஒவ்வொரு நீர் துளியிலிருந்தும் ஆயிரக்கணக்கான மலக்குகளை இறைவன் படைக்கிறான். அதன்பின் அவைகளில் 70000 மலக்குகள் பைத்துல் மஃமூர் என்னும் பள்ளிவாசலுக்குச் செல்கின்றன. அதைவிட்டும் வெளியேவரும் அவைகள் மீண்டும் அங்கே திரும்பிச் செல்வதில்லை.'

அபூநயீம், இப்னு அஸாகிர்,பைஹகி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் அலிபின் அர்தாத் ரலியல்லாஹு அன்ஹு என்பார் மூலம் நபித்தோழர்களை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக கூறுகின்றனர்.

ان الله الملئكة ترعد فرائقهم من مخافته ما منهم من ملك يقطر من عينه دمعة الا وقعت ملكا قائما يسبح الحديث

'சில மலக்குகள் இருக்கின்றன. இறைவன் மீதுள்ள அச்சத்தால் அவைகளுடைய ஒவ்வொரு அவயமும் நடுங்கிக் கொண்டுள்ளன. அவைகளில் எந்த மலக்குகளுடைய கண்ணிலிருந்து கண்ணீர் துளி விடுகிறதோ அது விழும்போதே ஒர மலக்காக ஆகி விடுகிறது. பின்னர் அது எழுந்துநின்று இறைவனை புகழ்கிறது'.

அபூஷைகு ரஹிமஹுல்லாஹ் என்பார், கஃபுல் அஹ்பார் ரஹிமஹுல்லாஹ் என்பாரைக் கொண்டு அறிவிப்பதாவது...

لا تقذر عين ملك منهم الا كانت ملكا يطير من خشية الله

'அந்த மலக்குகளின் கண்களிலிருந்து விழும் கண்ணீர் துளிகள் ஒவ்வொன்றும் ஒரு மலக்காக உருப்பெற்று அதுவும் இறைவன் மீதுள்ள அச்சத்தால் பறந்து விடுகிறது' எனக் கூறுகின்றனர்.

இப்னு பஷ்குவால் ரஹிமஹுல்லாஹ் என்பார், ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்....

من صلى علي تعظيما لحقي خلق الله عزوجل من ذالك القول ملكا له جناح بالمشرق و آخر بالمغرب يقول عزوجل له صل على

عبدي كما صلى على نبي فهو يصلى عليه الى يوم القيامة

'எவரேனும் என்னை கண்ணியப்படுத்தும் பொருட்டு என்மீது ஸலவாத்துச் சொல்வாரேயாயின் இறைவன் அந்த ஸலவாத்தை கொண்டு ஒரு மலக்கை படைக்கிறான். அதனுடைய ஒரு இறக்கை கிழக்கிலும் மற்றொன்று மேற்கிலுமாக விரிந்திருக்கும். இறைவன் அதை நோக்கி, எனதுநேசரின் மீது ஸலவாத்துச் சொன்னவர் மீது நீ ஸலவாத்துச் சொல் எனக் கட்டளையிடுகிறான். அதுவும் நபியவர்களின் மீது ஸலவாத்துச் சொன்னவர் மீது இறுதிநாள் வரை ஸலவாத்துச் சொல்லிக் கொண்டிருக்கும்'

இமாம் ஸகாவி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது 'முஸ்ததாபுல் கலாம்' என்னும் நூலில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஒரு நபிமொழியை குறிப்பிடுகின்றனர். அதாவது, 'ஒரு மலக்கு இருக்கிறது. அதனுடைய ஒரு புஜம் கிழக்கிலும், மற்றொரு புஜம் மேற்கிலுமாக விரிந்திருக்கும். எவரேனும் என்மீதுள்ள நேசத்தால் ஸலவாத்துச் சொல்வாராயின் உடனே அந்த மலக்கு நீரில் மூழ்கி எழுந்து தனது இறக்கையை

உதறுகிறது. அதிலிருந்து விழும் ஒவ்வொரு துளியிலிருந்தும் ஒரு மலக்கை இறைவன் படைக்கிறான்.அந்த மலக்கு சலவாத்துச் சொன்ன அந்த மனிதருக்காக இறுதிநாள்வரை பாவமன்னிப்பு தேடிக் கொண்டிருக்கும்'

ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு என்பார்...

'நல்ல வார்த்தைகளும், நல்ல காரியங்களும் மலக்குகளாகி விண்ணை நோக்கி உயர்ந்து விடுகின்றன' என்று கூறுகின்றனர்.

இமாம் குர்துபி ரஹிமஹுல்லாஹ் என்பார் இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்டு அறிவிப்பதாவது...

اقرؤ الزهرادين البقرة وآل عمران فانهما يأتيان يوم القيامة كانهما غمامتنا او غايتان او كانهما فرقان من الطير صواف

يحاجان عن اصحابهما

'எவரேனும் குர்ஆனிலுள்ள சூறா பகரா மற்றும் சூறா ஆலஇம்ரான் என்னும் அத்தியாயத்தை ஓதினால் அதைக் கொண்டு இறைவன் மலக்குகளை படைக்கிறான். இறுதிநாளன்று அவைகள் அதை ஓதியவருக்காக இறைவனிடம் வாதாடும்'

இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷஃறானி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது 'மீஸானுல் குப்ரா' என்னும் நூலில்...

اقوي الملئكة واشهم حياء من كان مخلوقا من انفاس النساء

'மனிதர்கள் விடும் மூச்சைக் கொண்டு மலக்குகள் படைக்கப்படுகின்றன. இதில் மிகச் சக்திவாய்ந்த வெட்கமுள்ள மலக்குகள் பெண்களின் மூச்சுக் காற்றிலிருந்து படைக்கப்படுகின்றன எனக் கூறுகின்றனர்'

மேற்காணும் நபிமொழிகளை கொண்டு வானவர்கள் எனப்படுவோர் பல்வேறு வகையாக படைக்கப்படுகின்றனர் என்பதையும், ஒவ்வொரு நாளும் படைக்கப்படுகின்றனர் என்பதையும், அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர்களை படைப்பவனை அன்றி வேறுயாரும் அறியமாட்டார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் என்பார் மலக்குகளை பற்றி கூறும்போது, மலக்குகள் ஆன்மாக்களின் நிழல் என்றும், அவைகள் இல்லாதவரை பிரச்சனை இல்லை என்றும், இனி அவைகள் படைக்கப்பட்டு விட்டால் நிரந்தரமாக இருக்குமென்றும், காரணம் ஆன்மாவுக்கு மரணம் என்பது இல்லையாதலால் அதன் சாய்கையாக இருக்கும் மலக்குகளுக்கும் மரணம் என்பது கிடையாதெனக் கூறுகின்றனர்.

இவ்வாறே மலக்குகளுக்கு மனிதர்களுக்கு இருப்பதை போன்ற சரீரம் என்பதெல்லாம் கிடையாது. காரணம் அவைகள் ஒளியால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி இமாம் கஸ்ஸாலி என்பார் கூறும்போது, மலக்குகளுக்கு மரணம் என்பது ஏற்படக்கூடாது. ஏனெனில் ஆன்மா எப்போதும் இறப்பதில்லை. அதேநேரம் மரணம் என்பது தேகங்களுக்கு உரியதாகும். அதாவது ஆன்மா தேகத்தை விட்டு நீங்குவதற்குத் தான் மரணமென்று கூறப்படுகிறது. இனி மலக்குகளின் தேகமானது லத்தீ:ஃபான(திடமற்ற)தாகும். அது ஆன்மாவோடு தொடர்புடையதாகும். இதுதான் இஸ்லாத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நம்பிக்கையாகும் எனக் கூறுகின்றனர்.

அடுத்து குர்ஆனில் காணப்படும் வசனமொன்றைப் பாருங்கள்

كل نفس ذائقة الموت

'ஆன்மாக்கள் அனைத்தும் மரணத்தை சுகிக்கக் கூடியவைகளே'.

மேலும் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அறிவிக்கப்படுவதாவது: 'குல்லுமன் அலைஹா ஃபான்' (பூமியிலுள்ள அனைத்தும் அழியக்கூடியவைகளே') என்னும் வசனம் இறங்கியபோது மலக்குகள், நாம் பாதுகாக்கப்பட்டோம். பூமியிலுள்ளோர் இறந்தனரென்று கூறின. அதன்பின் 'ஆன்மாக்கள் அனைத்தும் மரணத்தை சுகிக்கக் கூடியவைகளே' என்னும் வசனம் இறங்கியபோது மலக்குகள், நாமும் இறந்தோமெனக் கூறின'

இப்னு ஜரீர் ரஹிமஹுல்லாஹ் என்பார், 'மலக்குல் மௌத் என்பது (உயிரை கைப்பற்றக் கூடியது) முஸ்லிம்கள் மற்றும் மலக்குகளின் ஆன்மாவை கைப்பற்றுவதற்காக படைக்கப்பட்டுள்ளது என்பதாகக் கூறுகின்றனர்'

இமாம் பைஹகீ, பர்யாபீ ரஹிமஹுல்லாஹ் போன்றோர் ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அண்ணல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக மிக நீளமானதொரு நபிமொழியை அறிவிக்கின்றனர். அதாவது, 'படைப்புக்களனைத்தும் அழிக்கப்பட்ட பின் ஜிப்ரீல், மீக்காயீல், இஸ்ராயீல் ஆகிய மூன்று மட்டுமே மீதமாக இருக்கும். அப்போது இறைவன், இஸ்ராயீலே! இப்போது மீதமிருப்பது யார்? என்று கேட்பான். அதற்கு இஸ்ராயீல், உனது திருமுகம் எப்போதும் நிலைத்திருக்கும். அதையன்றி உனது அடியார்களான ஜிப்ரீல், மீக்காயீல், இஸ்ராயீல் ஆகிய மூன்று மட்டுமே மீதமுள்ளன என்று கூறும், அதைகேட்டு இறைவன், மீக்காயீலின் ஆன்மாவை கைப்பற்றும் என்பான். அது பிரமாண்டமான ஒரு மலையை போல கீழே விழும். அதைக் கண்டு, இறைவனே அனைத்தையும் அறிந்தவன் என்று இறைவன் கூறிவிட்டு, இப்போது மீதமாக இருப்பது யார்? என்று கேட்பான். அதற்கு இஸ்ராயீல், உனது திருமுகம் எப்போதும் நிலைத்திருக்கும். அதையன்றி உனது அடியார்களான ஜிப்ரீலும், இஸ்ராயீலும் மீதமுள்ளன என்று கூறும். அதைகேட்டு இறைவன், ஜிப்ரீலின் ஆன்மாவை கைப்பற்றும்

என்பான். அது தனது இறக்கைகளை படபடத்தவாறு சாஷ்;டாங்கத்தில் விழும். அதைக் கண்டு, இறைவனே அனைத்தையும் அறிந்தவன் என்று இறைவன் கூறிவிட்டு, இப்போது மீதமாக இருப்பது யார்? என்று கேட்பான். அதற்கு இஸ்ராயீல், உனது திருமுகம் எப்போதும் நிலைத்திருக்கும். அதையன்றி உனது அடியானான இஸ்ராயீல் மட்டும் மீதமுள்ளது என்று கூறும். அதைகேட்டு இறைவன், இறந்து போ என்று சொல்ல அதுவும் இறந்து போகும். அதன்பின் இறைவன், ஆதியில் நான் படைப்புக்களை படைத்ததுபோல மீண்டும் அவைகளை உயிர் கொடுத்து எழுப்புவேன். இப்போது பூமியில் பெருமை பேசிக் கொண்டிருந்த அரசர்களெல்லாம் எங்கே? என்று கேட்க, அதற்கு பதில் சொல்ல ஒருவருமே இருக்க மாட்டார்கள். அதன்பின் மகத்தான அரசுரிமை என்பது இறைவனாகிய எனக்கு மட்டுமே உரியதென்று கூறுவான்.'

இந்த நபிமொழியின் மூலம் தலைமை பதவியில் இருக்கும் மலக்குகள் அனைத்தும் இறுதிநாள் வரை உயிரோடு இருக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். மேலும் ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு என்பார், கணக்கற்ற மலக்குகள் ஒவ்வொரு நாளும் படைக்கப்படுகின்றன. அவைகள் இறுதிநாள்வரை மற்ற மலக்குகளோடு பறந்து கொண்டே இருக்கும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறே மற்றோர் நபிமொழியில், ஒவ்வொரு நாளும் 70,000 மலக்குகள் படைக்கப்படுவதாகவும், அவைகள் இறுதிநாள் வரை இறைவனை புகழ்ந்து கொண்டே இருக்குமென்றும், இவ்வாறே முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொன்னவர் மீதும் அவைகள் ஸலவாத்துச் சொல்லிக் கொண்டேயிருக்கும் என்றும், இமாம் ஸகாவி ரஹிமஹுல்லாஹ் என்பாரின் அறிவிப்பில், அந்த மலக்குகளின் இறக்கைகளிலிருந்து உதிரும் நீர்த்துளியை கொண்டு படைக்கப்படும் மலக்குகள் நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொன்னவருக்காக பாவமன்னிப்பு தேடிக் கொண்டிருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன்றி ஒவ்வொரு முஸ்லிமோடும் இணைந்துள்ள 'கிராமன் காத்திபீன்' என்னும் மலக்குகளை குறித்த நபிமொழியில், இந்த மலக்குகள் ஒரு முஸ்லிமுடைய இறப்புக்குப் பின் வானத்திற்குச் சென்று அங்கே தங்கியிருப்பதற்கு அனுமதிகோரும். அதற்கு இறைவன், எனது வானம் மலக்குகளால் நிரம்பியுள்ளது. அவைகளும் என்னை புகழ்ந்து கொண்டுள்ளன என்று கூறுவான். அதற்கந்த மலக்குகள், பூமிக்கு சென்றாவது தங்க அனுமதிக்க வேண்டுமெனக் கோரும். அதற்கும் இறைவன், பூமி எனது சிருஷ்டிகளால் நிரம்பியுள்ளது. அவர்களும் என்னை புகழ்ந்து கொண்டுள்ளனர்.

ولكن قوما على قبر عبدي فسبحاني وهللاني وكبراني الى يوم القيامة واكتباه لعبدي

'ஆதலால் நீங்கள் எனது அடியானின் கப்ரு (மண்ணறை)க்குச் சென்று அங்கேயே நின்று கொண்டு இறுதி நாள்வரை என்னை போற்றிப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்து அதனுடைய

நன்மையை எனது அக்குறிப்பிட்ட அடியானுடைய பெயரில் எழுதிக் கொண்டிருங்களென்று கூறுவான்'.

இதுபோன்று கணக்கில்லாத எவ்வளவோ நபிமொழிகள் காணக்கிடக்கின்றன. அவைகளை கொண்டு மலக்குகள் அனைத்தும் இறுதிநாள் வரை உயிரோடு இருக்கும் என்பதற்குரிய சான்றுகளும் கிடக்கின்றன. அத்துடன் ஒரு நபிமொழியில் கூட, ஒரு மலக்கு இறந்து போய் விட்டது என்பதற்குரிய ஆதாரத்தை நம்மால் காண முடியவில்லை. பின்னும் 'குல்லு நப்ஸின் தாயிகத்துல் மௌத்' என்னும் வசனம் இறக்கப்படும் வரை மலக்குகளுக்கு மரணமென்ற ஒன்று இருப்பது கூடத் தெரியாது. இனி இமாம் ஸுவைரி என்பாரின் தப்ஸீரில், ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர், மனிதர்கள், ஜின் வர்க்கங்கள், விலங்குகள் போன்றவைகளின் இறப்புக்குப்பின் முதல் சூர் (எக்காளம்) ஊதப்படும் போதுதான் மலக்குகள் மரணமடையும் என்றும், அதன்பிறகே இஸ்ராயீல் (உயிரை கைப்பற்றும் மலக்கு) இறந்து போகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மலக்குகளனைத்தும் ஒரே நேரத்தில் படைக்கப்படாது பல்வேறு சந்தர்ப்பங்களில் படைக்கப்பட்டுள்ளன. இதில் காற்று மண்டலத்தில் நதியொன்று உள்ளது. அந்நதியில் இப்பூமியை போன்ற ஏழு பூமியை நுழைத்தாலும் அதனுடைய நீர் வற்றிப் போகாது. அதில் விண்ணிலிருந்து ஒரு மலக்கு இறங்கி அந்த நதியையே நிறைத்து விடுவதோடு அதனுடைய கரைகளனைத்தையும் அது மூடிவிடும். அதன்பின் அதில் குளித்தெழுந்து அது வெளியே வரும்போது அதனுடைய மேனியிலிருந்து விழும் நீர்துளிகளை கொண்டு ஒவ்வொரு துளியிலிருந்தும் ஒருமலக்கை இறைவன் படைப்பான். அவைகள் அவனது படைப்புக்களின் மொத்த அளவுக்கு அவனை புகழும்.

இப்னு அபித்துன்யா மற்றும் அபுஷ்ஷைகு ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'கிதாபுஸ் ஸவாப்' என்னும் நூலில், இமாம் இஃபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹு என்பாருக்கு அவரது தந்தை கூறியதாக ஒரு நபிமொழியை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு அறிவிக்கிறார்கள்.

ما ادخل رجل على مؤمن سرورا الا خلق الله عزوجل من ذالك السرور ملكا يعبد الله عزوجل ويوحده فاذا صار العبد في

قبره اتاه ذالك السرور

'எவரேனும் ஒரு முஸ்லிமை சந்தோஷப்படுத்தினால் இறைவன் அந்த சந்தோஷத்திலிருந்து ஒரு மலக்கை படைக்கினறான். அது தனது இறைவனை வணங்கிக் கொண்டிருக்கும். இனி அவர் இறந்து மண்ணறைக்கு சென்றால், அந்த மலக்கு அவருடனே சென்று அவரிடம், என்னை தெரிகிறதா? நான்தான் அந்த சந்தோஷம். நீ இன்ன முஸ்லிமுடைய இதயத்தில் அதை ஏற்படுத்தினாய். இன்று நான் நெருக்கடியான இப்பயங்கரத்தை விட்டும் உன்னை அகற்றி உனது இதயத்திற்கு நிம்மதியைத் தருவேன். அதேபோல உனது நேசத்தை உனக்கு இன்று நான் காட்டித் தருவேன். உனது இறைநம்பிக்கையை உனக்குள் ஸ்திரப்படுத்துவேன். அத்துடன்

மறுமையில் ஒவ்வொரு சோதனைக்குரிய இடத்திலும் உன்னோடு இருந்து உனக்கு உதவுவேன். உனக்காக இறைவனிடம் நான் பரிந்துரையு(ஷ:பாஅத்து)ம் செய்வேன். அது மட்டுமின்றி சுவனத்தில் உனக்குரிய இடத்தையும் உனக்கு நான் காட்டித் தருவேன் என்று சொல்லும். அது வேறு யாருமல்ல. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களேயாகும்'.

இது போன்Nறு மலக்குகளுக்கு இறக்கைகளும், புஜங்களும் உண்டென திருக்குர்ஆன் மலக்குகளின் புஜங்களை குறித்து குறிப்பாகப் பேசுகிறது என்பதையும், அதன்மீது நம்பிக்கை கொள்வது கடமையாகும் என்பதையும், மலக்குகளுக்கு மொத்தம் எத்தனை இறக்கைகள் உண்டென்பதை இறைவனே அறிவான் என்பதையும் முன்னால் நாம் குறிப்பிட்டுள்ளோம். இதில் புஜங்கள் என்பது அந்த மலக்குகளின் தத்துவத்தை குறிக்குமென்று சொல்லலாம்.

இவ்வாறே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிஃராஜ் என்னும் விண்ணேற்றப் பயணத்திற்கு சென்ற போது, ஜிப்ரீல் என்னும் மலக்குக்கு அறுநூறு இறக்கைகள் இருந்ததை கண்டதாகக் கூறுகின்றனர். இதேபோல எல்லா மலக்குகளிலும் நான்கு மலக்குகள் தலையானவைகள். இவைதான் இப்பிரபஞ்சத்துடைய மிகப்பெரும் பொறுப்புக்களை ஏற்றுள்ளன. இதில் 'ஜிப்ரீல்' என்னும் மலக்கிடம் இறைவனுடைய ஞானங்களும், இறைவனிடமிருந்து இறைதூதர்களுக்கு வஹியை கொண்டு வந்து சேர்க்கின்ற பொறுப்பும் தரப்பட்டுள்ளது.

இவ்வாறே 'மீக்காயீல்' என்னும் மலக்கிடம் சிருஷ்டிப் பொருட்களனைத்தின் உணவும் வழங்கக் கூடிய பொறுப்பு தரப்பட்டுள்ளது. இதில் யாருக்கு எவ்வளவு உணவு வழங்க வேண்டுமென்னும் அளவை அதை தவிர வேறுயாரும் அறியமாட்டார்கள்.

இதுபோன்றே 'இஸ்ராபீல்' என்னும் மலக்கிடம் சூர் என்னும் எக்காளம் ஊதும் பொறுப்பு தரப்பட்டுள்ளது. முதல் முறை அது எக்காளம் ஊதும்போது இப்பிரபஞ்சம் முழுவதும் அழிந்து போகும். அதன்பின் இரண்டாவது எக்காளம் ஊதும் போது அழிந்தவை அனைத்தும் மீண்டும் உயிர்பெற்று தத்தம் தமது மண்ணறைகளிலிருந்து வெளிப்பட்டு மஹ்ஷர் என்னும் சமவெளியில் வந்து ஒன்று கூடும்.

இதேபோல 'இஸ்ராயீல்' என்னும் மலக்கிடம் எல்லா சிருஷ்டிப் பொருட்களின் உயிரையும் கைப்பற்றும் பொறுப்பு தரப்பட்டுள்ளது. இதில் பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப்படி, ஜிப்ரயீல்தான் எல்லா மலக்குகளை விடவும் மேன்மையானது. இருப்பினும் வேறுசில அறிஞர்கள், நான்கு மலக்குகளுமே சம அந்தஸ்துடையவைகள்தானென்று கூறுகின்றனர்.

இந்நான்கு மலக்குகளையன்றி இன்னும் பல முக்கியமான பொறுப்புக்களை வகிக்கும் மலக்குகளும் உள்ளன. அவைகளில் குறிப்பிடத்தக்கவை இறைவனின் அர்ஷை (தெய்வாசன பீடத்தை) சுமக்கும் எட்டு மலக்குகளாகும். அவைகளின் வன்மையான ஆற்றலை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அவைகளுடைய ஒரு பக்க காதிலிருந்து தோள் வரையுள்ள இடைவெளி மட்டும் கிட்டத்தட்ட இருநூறு வருட தொலைதூரமாகும். மற்றோர் அறிவிப்பில் எழுநூறு வருடத் தொலைதூரமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மலக்குகளின் படித்தரம்

ஒவ்வொரு மலக்கும் இறைவனின் திருமுன் ஒரு அந்தஸ்தைப் பெற்றுள்ளது. அந்நிலைக்கு மேல் அவைகள் உயரவோ தாழவோ மாட்டாது. அவைகளுக்கென ஆசை, எதிர்பார்ப்பு போன்றவை எதுவும் கிடையாது. ஏனெனில் ஆசை என்பது கிடைக்காத ஒன்றின் மீது வைக்கப்படுவதாகும். ஆனால் மலக்குகளின் நிலை அப்படியல்ல. காரணம் அவைகள் ஒரு பொருளின் மீது ஆசைப்பட்டு அதை அடைவதற்கு முயற்சிப்பவைகளுமல்ல. அதனால்தான் மலக்குகள் நேசமென்னும் செல்வதை;தை விட்டும் தூரப்பட்டுள்ளன. நாம் இப்படிச் சொல்வதால் மலக்குகளுக்கு இறைவன் மீது நேசமோ, அவனைப் பற்றிய அறிவோ இல்லை என்பது கருத்தல்ல. அதேநேரம் நேசத்தை தேடியலையும் அளவுக்கு அவைகளின் நிலையும் இல்லை.

### இறைவனுக்கு வழிப்பட்டவை

மலக்குகள் எந்த நிலையிலும் இறைவனுக்கு மாறு செய்யவே மாட்டாது. அவைகளுக்கு இடப்பட்ட ஆணையை கொஞ்சமும் பிறழாது செய்து முடிக்கும். ஆனால் இப்லீஸின் மீறிய செயலுக்குக் காரணம், அவன் உண்மையில் மலக்கே அல்ல. மாறாக அவன் படைப்புடைய தரத்தில் ஜின்னு(பூதகணங்களு)டைய வர்க்கத்தை சேர்ந்தவனாக இருந்தான். அதன்பின் அவன் தனது வணக்க வழிபாடுகளின் காரணமாக மலக்குகளின் தரத்திற்கு உயர்ந்தான். இருப்பினும் தனது இயற்கை குணத்தை விட்டும் அவன் நீங்காததால் முடிவில் இப்லீஸாகவே ஆகிப்போனான்.

அதேநேரம் அறிஞர்கள் இப்லீஸை குறித்து சொல்லும் போது, மலக்குகளும் ஜின்வர்க்கமும் படைப்புக்குரிய எதார்த்த நிலையில் ஒன்று மற்றொன்றுக்கு மிகவும் நெருக்கமாகவே உள்ளன. காரணம் நெருப்பில் ஒளியும் உள்ளது. புகையும் உள்ளது. இதில் நெருப்பிலுள்ள புகை என்பது அகன்று விட்டால் மீதமுள்ளது ஒளி மட்டும்தானென்று கூறுகின்றனர்.

### வேதங்கள்

தௌராத் என்னும் வேதம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது இறக்கப்பட்டது. யூதர்கள் இதை பின்பற்றுகின்றனர். அடுத்து ஸபூர் என்னும் வேதம் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது இறக்கப்பட்டது. இதுபோன்றே இன்ஜீல் என்னும் வேதம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது இறக்கப்பட்டது. இவ்வனைத்து வேதங்களிலும் இறைவன், திருத்தூதர்கள், அவர்களது தோழர்கள் குறித்த விசயங்கள், சூழ்நிலைகள், குணநலன்கள், முந்தைய இறைத்தூதர்களின் தூய்மையான வாழ்வியல் நெறிமுறைகள் மற்றும் நமது நபி நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ம் அவர்களின் மகத்தான உயர்நிலைகள், புகழ்மாலைகள் போன்றவை இவ்வேதங்களில் காணப்படுகின்றன. முந்தைய இறைத்தூதர்களின் சமூகத்தார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருப்பெயரை இறைவனிடம் முன்னிறுத்தி அவனுடைய சமீபத்துவத்தை பெறுவதற்காக வஸீலாவும் தேடியுள்ளனர்.

**குர்ஆன்**

வான நூல்களில் அனைத்து வேதங்களை காண குர்ஆன் மிகச் சிறப்பானதொரு வேதமாகும். இது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இறக்கியருளப்பட்டது. அதிமான விஷயங்களை உள்ளடக்கி வார்த்தைகளை மிகச் சுருக்கமாக்கி எளிமைப்படுத்தி பேசுவது இதரனுடைய தனிச் சிறப்பாகும். இது மற்ற எந்த வேதங்களிலும் காணப்படாத ஒன்றாகும்.

உதாரணமாக தௌராத் வேதம் அளவிலும், விஷயத்தை விளக்குவதிலும் எத்தனை விரிவான ஒன்றெனில், அதை இறைத்தூதர்களைத் தவிர வேறு யாராலும் மனனம் செய்ய முடியவில்லை. ஆனால் அதேநேரம் குர்ஆன் எத்தனை எளிமையாகவும், சுருக்கமாகவும் இருக்கின்றதெனில், இச்சிறப்பே குர்ஆனுக்கு மற்ற வேதங்களிலிருந்து ஒரு தனித்தன்மையையும் சிறப்பையும் பெற்றுத் தந்துள்ளது.

வேதங்களனைத்தும் இறைவனுடைய வசனங்களென்னும் தரத்தில் சமமானவைகளே. அதேநேரம் வேறொரு கோணத்தில் ஒன்றைவிட மற்றொன்று சிறப்புத்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. எதைப்போல எனில், இறைத்தூதர்களை குறித்து இறைவன் குர்ஆன் என்னும் வேதத்தில்....

لانفرق بين احد من رسله

'அவனது தூதர்களில் ஒருவருக்கிடையிலும் வித்தியாசப்படுத்த மாட்டோம்'

என்றும், பிரிதோரிடத்தில்,...

تلك الرسل فضلنا بعضهم على بعض

'அத்தூதர்கள், அவர்களில் சிலரை சிலரை விட மேன்மையாக்கி வைத்தோம்'

என்றும் கூறப்பட்டிருப்பதை போலென்று சொல்லலாம்.

மேலும் திருக்குர்ஆன் எவ்வித சந்தேகங்களுக்கும் அறவே இடமின்றி நேர்வழியில் நடத்தும் ஒரு வேதமாகும். கண்டிப்பாக எந்த வேதமும் மனித எண்ணங்களை கொண்டோ, அல்லது வார்த்தைகளைக் கொண்டோ அல்லது அறிவைக் கொண்டோ வரையறுக்கப்பட்டவைகளல்ல. மாறாக வேதங்களனைத்தும் இறைவனுடைய வசனங்களாகும். ஆதலால் வேதங்களை சிருஷ்டியென்றோ, சிருஷ்டிப் போன்றதென்றோ சொல்வதும் நம்புவதும் இறை மறுப்புக்குரிய ஒன்றாகும். அத்துடன் வேதங்களுக்கு தமது நோக்கத்திற்கு தக்கவாறு விளக்கம் சொல்வோர் வழி கெட்டவர்களாகும்.

www.sufimanzil.org

இதுபோன்றே குர்ஆனில் கட்டளை சம்பந்தமான வசனங்களும், சங்கோஸ்பதமான மறைவான கருத்துக்களை உள்ளடக்கிய வசனங்களும் மாறறப்பட்ட வசனங்களும் இருக்கின்றன.

**தெய்வீகத் திருப்பெயர்கள்**

இறைவனுடைய திருப்பெயர்கள் அனைத்தும் செவிப்புலன்களைக் கொண்டு கேட்பதில் கட்டுப்பட்டுள்ளன. இவை ஷரீஅத் என்னும் வாழ்வியலுக்குரிய கோட்பாடுகளில் பேசப்பட்டுள்ளது. ஆதலால் எந்தெந்த பெயர்கள் இறைவனுக்குரியதென ஷரீஅத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதோ, அப்பெயர்களை கொண்டுதான் இறைவனை அழைக்க வேண்டும். அதற்கு மாறாக தமதறிவைக் கொண்டு இறைவனுக்கு பெயரிடுவதும், அப்பெயரைக் கொண்டு அவனை அழைப்பதும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்தில் மறுக்கப்பட்ட ஒன்றாகும். அத்துடன் அறிவின் பார்வையில் எத்தனை மரியாதைக்குரிய பெயராக இருந்தாலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கம் இதை அனுமதிக்காது.

உதாரணமாக இறைவனை குணமளிப்பவன் (ஷாபி) என்று சொல்லலாம். ஆனால் வைத்தியனென்று சொல்லக் கூடாது. ஜவ்வாத் என்று சொல்லலாம். ஸஃகீ என்று சொல்லக்கூடாது. அறிவுள்ளவன் என்று சொல்லலாம். ஆனால் புத்தியுள்ளவன் என்று சொல்லக்கூடாது.

நினைவில் கொள்ளுங்கள்! இவ்வாறு மறுக்கப்படுதல் என்பது பெயர் வைப்பதில் மட்டும்தான். இறைபண்புகளை விவரிப்பதில் இல்லை. ஏனெனில் ஒரு பெயருக்கு மாற்றமாக தனது அறிவைக் கொண்டு இன்னொரு பெயரை வைப்பது வரம்பு மீறும் செயலாகும். இப்படி வரம்பு மீறுவதற்குரிய அதிகாரம் யாருக்கும் கிடை;யாது. இவ்வாறே இறை மறுப்பாளர்களான காபிர்களுடைய மொழியில் இறைவனை அழைக்கக் கூடாது. அதில் இறைமறுப்புக்குரிய அச்சமுள்ளது.

**99 திருநாமங்கள்**

நாம் ஒரு விஷயத்தை நன்கு நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, இறைவனுக்கு 99 திருநாமங்களுக்கு மேல் கிடையாது என்பதல்ல. மாறாக அவனுக்கு கணக்கில்லாத திருநாமங்கள் உள்ளன. அந்தப் பெயர்களெல்லாம் அவனுடைய சிருஷ்டிகளுக்குத் தெரியாது. அவ்வளவே. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்தில் 99 பெயர்கள் மட்டுமே பேசப்பட்டுள்ளன. அப்பெயர்களனைத்தும் ஒரு குறிப்பான காரணத்தை கருதி பிரபலப்படுத்தப்பட்டுள்ளன. அதுபற்றி நபிமொழியில்...

ان لله تسعة وتسعين اسماء من احصاها دخل الجنة

'திடனாக இறைவனுக்கு 99 திருநாமங்கள் உள்ளன. அதையார் மனனமிடுகிறாரோ அவர் சுவர்க்கம் செல்வார்' எனக் கூறப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் இதனை ஒரு உவமானத்தின் வாயிலாக நாம் எளிதாக விளங்கிக் கொள்ளலாம். அதாவது ஒருவர், என்னிடம் ஆயிரம் சவாரிகள் உள்ளன. யார் அவைகளைக் கொண்டு உதவி பெற விரும்புகிறாரோ அவைகள் அவருக்கு உதவி செய்து அவரை வெற்றிபெறச் செய்யும் என்று கூறுகிறார். இப்படிச் சொன்னதால் அவரிடம் ஆயிரம் சவாரிகளைத் தவிர வேறு சவாரிகளே இல்லை என்பது கருத்தல்ல. மாறாக அவரிடம் கணக்கில்லாத சவாரிகள் உள்ளன. ஆனால் இந்த ஆயிரம் சவாரிகளும் குறிப்பானவை என்பது இதனுடைய கருத்தாகும். இவ்வாறே இறைவனுக்கு எண்ணற்ற பெயர்கள் உள்ளன. ஆனால் இந்த 99 திருப் பெயர்கள் தனது தனித்தன்மையின் காரணமாக ஒருவர் சுவர்க்கம் செல்ல காரணமாய் அமைந்துள்ளன.

அடுத்து தனது சிருஷ்டிகளின் செயல்களையும் இறைவன் தான் படைக்கிறான். இறைமறுப்பு மற்றும் பாவங்கள் என்பது அவனது நாட்டத்தின் மீதே அமைந்துள்ளன. அதேநேரம் இறைமறுப்பு மற்றும் பாவத்தின் மீது அவன் திருப்பதி கொள்வதில்லை. எப்போது சிருஷ்டிகளனைத்தின் நன்மையும் தீமையும் அவைகளின் வெளிப்பாடும் இறைவனுடைய விதியம்சத்தை கொண்டுதான் என்பது நிரூபணமாகிவிட்டதோ அப்போதே மற்ற வஸ்துக்களை போன்று மனிதர்களின் செயல்களும் அவனைக் கொண்டுதான் வெளிப்படுகிறது என்பதை நாம் நம்பித்தான் ஆக வேண்டும். இதுபற்றி இறைவன் திருமறையில்...

والله خلقكم وما تعملون

'இறைவன் உங்களையும் உங்களின் செயல்களையும் படைத்தான்' என்று கூறுகிறான்.

ஆக நன்மை, தீமை, இறைமறுப்பு, விசுவாசம், வழிப்படுதல், வரம்பு மீறுதல் போன்ற எல்லாமே இறைவனின் நாட்டம், கட்டளை மற்றும் விதியைக் கொண்டே நிகழுகின்றன என்பதாம். அதே நேரம் இறைவன் விசுவாசம், நன்மை;, வழிப்படுதல் போன்றவற்றின் மீதுதான் திருப்தியுறுகிறான்.

**செயல்களும் விருப்பங்களும்**

சில செயல்கள் அடியார்களின் விருப்பத்தின் மீது அமைந்துள்ளன. அதனை செய்வதால் நன்மையும், விட்டு விடுவதால் வேதனையும் ஏற்படுகிறது. இருப்பினும் செயல்களனைத்தும் இறைவனுடைய நாட்டம் மற்றும் விருப்பத்தின் மீதே அமைந்துள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதேநேரம் அடியார்களை அவர்களுடைய விருப்பத்தின் மீது அதிகாரமுடையவர்களாகத்தான் இறைவன் படைத்திருக்கிறான். இன்னும் அடியான் எல்லா செயல்களிலும் விருப்பமற்றவனாகவோ அதிகாரமற்றவனாகவோ இல்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நன்மையும், வேதனையும் அந்த விருப்பத்துடைய அதிகாரத்தின் மீதுதான் அமைந்துள்ளது.

இதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுமாயின், முதலில் மதி (அறிவு) விருப்பம் என்பதன் அர்த்தம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக மனிதனிலிருந்து எந்தச் செயல் வெளியீடாகிறதோ அவை இரு வகைப்படும்.

ஒன்று: ஒரு செயல் மனிதனுடைய எண்ணத்தில் தோன்றி அவனுடைய இயல்புக்கு ஒத்ததாக இருந்து அதை செயல்படுத்த வேண்டுமென்ற விருப்பம் அவனது மனதில் தோன்றி அதை செயல்படுத்த முற்படுதல். ஒரு செயல் மனிதனுடைய எண்ணத்தில் தோன்றி அது அவனுடைய இயல்புக்கு மாற்றமானதாக இருந்து அவனது மனம் அச்செயல்மீது வெறுப்பையும் அவருவருப்பையும் காட்டுதல்.

இதில் அந்த எண்ணத்தை செயல்படுத்த அல்லது செயல்படுத்தாதிருக்க மனதில் விருப்பம் தோன்றும் முன் இரண்டுமே சமமாகத்தான் இருந்தது. பின்னும் அதை செய்யவோ அல்லது செய்யாமலிருப்பதற்கோ உரிய சாத்தியமும் இருந்தது. அத்துடன் எண்ணமாகிய கற்பனையில் எது அதை செயல்படுத்தும் சக்திக்கு சமீபமாகவோ அல்லது கற்பனையுடன் கலந்தோ அல்லது கற்பனைக்கு தூரமாகவோ இருந்ததோ அச்செயலுக்குரிய மனித அசைவைத்தான் விருப்பத்தின் அசைவென்று கூறுகின்றனர். இதுபோன்றே எந்தச் செயல் அந்த அசைவை முறைபடுத்துகிறதோ அதை செயலுடைய விருப்பமென்று கூறுகின்றனர்.

இரண்டு: மனித எண்ணத்திலிருந்து தோன்றும் ஒரு செயல், விருப்பமோ ஆசையோ கொள்ளாமல் அது தோன்றுமுன்பே செயலாக வெளிப்படுதல். இதனை ஜப்ர் (நிர்பந்தம்) அல்லது இழ்த்திராரி (விருப்பமின்மை) என்று கூறுகின்றனர். இதை எவராலும் மறுக்க முடியாது.

இனி இத்தகைய விருப்பமின்றிய நிர்பந்தமான நிலையில் தன்னிச்சையாக வெளிப்படும் செயலை மறுப்பது எதைப் போல் எனில், ஒருவனுக்கு கண்களோ அல்லது செவியோ இல்லை என்று சொல்வதைப் போன்றாம். அடுத்து ஒருவன் எனக்குள்ளிருந்து வெளிப்படும் செயல் தன்னிச்சையாகவே எனது விருப்பமின்றி வெளிப்படுகிறதெனக் கூறுவானேயாயின் இதனை அறிவுள்ள எந்த மனிதனும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இந்நிலையில் ஒரு சந்தேகமும் வந்து விட்டது. அதாவது மனித செயல்களனைத்தும் இறைவனுடைய அறிவில், அவனுடைய நாட்டத்தில் அவனது விதியின் தன்மைக்கேற்றவாறு வெளிப்படும் என்றும், இதனை முன்பே தெரிந்து வைத்திருந்தான் என்றும், இன்ன செயல் இன்ன மனிதனிலிருந்து வெளியாக வேண்டுமென்று நாடியிருந்தான் என்னும்போது, அச்செயல் அவனிலிருந்து நிகழ்ந்துதானே தீரும். இதில் அவன் விருப்பமுள்ளவனாகவோ அல்லது விருப்பமற்றவனாகவே எப்படி இருந்தாலென்ன?

அத்துடன் ஒரு செயல் என்பது மனித விருப்பத்தைக் கொண்டுதான் செயல் வடிவம் பெறுகிறதென்று சொல்லப்பட்டால், இறை நாட்டத்தின் மீது அமையும் செயலில் மனித விருப்பத்திற்கென்று என்ன அதிகாரமிருக்க முடியும்? இனி அச்செயல் மனித எண்ணம் மற்றும்

ஆசையின் வாயிலாக வெளிப்படுகிறதென்று வேண்டுமானால் சொல்லலாம். அப்போது தான் விருப்பத்தின் மீது செயல் அமைந்ததென்று சொல்ல முடியும்.

இங்கே ஒன்றை நன்கு நினைவில் கொள்ள வேண்டும். அதாவது மனிதனுக்கு ஒரு செயலின் மீது அதிகாரமுண்டு எனக் கூறப்பட்டாலும், அச்செயலின் துவக்கம் ஏற்கனவே வரையறுக்கப்பட்டு விட்டிருப்பதால் அவனுக்கு அச்செயல் மீது அதிகாரமோ அல்லது விருப்பத்திற்கோ அறவே இடமில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக மனிதனுடைய கண்கள் திறந்துள்ளன. ஆனால் பார்க்கவில்லை. இதில் பார்த்தல் என்பது அவனுடைய விருப்பத்திலோ அதிகாரத்திலோ இல்லை. அவ்வாறின்றி பார்க்கிறான் எனில், அப்பார்வையில் விருப்பம் உண்டாகி ஆசை வளர்ந்து அதன்பின் ஒரு செயலின் மீது அவனுக்குள் அசைவு நிகழ்கிறது. இந்நிலையில் மனிதன் விருப்பமுடையவன், அதிகாரமுடையவன் என்று சொல்லலாம். இருந்தும் மனிதன் அவனுடைய விருப்பத்தில் விருப்பமற்றவனாகவும், அதிகாரமற்றவனாகவும் தான் இருக்கிறான். இதனுடைய முடிவை இஸ்லாமிய அறிஞர்கள் இப்படிக் கூறுகின்றனர்...

ஒரு அடியான் தனது செயலில் விருப்பமுள்ளவனாகவும், அதிகாரமுள்ளவனாகவும் இருக்கும் அதேநேரம் விருப்பமற்றவனாகவும், அதிகாரமற்றவனாகவும் இருக்கிறான் என்பதே உண்மையாகும். இதையே வேறு வகையாக சொல்வதாயின் வெளிரங்கத்தில் விருப்பமுடையவனாகவும் அதிகாரமுடையவனாகவும் இருக்கும் மனிதன் அந்தரங்கத்தில் விருப்பமற்றவனாகவும், அதிகாரமற்றவனாகவும் இருக்கிறான் என்பதே.

பாருங்கள்! இறைவன் மனிதனை படைத்தான். அவனுக்கு கை, கால், செவி, கண், நாவு போன்ற உறுப்புக்களை தந்தான். அதன்பின் அவைகளை செயல்படுத்துவதற்குரிய முறைகளை அவனுக்குள் உதிப்பாக்கினான். இவ்வாறே அவனுடைய நாட்டத்திற்கொப்ப அவைகளை அவனுக்கு வழிப்படவும் வைத்தான். அதாவது நல்ல பண்புகளை பெற்று நஷ்டத்திலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக. அதன்பின் மிகவுயர்ந்த அறிவைத்தந்து அவனை அழகுபடுத்தினான். அதன் மூலம் மனிதன் விலங்குகளை விட்டும் தனியானதொரு சிறப்பையும் பெற்றான்.

அதன்பின் அந்த அறிவுக்கு நன்மை, தீமை, லாபம், நஷ்டம் போன்றவற்றை வெளிப்படையான புலன்களைக் கொண்டு புரிந்து கொள்ள முடியாத உணர்வுடைய தத்துவத்தை தந்தான். பின்னர் அறிவு தன்னை அறிந்துகொள்ளும் விஷயத்தில் அதை அவன் நிராதரவாக விட்டுவிடவில்லை. காரணம் எண்ணிலடங்கா விஷயங்கள் அதற்குள் மறைந்திருந்தன. அவைகளையெல்லாம் அறிவு சுயமாகப் புரிந்து கொள்ள முடியாது. அதேநேரம் அவைகளைப் புரிந்து கொள்வதும் அதற்கு சாத்தியமாயிருந்தது.

அதனால் அறிவு தன்னை புரிந்து கொள்ளும் விஷயத்தில் அது தடுமாறாதிருக்கவும் தவறு செய்யாதிருக்கவும் அதனுடைய கரத்தில் வலுவனான எந்தவொரு சாதனமும் இருக்கவில்லையாதலால் இறைத்தூதர்களையும் வேதங்களையும் இறக்கி வைத்து, அதற்கு

சின்னச்சின்ன பிரச்சனைகளிலெல்லாம் நேரக்கூடிய அபாயங்களை குறிததும் லாபங்களைக் குறித்தும் ஆசைகாட்டியும் எச்சரிக்கை செய்தும் தனது பேரருளை நிறைவாக்கினான். ஒரு சிறு தவறைக் கூட அவன் குறிப்பாக்கித் தராமல் விட்டுவிடவில்லை. இதை குறித்து அவன் தனது வேதத்தில்...

لئلا يكون للناس على الله حجة بعد الرسل

'ஹக்குடைய (உண்மையின்) பாதை சூரியனைவிட மிகத் தெளிவாக விளக்கப்படுத்தப்பட்டு விட்டது. நேர்வழி மற்றும் வழிகேட்டின் மீது எத்தகைய மறைவுமில்லை' என்றும்...

لا اكراه في الدين قد تبين الرشد من الغي

'மார்க்கத்தில் எந்த நிர்பந்தமுமில்லை. நேர்வழி வழிகேட்டை விட்டும் நிச்சயமாக வெளிப்பட்டு விட்டது' என்றும் கூறுகிறான்.

இந்நிலையில் யாராவது ஒருவர் தம்மை சிருஷ்டிகர்த்தாவாக நினைத்தால் அது மிகப்பெரும் தவறாகும். காரணம் தாத்து (தன்மயம்) ஸிபாத்து (பண்புகள்) அல்லது செயலைக் கொண்டு இல்லாமைக்குரிய ஒரு பொருளை அந்நிலையிலிருந்து நீக்கி அதனை உள்ளமையின் பக்கமாக கொண்டு வருவதுதான் சிருஷ்டிகர்த்தாவுக்குரிய செயலாகும். இதை யாருடைய அதிகாரத்திலும் இறைவன் தரவில்லை. இனி யாரும் அந்த அதிகாரத்தை பெறவும் முடியாது.

ஏனெனில் சிருஷ்டிகளனைத்தும் தனது தாத்தைக் கொண்டு எதார்த்தத்தில் இல்லாமைக்கு உரியவைகளாகும். இதில் இல்லாமைக்குரிய ஒரு பொருள் இன்னொரு பொருளை உள்ளமையின் பக்கமாக எவ்வாறு கொண்டு வரமுடியும்? அதேநேரம் யார் தனது உள்ளமையை கொண்டு நிலைத்திருக்கிறானோ அவான்தான் இல்லாமையை உள்ளமையின் பக்கமாகக் கொண்டுவர இயலும்.

ஆம். அவன்தான் தனது பேரருளை கொண்டு ஒவ்வொன்றுக்கும் அவனுடைய வழக்கத்திற்கொப்ப ஒரு முடிவை ஏற்படுத்தி இருக்கிறான். அதாவது அடியான் எதை செய்ய முயலுகிறானோ, அதன் பக்கமாக தனது ஆற்றலைத் திருப்புகிறான். அந்த ஆற்றலையும், இறைவன் தனது நாட்டத்தைக் கொண்டே படைக்கிறான்.

உதாரணமாக இறைவன் ஒருவனுக்கு கைகளை தந்தானெனில் அதை விரிக்கவும், சுருக்கவும், நீட்டவும், மடக்கவும், தேவையான சக்தியை அக்கைகளுக்கு தருகிறான். இது போன்றே கத்தியை செய்யும் முறையையும் மனிதனுக்கு அவனே காட்டித் தருவதோடு அக்கத்தியில் கூர்மையையும், அறுக்கும் சக்தியையும் வைத்தான். அதன்பின் மனிதனுக்கு அதை எடுக்கவும், பிடிக்கவும், போர் புரியவும் கற்றுக் கொடுத்தான்.

இவ்வாறே நண்பனுக்கும் விரோதிக்குமிடையே உள்ள வித்தியாசத்தை இனங்காணும் அறிவையும் தந்தான். அதில் நன்மை மற்றும் தீமைக்குரிய ஒழுங்கு முறைக்குரிய நிலைகளையும் விளக்கித் தந்தான். அதன்பின் வாழ்வியலுக்குரிய நடைமுறைச் சட்டத்தை அனுப்பி வெட்டுவதில் நீதம், அநீதம் நன்மை, தீமை போன்றவற்றையும் விளக்கினான்.

இப்போது ஜைத் என்பானுக்கு இறைவனால் காட்டித்தரப்பட்ட கத்தியை, இறைவனால் உருவாக்கப்பட்ட கரத்தில், இறைவனால் வழங்கப்பட்ட கத்தியைக் கொண்டு எடுக்க முயல, அக்கத்தி இறைவனின் உத்திரவை கொண்டு எழுந்து விட்டது. இப்போது குனிந்து வலீதை வெட்ட நாடினான். அக்கத்தியும் இறைவனுடைய உத்திரவுக்கொப்ப வலீதுடைய சரீரத்தில் இறங்கிற்று. இவையனைத்தும் இறைவனது நல்லுதவியைக் கொண்டுதான் வரையறுக்கப்பட்டிருந்தது.

இனி கத்தி வெட்டியது எனில், இறைவனுடைய நல்லுதவியைக் கொண்டுதான். அடுத்து கத்தி வலீதுடைய கழுத்தை வெட்டியதென்றால் அதுவும் இறைவனுடைய நாட்டத்தைக் கொண்டுதான். இறைவன் நாடவில்லையெனில்,ஒரு ஜைத் அல்ல. ஓராயிரம் மனிதர்களும், பூதகணங்களும், வானவர்களும் ஒன்று சேர்ந்தாலும் கூட அக்கத்தியை எடுத்த பிறகும்கூட இறைவன் நாடவில்லையேல் வானம், பூமி, மலைகள் போன்றவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அக்கத்தியின் மீது விழுந்தாலும் அக்கத்தி வளைந்து கூடப் போகாது.

அடுத்து கத்தி வலீதுடைய சரீரம்வரை சென்று அவனுடைய தேகத்தில் இறங்கி விட்டாலும் அப்போதும் இறைவன் நாடவில்லையேல் கழுத்து வெட்டுப்படுவது என்பது பெரிய விஷயம். ஒரு சிறுகீறல்கூட விழாது. யுத்தங்களில் கத்தி தேகத்தில் பாய்ந்த பின்னரும்கூட ஒரு கீறல் கூட விழாதிருந்ததை பார்க்கப்பட்டுள்ளது. துப்பாக்கியிலிருந்து பாய்ந்து வரும் தோட்டாக்கள் சமீபத்தில் வர வர அதன் வீரியம் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கப்பட்டு விழுவதை ஆயிரக்கணக்கானோர் பார்த்துள்ளனர். போர் முடிந்து மாலை நேரம் திரும்பிவரும்போது சிப்பாய்களின் தலை முடியிலிருந்து தோட்டாக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆதலால் ஸைதை கொண்டு நிகழ்ந்தவை அனைத்தும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு அவனுடைய நாட்டத்தை கொண்டு நடைபெற்றவைகளாகும். இடையில் ஜைத் செய்த வேலை வலீதை வெட்ட வேண்டுமென அவன் நாடியதும், அவன் மீது தனது கத்தியை பிரயோகித்தது மட்டுமே. இதில் வலீத் வாழ்வியலுக்குரிய ஷரீஅத்தின் நடைமுறை சட்டப்படி வெட்டப்பட வேண்டியவன் எனில், ஜைதின் மீது எந்தக் குற்றமுமில்லை. அத்துடன் அவன் நன்மைக்குரியவனாகவும் கருதப்படுவான். காரணம் அவன் நன்மையின் பக்கமாக முயற்சி செய்ததும் தனது கத்தியை பயன்படுத்தியதுமே அதற்கு காரணமாகும். இதனை இறைவன் தனது தூதர் பெருமக்கள் வாயிலாக தன்னுடைய விருப்பத்திற்குரிய செயல் என்பதாயும் அறிவிக்கிறான்.

அவ்வாறின்றி வெட்டியது ஷரீஅத்துடைய வாழ்வியலின் நடைமுறை சட்டத்திற்கு மாற்றமானதெனில் ஸைதை குற்றவாளியென முடிவெடுக்கப்பட்டு, அவன்

தண்டனைக்குரியவனாக தீர்மானிக்கப்படுவான். காரணம் ஷரீஅத்தின் வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டத்தில் தடை செய்யப்பட்ட ஒரு காரியத்தின் பக்கமாக தனது கத்தியை பயன்படுத்தியதே இதற்கு காரணமாகும். இதனை இறைவன் தனது வேதங்களை கொண்டு தனது விருப்பத்திற்கு மாறான செயல் என்பதாகவும் தெளிவுபடுத்தியுள்ளான்.

சுருங்கக்கூறின் செயல் என்பது நீதத்திற்குரிய நாட்டத்தை கொண்டு அமைவதல்ல. மாறாக மனித விருப்பத்தின்மீது இறைநாட்டத்தைக் கொண்டு அமைவதாகும்.எனவே மனிதன் நல்லதை நாடினால் அதன் பக்கமாக முயற்சி செய்தால் இறைவனும் அவனுடைய பேரருளை கொண்டு நல்லதையே ஏற்படுத்துவான். அவ்வாறின்றி தீமையை நாடி அதற்கு முயற்சி செய்தால் இறைவனும் அவனுடைய தேவையற்ற நிலையைக் கொண்டு தீமையை உருவாக்கி விடுவான்.

பாருங்கள்! இரண்டு டம்ளர்களில் தேனும் விஷமும் வைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டுமே இறைவனால் படைக்கப்பட்டவைதான். அதே நேரம் தேனில் சுகத்தையும், விஷத்தில் மரணத்தை ஏற்படுத்தும் நிலையையும் வைத்திருக்கிறான். அத்துடன் வைத்தியர்களை அனுப்பி ஜனங்களிடம், இது தேன். பலனளிக்கவல்ல ஒன்றென விளக்குகிறான். இவ்வாறே இது விஷம். இதை அருந்தினால் இறந்து விடுவீர்கள் என்று எச்சரிக்கிறான்.

அத்துடன் வைத்தியர்களின் இந்த அறிக்கை இப்பூமி முழுவதும் பரவுகிறது. ஒவ்வொருவரும் வைத்தியர் சொல்லை தங்கள் காதால் கேட்கின்றனர். இந்நிலையில் ஒருவன் தேன் இருந்த டம்பளரை எடுத்து அருந்தினான். இதில் அந்த டம்ளர் எடுத்த கைகளை இறைவன்தான் படைத்தான். அந்த டம்பளரை கையில் எடுத்து வாய்வரை கொண்டு செல்வதற்குரிய சக்தியையும் இறைவன்தான் அக்கைகளுக்கு தந்தான். அதன்பின் வாயில் ஊற்றிய போது அது தொண்டைக்குழிக்கு கீழே சென்று இறங்குவதற்குரிய சக்தியையும் இறைவன்தான் தந்தான்.

இப்போது தேனை அருந்தியவனின் வயிற்றுக்குள் சென்ற அத்தேன் சுயமாக அவனுக்கு பலனைத் தருமா? அல்லது அவன் அத்தேனை தனக்கு பலனளிக்கவல்ல ஒன்றாக ஆக்கிக் கொள்ளத்தான் முடியுமா? எனில் கண்டிப்பாக முடியாதென்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அவனுக்கு தேன் பலனளிக்க வேண்டுமாயின் அது இறைநாட்டத்தை கொண்டும் அவனுடைய தத்துவத்தைக் கொண்டும்தான் நிகழ முடியும். அவன் நாடவில்லையேல் மனிதன் தேனை அருந்திய பின்னரும் அது அவனுக்கு எவ்வித பலனையும் தராது. அதேநேரம் அத்தேன் விஷமாக மாறிட வேண்டுமென இறைவன் நாடினால் அப்போதே அது விஷமாகவும் மாறிவிடும்.

இதுபோன்றே விஷத்தை அருந்தியவனின் வயிற்றுக்குள் சென்ற அவ்விஷம் சுயமாக அவனுக்கு மரணத்தை கொடுத்து விடுமா? அதாவது விஷம் ஒரு சிருஷ்டிகர்த்தாவாக மாறிவிடுமா எனில் கண்டிப்பாக முடியாது. காரணம் அந்த விஷமும் இறைவனுடைய கட்டுப்பாட்டிலும் நாட்டத்திலும் தான் முடக்கப்பட்டுள்ளது. இனி அந்த விஷம் எதையாவது செய்யும் எனில், அவனுடைய நாட்டத்தை கொண்டுதான் செய்யும். இல்லையேல்

கிலோகணக்கில் விஷத்தை அருந்தினாலும் அது அவனுடைய ரோமத்தை கூட பறிக்காது. அன்றி இறைவன் நாடினால் அந்த விஷம் தேனாகக் கூட மாறிவிடும்.

ஆதலால் தேனை அருந்தியவன் அறிவாளர்களால் போற்றப்படுகிறான். இவ்வாறே விஷத்தை அருந்தியவன் இகழப்படுவதோடு தண்டனைக்கும் உரியவனாகிறான். அறிவாளர்கள் விஷத்தை அருந்தியவனை தற்கொலைக்குரிய குற்றவாளியென தீர்ப்பளிக்கின்றனர்.

பாருங்கள்! துவக்கத்திலிருந்து இறுதிவரை என்னென்ன நடைபெற்றதோ அவையனைத்தும் இறை நாட்டப்படியே நடைபெற்றுள்ளது. இதில் எத்தனை உறுப்புக்கள் செயல்பட்டதோ அவைகளும் இறைநாட்டப்படியே செயல்பட்டன. இந்நிலையில் அறிவாளர்களுக்கு மத்தியில் ஒருவன் போற்றப்படுகிறான். இன்னொருவன் அவனுடைய தேகம் முழுவதும் அறிவு பிரகாசித்தும் கூட விஷத்தை அருந்தியதால் அவன் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்படுகிறது.

அதேநேரம் அந்த விஷத்தை அவன் படைக்கவில்லை. அவ்விஷத்தில் இறந்துபோகும் தன்மையையும் அவன் ஏற்படுத்தவில்லை. அந்த விஷத்தை தீண்டிய கரமும் அவனுடையதல்ல. அவ்விஷம் வைக்கப்பட்டிருந்த டம்ளரை எடுப்பதற்குத் தேவையான சக்தியையும் அவன் தோற்றுவிக்கவில்லை. தொண்டைக்குக் கீழே அவ்விஷத்தை இறக்கும் சக்தியும், அவனுக்குச் சொந்தமானதல்ல. அவனுடைய நாட்த்தைக் கொண்டும் அது இறங்கவில்லை.

பாருங்கள்! மனிதன் நீர் அருந்துகிறான். அந்நீர் அவனுடைய தொண்டைக்குழிக்குக் கீழே இறங்க வேண்டுமென்றும் அவன் விரும்புகிறான். ஆனால் அது தும்மலாகி வெளியே வந்து விடுகிறது. இப்போது அவன் நாடியது அகிலத்தின் அதிபதியான இறைவன் நாடாதவரை நடக்கவில்லை.

நீர் தொண்டைக்குழிக்குக் கீழே இறங்கியபின் வெளிரங்கத்தில் அருந்தியவனுக்கு அதில் எந்த வேலையுமில்லை. அது ரத்தத்தில் கலப்பதும், ரத்தம் அதை இழுத்துச் செல்வதும, இதயம்வரை கொண்டு சேர்ப்பதும் அதனை கோளாறாக்குவதும் போன்ற எந்தக் காரியமும் அவனுடைய நாட்டத்திற்கோ அல்லது சக்திக்கோ உட்பட்ட ஒன்றல்ல.

இறுதியில் அந்த விஷத்தை அருந்தியபின் மிகவும் வருந்துகிறான். அதன்பின் என்னதான் முயன்றாலும் நடப்பது நடந்தே முடிகிறது. அவ்வாறின்றி எல்லாமே மனிதனுடைய நாட்டத்தைக் கொண்டுதான் நடைபெறுகிறது எனில் மனிதநாட்டம் மாறிவிடும்போது விஷமும் தனது செயலை இழந்துவிட வேண்டும்.

ஆனால் அவ்வாறு நடப்பதில்லை. எனவே இவனுடைய நாட்டம் என்பது இதில் எதுவுமில்லை. பின்னர் எதற்காக அதைவிட்டு நீங்க வேண்டுமெனில், தேனுக்கும், விஷத்திற்குமிடையே உள்ள வித்தியாசத்தை அவனுக்கு முன்பே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மிகப்பெரும் அறிவாளர்களளெ;லாம் அவனுக்கு அதனுடைய லாப நஷ்டம் என்னவென்பதை புரிய

வைத்துள்ளனர். பார்ப்பதற்கு கண்களும், புரிந்து கொள்வதற்கு அறிவும் அவனுக்கு தரப்பட்டுள்ளது.

இனி எந்தக் கைகளால் விஷமிருக்கும் டம்ளரை எடுத்து தேன் இருக்கும் டம்பளரின் பக்கமாக கொண்டு செல்கிறானோ அக்கைகளுக்கு எடுக்கக்கூடிய சக்தியை இறைவன் முன்பேபடைத்து விட்டான். இக்கரியங்களனைத்தும் ஆதிமுதல் அந்தம்வரை முன்பே முடிவெடுக்கப்பட்டு படைப்புக்களின் பிரயோஜனத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டா எனில்,..

விஷயம் அவ்வாறல்ல. அவன் தன்னுடைய கரத்தை விஷத்தின் பக்கமாகக் கொண்டு சென்றான். அதை அருந்தவும் முயன்றான். எவரிடமும் எந்தத் தேவையுமற்ற இறைவன் அவனுடைய வழக்கத்திற்கொப்ப அதை செயலாக்கினான். அவ்வளவே. அதாவது அவன் விஷத்தை எடுப்பதும் அதை தொண்டைக்குள் இறக்குவதும் அதன்பின் அவ்விஷம் அவனுடைய இதயத்தை பாதிப்பதும் படைக்கப்பட்டு விட்டது. இத்தனைக்குப் பிறகும் அவனை குற்றவாளியல்ல என்று எப்படிக் கூறமுடியும்? மனிதனுக்குள் இம்முயற்சியும் நாட்டமும் அதிகாரமும் வெளிப்படையாகவே தெரிகின்ற ஒன்று. இதனை யாராலும் மறுக்க முடியாது.

இன்னும் ஒவ்வோர் மனிதனும் தனக்கும் கல்லுக்குமிடையே ஒரு வித்தியாசமுண்டு என்பதை புரிந்துதான் வைத்திருக்கிறான். இதுபோன்றே ஒவ்வொரு மனிதனும் நடப்பது, திரிவது, உண்பது, குடிப்பது, எழுவது, அமர்வது போன்ற எல்லா செயல்களிலும் நாடுகிறான் என்பதையும் புரிந்துதான் உள்ளனர்.

இனி ஒருவுன் தனது கைகளை மேலே உயர்த்தினான் எனில், அது அவனுடைய நாட்டத்தில் அமைந்த ஒரு செயலென்று சொல்லலாம். அதேநேரம் அக்கைகளுக்குரிய சக்தி தீர்ந்துவிடும்போது உயர்ந்த கைகள் தானாகவே கீழே விழுகிறது. இந்நிலையில் இவ்விரு செயல்பாட்டிலும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இவ்வாறே தரைக்கு மேலே எம்பிக் குதிப்பது மனித நாட்டத்திற்கும் அதிகாரத்திற்கும் உட்பட்ட ஒரு செயல். மனிதன் நாடவில்லை என்றால் எம்பிக் குதித்திருக்க மாட்டான். அதேநேரம் எம்பி மேலே சென்றவன் மீண்டும் தரைக்கு திரும்பி வருவதென்பது மனித நாட்டத்திலோ அதிகாரத்திலோ உள்ள ஒன்றல்ல. அத்துடன் மேலே சென்றவன் அங்கே நிற்க நினைத்தாலும் நிற்க முடியாது. ஆக இதைத்தான் மனித நாட்டம் அதிகாரம் என்று சொல்லப்படுகிறது. இதை ஒவ்வொரு மனிதனும் தனக்குள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான்.

மேலும் மனிதன் இவையனைத்தையும் தனது அறிவு கொண்டு பார்ப்பதால் தான் மனிதன்மீது ஏவல், விலக்கல், நன்மை, தீமை, வெகுமதி, தண்டனை போன்ற நிலைகளெல்லாம் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆதலால் சந்தேகத்திற்கு அறவே இடமின்றி இந்த நாட்டமும் அதிகாரமும் இறைவனால் படைக்கப்பட்டவைதான்.

எவ்வாறெனில், மனிதனே இறைவனால் படைக்கப்பட்டவன் தான். மனிதன் தன்னைத்தானே படைத்துக் கொள்ள முடியாது. தனது கை, கால், கண், வாய், நாவு, மூக்கு, செவி போன்ற

எதையும் மனிதனால் தானே உருவாக்கிக் கொள்ளவும் முடியாது. இவ்வாறே தனக்குத்தானே ஒரு சக்தியையும், நாட்டத்தையும், அதிகாரத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவும் முடியாது. எல்லாவற்றையும் இறைவன்தான் தந்தான். இறைவன்தான் படைத்தான்.

அதற்காக எல்லாமே இறைவனுடைய நாட்டம் மற்றும் அதிகாரத்தை கொண்டுதான் நடைபெறுகிறது. இதில் மனிதனாகிய நமக்கென்று ஒரு நாட்டமோ அல்லது அதிகாரமோ அறவே இல்லையென தீர்மானிப்போமாயின் நாம் கற்களை போலோகி விடுவோம். இந்நிலையில் நம்மீது வெகுமதியோ தண்டைனையோ நமக்குக் கிடையாதென்று நாம் நினைத்தால் இது மாபெரும் அறிவீனமாகும்.

பாருங்கள்! உங்களுக்குள் இறைவன் எதை படைத்தான்? நாட்டத்தையும், அதிகாரத்தையும் அல்லவா! அதைக் கொண்டு நீங்கள் நாட்டமுடையவர்களாகவும், அதிகாரமுடையவர்களாகவும் ஆகி விட்டீர்கள். இப்போது நீங்கள் நிர்பந்திகளாகவோ, அதிகாரமற்றவர்களாகவோ இல்லை. இந்நிலையில் கற்களுக்கும் உங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன? அவைகளுக்கு நாட்டமோ, அதிகாரமோ கிடையாது. ஆனால் உங்களுக்கு இறைவன் இத்தன்மைகளை அருள் புரிந்திருக்கிறான்.

இதில் மிகப்பெரும் ஆச்சரியம்! எந்தத் தன்மைகளை இறைவன் உங்களுக்கு தந்திருக்கிறானோ அவை உங்களை கற்களைவ pட்டும் Nவுறாக பிரித்துக் காட்டி விட்டது. அவன் தந்ததை நீங்கள் வாங்கிக் கொண்டபின் உங்களை கற்களை போன்று எண்ணுவது எப்படிப்பட்ட அறவீனம்!

மேலும் இறைவன் நமக்கு கண்களை தந்து அதில் பிரகாசத்தையும் படைத்துள்ளான். இதற்குப் பின்னர் பார்ப்பது எனது நாட்த்தில் இல்லையென்று சொன்னால் எப்படி? அப்படியானால் நாம் குருடர்களா? இதுபோன்றே அவன் நமக்குள் நாட்டத்தையும், அதிகாரத்தையும் படைத்திருக்கிறான். அதைக் கொண்டு நாம் நாட்டமுடையவர்களாக, அதிகாரமுடையவர்களாக இருக்கிறோம். அதற்கு மாறாக எனக்குள் நாட்டமோ அதிகாரமோ இல்லையென்று சொன்னால் எப்படி?

இதை இப்படி புரிந்து கொள்ளுங்கள். அதாவது மனிதனிடமுள்ள நாட்டமோ, அதிகாரமோ மனிதன் தானாக தனக்குள் வரவழைத்துக் கொண்ட ஒன்றல்ல. மாறாக அவை மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்ட அவுனடைய படைப்புக்களாகும். இதில் மனிதன் என்பவன் ஒரு சுயார்த்தமற்ற, நாட்டமில்லாத, அதிகாரமற்றவனாக இருக்கிறான் என்றாலும், இறைவனை கொண்டு மனிதன் நாட்டமுடையவனாகவும் அதிகாரமுடையவனாகவும் இருப்பதால் தான் அவன் மீது வெகுமதியும், தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறெனில், அந்த அதிகாரம் மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. அதாவது மனிதன் நியாயமாக செயல்படுகிறான் எனில், இதற்கு முன்னால் நாம் எடுத்துக் காட்டிய உதாரணமாகிய தேன் டம்ளர் என்பது இறைவனுக்கு வழிபடுவதைப் போலும், விஷமுள்ள

டம்ளர் என்பது இறைவனுக்கு மாறு செய்வதைப் போலும், இறைதூதர்களாலும், ஆணையிடுவோராலும் எச்சரிக்கை செய்யப்பட்டதை போலும் என்று சொல்லலாம்.

இதில் நேர்வழி என்பது தேனைக் கொண்டு பலன் பெறுவதும், வழிகேடு என்பது விஷத்தைக் கொண்டு இறந்து போவதை போலுமாகும். இவ்விரண்டுமே இறை நாட்டத்தை கொண்டுதான் நிகழ்கிறது. அதேநேரம் வழிப்படுபவர் புகழப்படுவார். மாறு செய்பவர் இகழப்பட்டு தண்டனைக்கு உரியவராவார். அதாவது எந்த அளவுக்கு விசுவாசம் இருக்கிறதோ அந்த அளவுக்கு என்று சொல்லலாம்.

பின்னும் இப்படிப்பட்ட மனிதர்களை நேர்வழியில் அழைக்கக் கூடாதென குர்ஆனில் எங்குமே சொல்லப்படடவில்லை. மாறாக நேர்வழியும் வழிகேடும் இறைவனுடைய நாட்டப்படி தான் நிகழ்கிறது என்பதாக சொல்லப்படுகிறது. இதை குறித்து முன்பே நாம் கூறியுள்ளோம். இருப்பினும் இதை இன்னும் நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் இறைவன் தனது மாமறையில்...

ان الذين كفروا سواء عليهم ءانذرتهم ام لم تنذرهم لا يؤمنون

'இறைவனுடைய அறிவில் இறை மறுப்பாளர்களாகிப் போனவர்கள். அவர்களை நீங்கள் ஒன்று சேர்ந்து பயமுறுததினாலும் சரி, பயமுறுத்தாவிட்டாலும் சரி. அவர்கள் கண்டிப்பாக விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள்' என்று கூறுகிறான். இதில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அகிலமனைத்துக்கும் இரட்சகராக அனுப்பப்பட்டுள்ளனர். இதில் எந்த இறைமறுப்பாளர்கள் விசுவாசம் கொள்ளவில்லையோ அவர்களை குறித்து நபியவர்கள் மிகவும் கவலை கொண்டிருந்தனர். எதுவரை எனில்,...

فلعلك باخع نفسك على آثارهم ان لم يؤمنوا بهذا الحديث اسفا

'உமது பேச்சை அவர்கள் விசுவாசிக்காததால் அவர்களின் பிரிவால் வருத்தமடைந்து உமது ஆன்மாவை நீர் அழித்துக் கொள்ளாதீர்'

என்பதாக நபியவர்களுக்கு இறைவன் ஆறுதல் கூறுகிறான். அதாவது நமது அறிவில் யார் யார் இறை மறுப்புக்குள்ளவர்களாக இறக்கப் போகிறார்களோ அவர்கள் எந்த நிலையிலும் விசுவாசம் கொள்ளவே மாட்டார்கள். ஆகையால் நபியே! நீர் அவர்களைக் குறித்து கவலைப் பட வேண்டாம். அத்துடன் நீர் அவர்களுக்கு உபதேசிப்பதும், உபதேசிக்காமலிருப்பதும் ஒன்றுதான். அதேநேரம் அவர்களுக்கு நீர் செய்யும் உபதேசம் வீணாகாது. அத்துடன் நேர்வழியின் முடிவென்பது இறைவனை சார்ந்ததாகும் என்றும்,....

ما على الرسول الا البلاغ قل لا اسئلكم عليه من اجر ان اجري الا على رب العالمين

'இறைவன் இன்றிருந்தல்ல. ஆதியிலேயே எத்தனைபேர் நேர்வழி பெறுவர். எத்தனை பேர் வழிகெடுவர் என்பதையெல்லாம் நன்கு அறிவான். ஆனால் அதேநேரம் தனது தூதர்களை நேர்வழியில் அழைக்க வேண்டாமென அவர்களை அவன் விலக்கவுமில்லை. அன்றி யார் நேர்வழி பெறுவார்களோ அவர்களின் நேர்வழிக்கு இறைதூதர்கள் காரணமாகின்றனர். அவ்வாறின்றி யார் நேர்வழி பெறவில்லையோ அவர்களின் மீது இறைவனின் ஆதாரங்கள் நிலைநிறுத்தப்பட்டு விட்டன'.

பாருங்கள்! மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை இறைவன் தனது தூதராக நியமித்து பிர்ஔன் என்பாரிடம் அனுப்பினான். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் பிர்அவ்னிடம் செல்ல முயன்றபோது, அசரீரியாக ஒருசப்தம் மூஸாவே! பிர்ஔன் விசுவாசம் கொள்ள மாட்டான் என்றது. அதைக் கேட்ட மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமக்குள், அப்படியானால் நான் போவதால் என்ன பிரயோஜனம்? எனக் கேட்டுக் கொண்டனர். அதுபோது சங்கைமிக்க அறிஞர்களான பனிரெண்டு வானவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வருகைதந்து, நபியவர்களே! உங்களை எங்கே போக வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதோ அங்கே செல்லுங்கள். இது எப்படிப்பட்ட ரகசியம் என்றால் பலகாலம் முயன்றும்கூட இன்றுவரை எங்களுக்கு வெளியாகாத ஒன்றெனக் கூறினர்.

இதில் இறுதி வெளிப்பாட்டின் பலனை அனைவரும் தனது கண்களைக் கொண்டு, இறைவனுடைய விரோதிகள் அழிந்து போவதையும், இறைநேசர்கள் தமது அடிமைத்தனத்தின் மூலம் ஈடேற்றம் பெற்றதையும் கண்டதோடு, ஒரு கூட்டத்தில் எழுபதாயிரம் மந்திரவாதிகள் சாஷ்டாங்கத்தில் விழுந்தவர்களாக ஒரே குரலில்...

آمانا برب العالمين رب موسي وهارون

'அகிலத்தாரின் ரட்சகனை நாங்கள் விசுவாசித்தோம். அவன் மூஸா மற்றும் ஹாரூனின் ரட்சகனாக இருக்கிறான்' என்று கூறினர்.

மேலும் இறைவன் சர்வ சக்தன், அவன் நபியின்றி, வேதமின்றி ஒரு நொடிக்குள் அகிலத்திலுள்ள அனைவருக்கும் நேர்வழியைத் தந்து விட முடியும். ஆனால் இவ்வுலகை இறைவன் காரணத்திற்குரிய உலகமாக படைத்திருக்கிறான். இன்னும் அவனது ஒவ்வோர் அருட்கொடையிலும் அவன் தனது நுணுக்கத்தை கொண்டு வகைவகையான வேறுபாடுகளை தோற்றுவித்துக் கொண்டுமிருக்கிறான்.

அவன் நினைத்தால் உயிரினங்கள் எதற்குமே பசியே எடுக்காது. ஒருவேளை பசியெடுத்தால் ஒருவரது பெயரை சொல்வதால் அல்லது காற்றை சுவாசிப்பதால் அவர்களின் பசி பறந்துபோய் விடும் என்றால் போய்விடும். பூமியை கொத்தி உழுது பயிரிட்டு உணவு சமைக்கும் அவசியமே நேர்;ந்திருக்காது.

ஆனால் அவன் அவ்வாறு நாடவில்லை. இன்னும் அவைகளில் அவன் பல்வேறு வகையான வித்தியாசங்களையெல்லாம் கொண்டு வந்துள்ளான் ஒருவனுக்கு எவ்வளவு தருகிறான் எனில், கணக்கில்லாதோர் அவன் மூலம் தங்களின் வயிற்றை நிரப்பிக் கொள்கின்றனர். இவ்வாறே இன்னொருவனுக்கு அவன் தனது குடும்பத்தாருடன் மூன்று நாட்கள் வரை பசியாகவும், பட்டினியாகவும் வாழுகிறான். ஆக ஒவ்வொன்றிலும் அவனுடைய ஹிக்மத்தென்னும் நுணுக்கம் பல்வேறு வகைகளில் வெளியீடாகிக் கொண்டிருக்கிறது. இதில் சில அறிவற்றவர்கள், மூடர்கள், மடையர்கள், மதங்கெட்டவர்கள் இறையாட்சியைக் குறித்து, இறைவன் ஏன் இப்படி செய்தான்? இப்படி ஏன் செய்யவில்லை? என்றெல்லாம் குறை பேசுவதை நாம் பார்க்கிறோம். இத்தகையோருக்காகவே இறைவன் தனது வேதத்தில்...

يفعل الله مايشاء

;இறைவன் நாடியதைச் செய்கிறான்'

என்றும், இதில் அவனது மகத்துவம் என்னவெனில், அவன் எதைச் செய்தாலும், அவனை கேட்பவன் யாருமில்லை. அத்துடன் அவன்தான் அனைவரையும் கேள்வி கேட்பான்.

பாருங்கள்! ஒருவன் ஆயிரம் செங்கல்லை பணம் கொடுத்து வாங்குகிறான். அதில் ஐநூறு செங்கல்லை கொண்டு கழிப்பிடத்தையும், வாசல்படியையும் கட்டினான். மீதமிருந்த ஐநூறு செங்கல்லை கொண்டு ஒரு பள்ளிவாசலை கட்டினான். இதற்கிடையே ஒருவன் அவனிடம் வந்து, ஒரே மண்ணை கொண்டு ஒரே கையால் உருவாக்கப்பட்டு ஒரே நெருப்பில் வேக வைக்கப்பட்ட ஐநூறு செங்கல் மட்டும் என்ன பாக்கியம் செய்தது? அதை கொண்டு பள்ளிவாசலை கட்டினாய்? அடுத்த ஐநூறு செங்கல்லில் அப்படியென்ன ஓர் அசுத்தம் இருந்தது? அதை கொண்டு கழிப்பிடத்தையும், வாசல்படியையும் கட்டினாய்? எனக் கேட்பானாயின் அதற்கு அவன் என்ன பதில் சொல்வான் தெரியுமா? என்னுடைய பொருள். அதை என்னுடைய விருப்பத்திற்குத் தக்கவாறு என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்றுதான் கூறுவான்.

இதில் அழிந்து போகும் பொய்யான இவ்வுலகத்தின் நிலையே இவ்வாறு எனில், உண்மையான உலகைப் பற்றி என்ன சொல்ல முடியும்? நமது உயிர், பொருள், ஏன் அகிலமனைத்திற்கும் எவன் தனியொரு நாயனாக இருக்கிறானோ அவனுடைய செயலிலும் விருப்பத்திலும் தலையிட நமக்கென்ன அதிகாரம் இருக்கிறது?

என்ன? யாராவது அவனுக்குச் சமமாக, அல்லது அவனுக்கு அதிகாரியாக இருக்கிறார்களா? அவனிடம் சென்று ஏன் இப்படிச் செய்தாய் எனக் கேட்பதற்கு! அவன்தான் அனைவருக்கும் சக்ரவர்த்தி. ஈடும் இணையுமில்லாத அவன் நாடியதை செய்தான். செய்கிறான். செய்வான்.

மிக மோசமான எந்தவொரு தகுதிக்கும் அறவே லாயக்கில்லாத ஒருவன் சர்வ வல்லமை கொண்ட அரசனிடம் முறைத்துக் கொண்டால் அவன் ஆபத்தை விலை கொடுத்து வாங்குகிறான் என்றல்லவா அர்த்தம். இப்படிப்பட்ட மனிதனை காணும் யாருமே, மரியாதை

தெரியாதவனே! உனது எல்லையை தாண்டாதே! உனக்கு அரசன் சர்வ அதிகாரமும் உடையவனென்று தெரிந்தும் அவனுடைய விஷயத்தில் தலையிட உனக்கென்ன துணிச்சல்? என்றுதான் கேட்பான். இதில் வருத்தத்திற்குரிய ஓர் விஷயம் என்னவெனில், அழியும் இப் பொய்யான உலகையாளும் அரசனை ஆட்சேபிக்கிறவனின் தலையே தப்பாது என்னும்போது, சர்வ உலக அதிபதியான இறைவனுடைய விசயத்தில் தலையிடுவோனின் கதி என்ன?

அரசனென்ன? அவனிடம் ஊழியம் செய்யும் ஒரு சாதாரண வேலைக்காரன் கூட ஏதாவதொரு துறையில் விற்பன்னராக இருந்து, அரசனுக்கு அத்துறை பற்றிய அறிவில்லை எனில் அவனுடைய காரியத்தை அரசனால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாதென்று தான் சொல்வோம். அவ்வாறின்றி அரசன் புத்தியுள்ளவனாக இருந்தால் அவனுடைய வேலைக்காரனது விசயத்தில் ஆட்சேபணை ஏதும் செய்யாது தன்னுடைய வேலைக்காரன்தான் அத்துறையில் விற்பன்னன் என்றும், தன்னால் அதைப் புரிந்து கொள்ள முடியாதென்றும் இவ்விசயத்தில் தானொரு அறிவற்றவன் என்றும்தான் எண்ணுவான்.

இதுபோன்றே நிபுணர்களுக்கெல்லாம் நிபுணனாக, மறைவான பகிரங்கமான உலகங்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கும் இறைவனுடைய விசயங்களை தோண்டித்துருவ முயன்று முடிவில் எதுவுமே புரியவில்லை எனில், தன்னுடைய அறிவிற்கு விளங்கவில்லை என்பதற்காக ஆட்சேபிக்கிறவன் ஒன்று மார்க்கத்தை விட்டும் புரண்டு போவான். அல்லது பைத்தியக்காரனாக இருப்பான்.

ஆதலால், ஒருவிசயத்தை அல்லது ஒ:ரு பொருளை உண்மைதான் என நம்புவதற்கு அதை புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. பூமியிலிருப்போர் ஒன்றை நன்கு புரிந்துள்ளனர். அதாவது, காந்தம் என்பது இரும்பைத் தன் பக்கம் இழுக்கக் கூடியதென்று. இதில் காந்தத்தின் தன்மையை கொடுக்கப்பட்டுள்ள இரும்பு எடுத்த எடுப்பிலேயே காந்தத்தை நோக்கித் திரும்புவதில்லை. மாறாக 'குத்பு' எனனும் நட்சத்திரத்தை நோக்கித்தான் முதலில் அது திரும்புகிறது. அதேநேரம் இந்த உண்மையை யாராலும் விளக்கிக் காட்டவும் முடியாது. காரணம் மண்ணாலான இரும்புக்கும் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் அந்த நட்சத்திரத்திற்கும் அப்படியென்ன ஒரு தொடர்பிருக்க முடியும் என்பது நமக்குத் தெரியாதுதான். ஆனால் அந்த இரும்புத் துண்டுக்கு தன்னுடைய அஸலுக்குரிய இருப்பிடத்தை பற்றிய உணர்வுள்ளது.

இது ஒன்று மட்டுமல்ல. இப்புவியில் எண்ணிலடங்கா அதிசியங்கள் ஒவ்வொரு வினாடியும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. பெரும் பெரும் பிலாசபிகளான தத்துவவாதிகளெல்லாம் மண்ணை தோண்டித் துருவி ஆராய்ந்து பார்த்து முடிவில் அந்த மண்ணுக்கே இரையாகிப் போய்விட்டனர். அதன் எல்லையை கூட அவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அதேநேரம் அதை அவர்களால் மறுக்கவும் முடியவில்லை.

மேலும் மனிதன் எதை 'நான்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறானோ அந்த 'உயிர்' என்பதென்ன? அது என்ன பொருள்? மனிதனை விட்டு அது அகலும்போது அவன் ஒரு

மண்குவியலாக அல்லவா அசைவின்றியும் உணர்வற்றும் போகிறான். இறைவன் கூறுவதைப் பாருங்கள்...

وماتشاءون الاان يشاء الله رب العالمين

'மேலும் அகிலத்தாரை ரட்சிக்கும் இறைவன் நாடாதவரை நீங்கள் எவ்வாறு நாட முடியும்?'

هل من خالق غير الله

'என்ன? இறைவனை அன்றி வேறு படைப்பாளன் வேறு எவரேனுமுண்டா?'

له الخيرة

'அதிகாரம் அனைத்தும் அவனுக்கே உரியது'

الا له الخلق والامر تبارك الله رب العالمين

'கேட்கிறீர்களா! கிருஷ்டிப்பதும், கட்டளையிடுவதும் அவனுக்கு மட்டுமே உரியதாகும். மேலும் அகிலத்தாரின் இரட்சகனாகிய இறைவனே பரக்கத்திற்குரியவனாகும்.'

மேற்கண்ட வசனங்களனைத்தும் நமக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறும் விசயம், படைப்பதும், இல்லாமையிலிருக்கும் ஒன்றை உள்ளமையின் பக்கம் கொண்டு வருவதும் அவனுக்கு மட்டுமே உரிய ஒன்றேயன்றி இதில அவனுக்கு வேறு யாரும் கூட்டாக இல்லை என்பதும், அதிகாரமனைத்தும் அவனுக்கு மட்டுமே சொந்தமான ஒன்றென்பதையும் அவனுடைய விருப்பத்திற்கு மாறாக எதுவுமே நடைபெற முடியாதென்பதையும் நமக்கு உணர்த்திக் காட்டுகிறது. மேலும் அவன் கூறுவதைப் பாருங்கள்...

ذالك جزيناهم ببغيهم وانا لصادقون

'இது அவர்களின் கர்வத்திற்குரிய பிரதியாகும். அதை அவர்களுக்கு நாம் தந்தோம். இன்னும் திடனாக நாம் உண்மையாளர்களாகும்.'

وما ظلمناهم ولكن كانوا انفسهم يظلمن

'நாம் அவர்கள் மீது எந்த வகையான அநியாயமும் இழைக்கவில்லை. மாறாக அவர்கள்தான் தங்களின் ஆன்மாவுக்கு அநியாயம் இழைத்துக் கொள்கின்றனர்'

اعملوا ما شئتم انه بما تعملون بصير

'உங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு செய்யுங்கள். திடனாக இறைவன் நீங்கள் செய்வதை பார்த்துக் கொண்டிருக்கிறான்.'

وقل الحق من ربكم فمن شاء فاليؤمن ومن شاء فاليكفر انا اعتدنا للظالمين نارا احاط بهم سرادقها

'(நபியே!) கூறும். உண்மை அவர்களின் ரட்சகனிடமுள்ளது. எனவே விரும்புவோர் விசுவாசம் கொள்ளட்டும். விரும்புவோர் நிராகரிக்கட்டும். திடனாக நாம் அநீதமிழைப்போருக்கு நெருப்பை சித்தப்படுத்தி உள்ளோம். அதனுடைய சுவர் அவர்களை சூழ்ந்து விட்டது.'

قال قرينه ربنا ما اطغيته ولكن كان في ضلل بعيد قال لا تختصموا لدي وقد قدمت اليكم بالوعيد ما يبدل القول لدي وما

انا بظلام للعبيد

'(இறை மறுப்பாளர்களின் தோழனாகிய இப்லீஸ்) சொன்னான். 'எங்களின் ரட்சகா நான் அவனை வழிகெடுக்கவில்லை. மாறாக அவன் தனது முந்தைய காலத்தில் வழிகேட்டில்தான் இருந்தான்.(அதற்கிறைவன்) என்னிடம் வீணாக தர்க்கம் செய்யாதே. நான் முன்பே உங்களுக்கு தண்டனையைக் குறித்து எச்சரிக்கை செய்து விட்டேன். எனது வார்த்தை மாறாது. மேலும் நான் எனது அடியார்கள் மீது அநியாயம் செய்ய மாட்டேன்.'

மேற்கண்ட வசனங்களனைத்தும் அடியான்தான் அவனுடைய ஆன்மாவுக்கு தீங்கிழைத்துக் கொள்கிறான் என்பதை சுட்டிக் காட்டுகின்றன. அன்றிஅ வன் விதைத்ததை தான் முடிவில் அறுவடை செய்கிறான். அத்துடன் அவன் தடை செய்யப்பட்ட ஒன்றை நாடுவதற்குரிய அதிகாரமுடையவனே என்பதையும் மேற்கண்ட வசனங்கள் நமக்குத் தெளிவுடுத்துகின்றன.

இவ்விரு வசனங்களும் விசுவாசிகளால் நம்பிக்கை கொள்ளப்பட்ட வசனங்களோயாகும். சந்தேகத்திடமின்றி அடியானின் செயலை படைப்பவன் இறைவன்தான். இது போன்றே அடியான் இறைவனுடைய நாட்டமின்றி எதனையும் செய்ய முடியாதென்பதிலும் சந்தேகமில்லை. இதேபோல அடியான் தனது ஆன்மாவுக்கு அநியாயமும் செய்து கொள்கிறான். தனது தீய செயலுக்காக தண்டனைக்கும் உரியவனாகிறான். இருப்பினும் இவ்விரு பிரச்சனைகளும் எதிரும் புதிருமான இரு துருவங்களை போன்றவைகளாகும். இரண்டுமே ஒன்று சேராது. எனினும் இப்படித்தான் இஸ்லாமியக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. அதை நாம் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும்.

இஸ்லாமியக் கொள்கைக்குரிய தலைவராக போற்றப்படும் செய்யிதினா அலி ரலியல்லாஹு அன்ஹு என்பார், ஒருவருக்கு செய்த உபதேசத்தைப் பற்றி அபூநயீம் ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது 'ஹில்யத்துல் அவ்லியா' என்னும் நூலில், இமாம் ஷாபி, யஹ்யா பின் ஸலீம்,

இமாம் ஜஃபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹும் போன்றோரைக் கொண்டும், அவர்கள் இமாம் பாகர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டும், அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஃபர் தய்யார் ரலியல்லாஹு அன்ஹு என்பாரைக் கொண்டும், அவர்கள் ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டும் அறிவிக்கின்றனர். அதாவது,...

انه اخطب الناس يوما (فذكر خطبة ثم قال) فقام اليه رجل فمن كان شهد معه الجمل فقال يا امير المؤمنين اخبرنا عن القدر فقال بحر عميق فلا تلجه قال يا امير المؤمنين اخبرنا عن القدر قال سر الله فلا تكلفه قال يا امير المؤمنين اخبرنا عن القدر قال اما اذا ابيت فانه امر بين امرين لا جبر ولا تفويض قال يا امير المؤمنين ان فلانا يقول بالاستطاعة وهو حاضرك فقال علي به فاقاموه فلما رأه سل سيفه قدر اربع اصابع فقال الاستطاعة تملكها مع الله او من دون الله واياك ان تقول احدهما فترتد فاضرب عنقك قال فما اقول يا امير المؤمنين قال املكها بالله الذي ان شاء ملكنيها

'ஒருமுறை ஜனங்களிடையே ஹழ்ரத் அலியவர்கள் பேருரை ஒன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அப்போது ஜமலுடைய போரில் ஹழ்ரத் அலியோடு கலந்து கொண்ட ஒருவர் எழுந்து நின்று, அமீருல் முஃமினீனே! தக்தீரை(விதியை) பற்றி சொல்லுங்கள் என்று கேட்க, அதற்கவர்கள், அது ஆழமான கடல். அதில் கால் வைக்க வேண்டாம் என்றனர். பின்னர் மீண்டும் அவர், அமீருல் முஃமினீனே! தக்தீரை (விதியை)பற்றி சொல்லுங்கள் என்று கேட்க, அது இறைவனின் இரகசியம். வீணாக அதை சுமக்காதீர் என்றனர். மறுபடியும் அவர், அமீருல் முஃமினீனே! தக்கீரை(விதியை) பற்றி சொல்லுங்கள் என்று கேட்க,...

அதற்கவர்கள், நான் சொல்வதை கேட்க மறுக்கிறாய் எனில் கேட்டுக் கொள். அது ஒரு கட்டளை. இருவேறு வகையான கட்டளைகளுக்கு மத்தியில் மனிதன் அதிகாரமுடையவனுமல்ல, நிர்பந்தியுமல்ல என்று சொல்ல, அதற்கவர், அமீருல் முஃமினீனே! ஒருவன், மனிதன் தான் தனது சக்தியை கொண்டு செயலாற்றுகிறான் என்றும், அவன் தனக்கு முன்னால் தானே ஆஜராகி இருக்கிறான் என்றும் கூறுகிறான் என்று சொல்ல,...

அதுகேட்ட ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், அவனை என் முன்னால் கொண்டு வாருங்களென்று சொல்ல, ஜனங்கள் அவனை அவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தினர். அவனைக் கண்டதும் ஹழ்ரத் அலியவர்கள் இடையிலிருந்த தமது வாளை நாலங்குலம் அளவுக்கு உருவிக் கொண்டு அவனை நோக்கி...

நீ ஒரு காரியத்தை செய்வதற்குரிய ஆற்றலில் இறைவனோடு இணைந்திருக்கிறாய் என்றோ, அல்லது இறைவனின்றி நீ சுயமானதொரு ஆற்றலை பெற்றிருக்கிறாய் என்றோ, இதில் எதைச் சொன்னாலும் நீ இறைமறுப்பாளனாகி விடுவாய். நானும் உன்னை வெட்டி விடுவேன் என்று சொல்ல, அதுகேட்ட அவன், ஹழ்ரத் நான் வேறு எப்படித்தான் சொல்வது? என்று கேட்டான். அதற்கு ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், இறைவன் எனக்கு தந்த ஆற்றலைக்

கொண்டு செய்கிறேன் என்று சொல். அன்றி அவன் நாடினால் எனக்கு அதிகாரத்தைத் தருவான்.அவனின்றி எனக்கு எத்தகைய ஆற்றலும் இல்லை என்று சொல் என்றனர்.'

இதுதான் இஸ்லாமியக் கொள்கையாகும். அதாவது, மனிதன் கல்லைப்போன்று நிர்பந்தியாகவோ அல்லது சுயார்த்தமான அதிகாரமுடையவனாகவோ இல்லாத இவ்விரு நிலைகளுக்கும் மத்;தியில் இருக்கிறான். இதன் ரகசியத்தை இறைவனின்றி வேறு யாராலும் அறிய முடியாது. ஏனெனில் இதோர் ஆழிய சமுத்திரமாகும். இறைவனுடைய பேரருள் ஹழ்ரத் அலியவர்கள் மீது பொழியட்டும் பாருங்கள். அவர்கள் இப்பிரச்சனையை இரண்டே வார்த்தையில் தீர்த்து வைத்து விட்டனர்.

'இன்னொருவர் விதியைப் பற்றி வினவும்போது, மனிதன் ஒரு பாவத்தை இறைவனது நாட்டமின்றி செய்யவில்லை எனில், நிர்பந்தமாக செய்கிறானென்று சொல்லலாமா? ஆனால் அவன் பாவம் செய்ய வேண்டுமென்று நாடவேயில்லை. இருப்பினும் பாவம் செய்து விட்டானெனில், அவன் நிர்பந்தமான நிலையில் தானே பாவம் செய்தானென்று சொல்ல வேண்டும்? என்று கேட்க,

அதற்கு ஹழ்ரத் அலியவர்கள், இறைவன் நம்மை பாதுகாப்பானாக. இறைவனும் உலகிலுள்ள அரசர்களை போன்று திருடர்களையும் கொள்ளையர்களையும் பாதுகாக்கிறான் என்றா சொல்கிறீர்கள்? இருப்பினும் திருடர்களும், கொள்ளையர்களும் தமக்குரிய வேலையை செய்துதான் முடிக்கின்றனர். இதில் இறைவனன்னும் எதார்த்தமான சக்ரவர்த்தியின் அனுமதியின்றி ஒரு தூசி கூட அசையாது என்பதுதான் உண்மை என்று சொல்ல, வினா தொடுத்தவர், ஹழ்ரத் அலியவர்கள் இப்படியொரு பதிலைக் கூறி எனது வாயில் கல்லை வைத்து அடைத்து விட்டதால் என்னால் அதற்குமேல் எதுவும் பேச முடியவில்லை என்று கூறினார்'.

இதேபோல 'முஃதஸிலா' என்னும் கொள்கையுடைய அம்ர் பின் உபைத் என்பார் கூறுகிறார்: 'ஒரு அடியானின் செயல் இறைவனுடைய நாட்டத்தை கொண்டுதான் என்பதை யாருமே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நாள் ஒரு முறை நெருப்பை வணங்கும் ஒருவரோடு கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது நான் அவரை நோக்கி, நீர் ஏன் முஸ்லிமாகவில்லை? என்று கேட்க, அதற்கவர், இறைவன் நாடவில்லை என்றார். அதைகேட்ட நான், இறைவன் நாடத்தான் செய்கிறான். ஆனால் ஷைத்தான் தான் உம்மை விடமாட்டேன் என்கிறான் என்று சொல்ல, அதற்கவர்: அப்படியானால் இவ்விஷயத்தில் நான் இறைவனுக்கு சமமாக இருக்கிறேன்' என்றார்.

இச்சம்பவத்தை அவர், ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம், வந்து சொல்ல, அதைகேட்ட ஹழ்ரத் அலியவர்கள்: என்ன? இறைவனுடைய நாட்டமின்றி அவனை நிர்பந்தமாகவா இறைவன் பாவம் செய்ய வைப்பான்? அந்த நெருப்பு வணங்கியை பிடித்துள்ள நோய் என்ன தெரியுமா? ஒருவன் பசியோடு இருக்கிறான். பசியில் அவனுக்கு உயிரே போய்க்

கொண்டிருக்கிறது. உணவும் அவனுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளது. இத்தனைக்குப் பிறகும் அவன் சாப்பிட மாட்டேன் என்கிறான். ஏனென்று கேட்டால் இறைவன் நாடவில்லையாம்.

இந்நிலையில் அம்மூடனிடம், இறைவன் நாடவில்லை என்பதை நீ எவ்வாறு தெரிந்து கொண்டாய்? ஆதலால் நீ சாப்பிட முயற்சிசெய். அதன்பின் நீ இறைநாட்டத்தை கொண்டு சாப்பிடுவாய் எனக் கூறுங்கள் என்று சொல்லி விட்டு, இப்படிப்பட்ட விதண்டாவாதம் யாருக்கு வருமெனில், எவன்மீது மரணம் சவாரியாகி உள்ளதோ அவன்தான் இப்படியெல்லாம் பேசுவான். ஆகையால் எது நடந்தாலும் இறை நாட்டமின்றி நடைபெறாது என்றனர்.'

அடுத்து தண்டனையும் வெகுமதியும் எதற்காக? என்னும் கேள்விக்கு ஹழ்ரத் அலியவர்கள் கீழ்க்கண்டவாறு பதிலளிக்கின்றனர். இதனை இப்னு அபீஹாத்தம், இஸ்பஹானி ரஹிமஹுமல்லாஹ் போன்றோர் இமாம் ஜஃபர் சாதிக் மற்றும் இமாம் முஹம்மது பாக்கர் ரலியல்லாஹு அன்ஹுமா போன்றோரைக் கொண்டு அறிவிக்கின்றனர்...

قال قيل لعلي بن ابى طالب ان ههنا رجلا يتكلم فى المشيئة فقال يا عبد الله خلقك الله لما شاء او لما شئت ﷺ قال لما شاء قال فيمرضك اذا شاء او اذا شئت ﷺ قال بل اذا شاء قال فيميتك شئت ﷺ قال حيث شاء قال والله لو قلت غير هذا الضربت الذي فيه عيناك بالسيف ثم تلا على فما تشاءون الا ان يشاء الله هو اهل التقوي واهل المغفرة

'ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஒருவன், இங்கே இறைநாட்டத்தை பற்றி ஒருவன் பேசுகிறானென்று சொல்ல, அதற்கு அலியவர்கள்: ஏ! அடியானே! இறைவன் எதற்காக உன்னைப் படைத்தான் எனில், எதை அவன் உன்னில் நாடினானோ அதற்காக அல்லது எதை நீ நாடினாயோ அதற்காக என்று சொல்ல, அவன்: எதற்காக என்றான். அதற்கு ஹழ்ரத் அலியவர்கள், எப்போது அவன் நாடுகிறானோ அல்லது நீ நாடுகிறாயோ அப்போது அவன் உன்னை நோயுறச் செய்கிறானென்று சொல்ல, அதற்கவன்: எப்போது அவன் நாடுவான்? என்று திருப்பிக் கேட்க, அதற்கு அலியவர்கள்: அவன் நாடும்போது அல்லது நீ நாடும்போது அவன் உன்னை மரணிக்கச் செய்வான் என்று சொல்ல, அதற்கவன்: எப்போது நாடுவான்? என்று மீண்டும் திருப்பிக் கேட்க, அதற்கு அலியவர்கள்: அவன் நாடும்போது அல்லது நீ நாடும்போது உன்னை அங்கே அனுப்புவான் என்று சொல்ல, அதற்கவன் மீண்டும் எங்கே நாடுவான்? என்று கேட்க, அதற்கு அலியவர்கள் இறைவன் மீதாணை! இதையன்றி வேறு எதையாவது நீ பேசியிருந்தால் எதில் உனது கண்கள் இருக்கிறதோ அதை நான் (தலையை) வெட்டியிருப்பேன் என்றவர்கள், அதன்பின்....

மேலும் இறைவனையன்றி நீங்கள் எதை நாடுவீர்கள்? அவனே பயபக்தி கொள்ளத் தகுதியுடையவன். இன்னும் பாவங்களை மன்னிப்பவன்' என்னும் இறைமறையின் வசனத்தை ஓதிக் காட்டினர்.

ان الله خالقك كما شاء او كما شئت ﷺ فيستعملك كما شاء او كما شئت ﷺ فيبعثك يوم القيامة كما شاء او كما شئت ﷺ ايها السائل تقول لاحول ولا قوة الا بمن تفسيرها ان لا يقدر على طاعة الله ولا يكون قوة فى معصية الله فى الا مرين جميعا الا با الله ايها السائل الك مع الله مشيئة او دون الله مشيئة فان قلت ان لك دون الله مشئة فقد اكتفيت بها عن مشئة الله وان زعمت ان لك فوق الله مشئة فقد اكتفيت بها عن مشئة الله وان زعمت وان لك فوق الله مشئة فقد اذعيت مع الله شركا في مشئة.

ايها السائل الله يشج ويداوي فمنه الداء ومنه الدواء اعقلت عن الله امره الان اسلم اخوكم فقوموا فصافحوه لوان عندي رجلا من القدرية لاخذ برقبته ثم لا ازال آخذها حتي اقطعها فانهم يهود هذه الامة ونصار اها ومجوسها

அடுத்து இப்னு அஸாகிர் ரஹிமஹுல்லாஹ் என்பார், ஹாரிஸ் ஹமதானி ரஹிமஹுல்லாஹ் என்பாரைக் கொண்டு அறிவிக்கின்றனர். 'ஒருவன் ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து, அமீருல் மு.்மினீனே! எனக்கு விதியைப் பற்றி சொல்லுங்களேன் என்று கேட்க, அதற்கு ஹழ்ரத் அலியவர்கள், அது இறைவனின் ரகசியம். உனது விசயத்தில் அது மறைக்கப்பட்டுள்ளது. ஆதலால் அதை திறக்க முயலாதே என்று சொல்ல, அதற்கவன் மீண்டும், எனக்குச் சொல்லுங்களென்று கேட்க,...

'இறைவன் உன்னை படைத்தான். எவ்வாறெனில், எவ்வாறு அவன் விரும்பினாயோ அவ்வாறு' என்று சொல்ல, அதற்கவன்: எவ்வாறு? என்றான்.

'அவன் உன்னை கொண்டு எப்படிப்பட்ட வேலையை செய்விப்பான் எனில், எவ்வாறு அவன் விரும்பினானோ அல்லது நீ விரும்பினாயோ அவ்வாறு என்று சொல்ல, அதற்கவன், எவ்வாறு அவன் விரும்புவான்? என்று திருப்பிக் கேட்க, 'இறுதி நாளன்று உன்னை அவன் விரும்பியவாறு அல்லது நீ விரும்பியவாறு எழுப்புவான் என்று சொல்ல, அதற்கவன்: எவ்வாறு விரும்புவான்? என்று கேட்க, அதற்கு ஹழ்ரத் அலியவர்கள், 'கேள்வி கேட்போனே! எனக்கு எந்தச் சக்தியுமில்லை. எவ்வித ஆற்றலுமில்லை எனக் கூறுகிறாயே! இதை நீ இறைவனுடைய தாத்(தன்மயத்)தைக் கொண்டுதானே சொன்னாய்? அதற்குரிய விளக்கம் உனக்கு என்னவென்று தெரியுமா? என்று கேட்க, அதற்கவன், இறைவன் அமீருல் மு.்மினீன் அவர்களுக்கு எத்தகைய ஞானத்தை அருள்புரிந்துள்ளானோ அதைக் கொண்டு எனக்கு சொல்லித் தாருங்களென்று கேட்க, அதற்கு ஹழ்ரத் அலியவர்கள்: வழிப்படுவதற்குரிய சக்தியோ அல்லது பாவம் செய்வதற்குரிய ஆற்றலோ எனக்குக் கிடையாது. இரண்டுமே இறைவனால் கொடுக்கப்பட்டதாகும் எனக் கூறியவர்கள்:' மீண்டும் அவனை நோக்கி,...

'கேள்வி கேட்போனே! உனக்கு உனது இறைவனை கொண்டோ அல்லது இறைவனின்றியோ ஒரு செயலை செய்வதற்குரிய அதிகாரமுள்ளதென்று கூறுவாயாயின் இந்நிலையில் நீ இறை நாட்டத்தை பொருந்திக் கொள்ளவில்லை என்பது கருத்தாகும். அதுபோது நீ உனது விருப்பத்திற்குத் தகுந்தவாறு செயலாற்றுவாய். இந்நிலையில் இறைவன் நாடிலானென்ன?

நாடாவிட்டாலென்ன? இனி இறைவனின்றி உனக்கென்ன ஒரு தனித்தன்மையான அதிகாரம் இருப்பதாக நீ நினைப்பாயாகில் இந்நிலையில் நீ இறைநாட்டத்தில் இணை வைத்தவனாகிறாய். அன்றி நிச்சயமாக இறைவன் தான் ஒரு செயலை உருவாக்குகிறான். அவனைக் கொண்டுதான் நீ நோய் வாய்ப்படுகிறாய். அவனைக் கொண்டுதான் அதற்குரிய மருந்தும் அளிக்கப்படுகிறாய். இப்போது நீ இறைக்கட்டளை என்னவென்பதை விளங்கிக்க கொண்டாயல்லவா! என்று கேட்க, அதற்கவன்: ஆம். என்று சொல்லவும், ஹழ்ரத் அலியவர்கள் அங்கிருந்தோரை நோக்கி, இப்போது உங்களின் சகோதரன் முஸ்லிமானான். எழுந்து நின்று அவனோடு கைலாகு கொடுங்கள் என்றவர்கள், மேலும் யாராவது என்னிடம், மனிதனை தனது செயலுக்குரிய படைப்பாளனாக எண்ணுவானாயின் அல்லது நன்மை தீமைக்குரிய விதியை மறுப்பானாயின் நான் அவனுடைய பிடரியைப் பிடித்து எதுவரை அழுத்துவேன் எனில், இறுதியில் அதை நான் வெட்டிவிடுவேன். ஏனெனில் அவன் இந்த சமூகத்தில் யூத, கிறித்துவ, நெருப்பு வணங்கியை போலிருக்கிறான்' என்றனர்.

மேற்கண்ட வாக்கியத்தில் ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் யூதன் எனக் கூறியதன் கருத்து, அவர்கள் மீது இறைவனின் சாபக்கேடு இருப்பதாலே. அது மட்டுமின்றி யூதர்கள் 'கைரில் மஃக்ழூபி அலைஹிம்' என்னும் வசனத்திற்கொப்ப இறையருளை விட்டும் விரட்டப்பட்டவர்களாகும். அடுத்து, கிறித்துவர், நெருப்பை ஆராதிப்பவர் எனக் கூறியதன் கருத்து, கிறித்துவர்கள் இறைவனை மூன்று என்பதாக நம்புகின்றனர். இவ்வாறே நெருப்பை ஆராதிப்பவர்களும் இறைவனை இரண்டு என்பதாக நம்புகின்றனர். அத்துடன் இவர்கள் எண்ணிலடங்கா படைப்பாளன் இருப்பதாகவும் மனிதர்களையும், பூத கணங்களையும் கூட இவர்கள் தமது செயலுக்குரிய படைப்பாளனாகவும் நம்புகின்றனர்.

**விதியும் மதியும்**

இனி விதி என்பதும் மதி என்பதும் மனித அறிவைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகும். இப்பிரச்சனையில் மனிதர்கள் அதனை தலைகுனிந்து ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியேயில்லை. இதைக்குறித்து இறைவேதம் எப்படிச் சொல்கிறது என்று பாருங்கள்...

لا يسئل عما يفعل وهم يسئلون

'எந்தவொரு செயலை குறித்தும் அவனிடம் யாரும் கேட்க முடியாது'

இதில் ஞானவான்களின் தலைவரென போற்றப்படும் இமாம் ஜஃபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹு என்பார்...

لا جبر ولا قدر ولكن امر بين امرين

'விதியும் மதியும் ஒரு பொருளல்ல. ஆனால் இவ்விரண்டிற்கும் இடையேதான் உண்மை இருக்கிறது.' எனக் கூறுகின்றனர்.

இந்நிலையில் விதியை குறித்து வாதிப்போரின் நம்பிக்கையானது, மனிதன் எந்தவொரு செயலின் மீதும் அதிகாரமுடையவனல்ல என்றும், அவனுடைய அசைவுகள் அனைத்தம் புற்பூண்டுகளின் அசைவைப் போன்றதே என்றும் கூறுகின்றனர். இவ்வாறே மதியைக் குறித்து வாதிப்போரின் நம்பிக்கையானது, இவர்கள் மனித சக்தியை மட்டுமே நம்புகின்றனர். மேலும் மனிதன் தனது செயல்பாடுகளின் மீது முழுமையான அதிகாரமுடையவன் என்பதாக. அதாவது, மனிதன்தான் தனது செயலை படைக்கிறான் என்றும் கூறுகின்றனர்.

இதுபற்றி இமாம் ஜஃபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹு என்பார் கூறும்போது, இவ்விரு சாராரின் எண்ணமும் தவறாகும். காரணம் இதில் மிகைப்போ அல்லது குறைவோ இன்றி வேறு எதுவுமேயில்லை. அதேநேரம் உண்மைநிலை என்பது இவ்விரு நிலைகளுக்கும் மத்தியிலுள்ள விதியும் மதியுமேயாகும். ஆனால் மனித அறிவால் இம்மத்திய நிலையை விளங்கிக் கொள்ள முடியாது. எனவே இப்பேச்சு திடுக்கத்தையும், இயலாமையையும் ஏற்படுத்துவதால் மனிதர்கள் துன்பத்தில் சிக்கிக் கொள்கின்றனர்.

அத்துடன் மனிதர்கள் தங்களின் வாதப் பிரதிவாதங்களை கொண்டு இதைப் புரிந்து கொள்ள முயன்று முடிவில் விளங்காமல் போவதால் மறுக்கவும் துவங்குகின்றனர். இனி விசுவாசிகளுக்கு இதைப் பற்றிய பகிரங்கமான ஆதாரம் என்பது குர்ஆன் என்னும் வேதமேயாகும். ஏனெனில் அதில் எல்லாமே விளக்கப்பட்டுள்ளது. அதாவது, செயல்களனைத்தும் இறையாற்றலை கொண்டும் நாட்டத்தைக் கொண்டும் நிகழும் என்பதாக. அதேநேரம் நன்மை, தீமைக்குரிய நிலை என்பது மனிதர்களை நோக்கியே திருப்பப்படுகின்றன.

**சிருஷ்டிகளின் செயல்பாடுகள்**

وما كان الله ليظلمهم ولكن كانوا انفسهم يظلمون. والله خلقكم وما تعملون

'இறைவன் அவ(மனித)ர்களுக்கு எந்தத் தீங்கும் இழைப்பதில்லை. எனினும் அவர்கள்தான் தங்களின் ஆன்மாவுக்குத் தீங்கிழைத்துக் கொள்கின்றனர். மேலும் இறைவன்தான் உங்களையும் உங்களுடைய செயல்களையும் படைத்தான்.'

மேற்கண்ட வசனத்தில் செயலுக்குரிய படைப்பை தனக்குரியதாக பேசிய இறைவன் செயலின் வெளிப்பாட்டை தனது அடியார்களுக்குரியது என்பதாக பேசுகிறான்.நமது நம்பிக்கைக்குரிய பார்வையில் இவ்விரண்டுமே சரியானவைதான். பின்னும் ஒரு விசயத்தை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, இறைவன்தான், ஒரு செயலை படைக்கிறான். அதேநேரம் அதை செயல்படுத்துவதை மனிதன் பக்கமாக திருப்புகிறான். இதைத் தவிர வேறு எதையும் இவ்விஷயத்தில் நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

அடுத்து இஸ்லாமிய வாழ்வியலுக்குரிய நடைமுறைச் சட்டத்தில் ஏவல், விலக்கல் என்னும் நிலையை மனிதன் மீதுத நடத்த வேண்டுமாயின் மனிதன் அதிகாரமுடையவனாக இருந்தாக வேண்டும். இதைப்பற்றி ஷாரிஃ (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும்நமக்கு விளக்கம் தந்துள்ளனர். ஆக இவ்விரண்டுமே வாழ்வியலுக்குரிய நடைமுறைச் சட்டங்களை கொண்டு நமக்கு விளக்கித் தரப்பட்டு விட்டதால் நாம் இதைக் குறித்து விவாதித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு விதியையும் மதியையும் நம்ப வேண்டும்.

**விதி, மதியின் மீது விசுவாசம்**

நடுநிலையான கட்டளைகள் மீது விசுவாசம் கொள்வது அவசியமாகும். அதைவிடுத்து அதைப்பற்றி யோசிப்பதும், நமது அறிவைக் கொண்டு விளங்க முற்படுவதும் அறிவீனத்திற்கும் வழிகேட்டுக்குமே வழிவகுக்கும். எனவே மனிதர்களாகிய நமக்குரிய கடமை என்பது செயலாற்றுவது மட்டுமே. மற்றவைகளை இறைவன் வசம் ஒப்படைத்து விட வேண்டும். இதைப் பற்றி...

اعملوا فكل ميسر لما خلق له

'செயலாற்றுங்கள். ஏனெனில் எதை செய்வதற்காக மனிதர்கள் படைக்கப்பட்டுள்ளார்களோ அது அவர்களுக்கு இலேசாக்கப்பட்டுள்ளது' எனக் கூறப்படுகிறது.

ஆதலால் ஷாரிஃ (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ) அவர்களின் வாயிலாக அதைப் பற்றி கேட்டபின், அதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக மறுக்கவோ அல்லது இலேசாக எண்ணவோ நினைக்கவோ செய்வோமாயின் நாம் நமது மார்க்கத்தை விட்டு விட்டு வேறொரு மார்க்கத்தை தேடிக் கொள்வதே உத்தமம்.

காரணம் நம்பிக்கையின் அசல்நிலை என்பது ஷாரிஃ (முஹம்மத்) ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாயிலாகக் கேட்டபின் அதை மறு பேச்சின்றி ஏற்றுக் கொள்வதுதான். அதன்பின் அதில் எவ்விதத் தயக்கமும் காட்டக் கூடாது. அதற்கு மாறாக தனது அறிவை, நம்பிக்கையைவிட முதன்மைக்குரிய ஒன்றாக நினைத்தால் அந்நிலையில் அவ்வாறு நினைப்பவரின் நம்பிக்கை அறிவின் பார்வையில் வேண்டுமானால் முழுமை பெற்றதாக தெரியுமே அன்றி ஷாரிஃ (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸல்லம் அவர்களிடம் முழுமை பெறாது.

**நேர்வழி, வழிகேடு, இறைநாட்டம்**

நாம் விதி மதி சம்பந்தமான பிரச்சனையில் அதை உறுதிப்படுத்தும் விசயத்தில் மேற்கண்ட பாதையில்தான் செல்ல வேண்டும். அதனால்தான் இப்பிரச்சனையில் நாம் நடுநிலைக்குரிய பாதையைத் தேர்ந்தெடுத்தோம். இருப்பினும் பேனா சிலபோது தனது முகத்தைக் காட்டாமல்

இருப்பதில்லை. ஆதலால் இறைவன் நம்மை பாவத்திலிருந்தும் தவறுகளிலிருந்தும் பாதுகாப்பானாக.

والله يضل من يشاء ويهدي من يشاء

'மேலும் இறைவன் தான் நாடியவரை நேரான பாதையில் செலுத்துவான். இவ்வாறே தான் நாடியவரை வழி தவறவும் வைப்பான்.'

ஒரு மனிதனில் நேர்வழியையும் வழிகேட்டையும் தோற்றுவிப்பவன் இறைவன்தான். இதில் அவன், தான் நாடியவரை வழிதவறச் செய்கிறான். இவ்வாறே தான் நாடியவரை நேரான பாதையிலும் செலுத்துகிறான். அவனால் வழிதவற வைக்கப்பட்டவனை எவராலும் நேர்வழியில் ஒருபோதும் செலுத்த முடியாது. இது குர்ஆன் மற்றும் நபிமொழியைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் குர்ஆன் நேர்வழிக்குரிய தொடர்பை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன்தான் இணைத்துப் பேசுகிறது. இவ்வாறே வழிகேட்டை ஷைத்தானுடன் இணைத்துப் பேசுகிறது. ஆதலால் நாம் இவ்விரண்டின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

**நேர்வழி என்பதன் கருத்து**

நேர்வழி என்பது இருவகைப்படும். ஒன்று: நேரான பாதையைக் காட்டித் தருதல். மற்றொன்று: நேரான பாதையில் அவரது லட்சியத்திற்குரிய எல்லைவரை அவரைக் கொண்டு போய் சேர்த்தல். இரண்டாவது வகை இறைவனுக்கு மட்டுமே உரிய ஒன்றாகும். இது யாருடைய அதிகாரத்திலும் இல்லாத ஒன்றாகும்.

இனி முதல்வகை நேர்வழி என்பது குர்ஆன் மற்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு சம்பந்தப்பட்டதாகும். இவ்விருவரும் நேரான பாதையை காட்டுகின்றனர். அதேநேரம் அந்த நேர்வழியில் லட்சியத்திற்குரிய எல்லைவரை கொண்டு போய் சேர்க்குதல் என்பது இறைவனுடைய செயலாகும். அதனால்தான் இறைவேதத்தில்...

انك لاتهدي، انك لتهدي

'திடனாக நீர் நேர்வழி காட்டமாட்டீர்' என்றும், 'திடனாக நீர் நேர்வழி காட்டுவீர்' என்றும் இருவகையாகக் கூறப்படுகிறது.

இதில் இவ்விரு வாக்கியங்களுமே சரியானவைதான். முதல் வாக்கியத்தில் நேர்வழி காட்டமாட்டீர் எனக் கூறப்பட்டதற்கு காரணம், தேடப்பட்ட லட்சியத்திற்குரிய எல்லை வரை நீர் கொண்டு சேர்க்க மாட்டீர் என்றும், இரண்டாவது வாக்கியத்தில், நீர்தான் நேர்வழி காட்டுவீர் என்றும் உறுதி செய்யப்பட்டிருப்பதை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அதனால்தான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸ்லலம் அவர்களுக்கு நேர்வழியையும்

ஷைத்தானுக்கு வழிகேட்டையும் காரணமாக்கப்பட்டுள்ளது. ஆக உண்மையில் இறைவன்தான் எல்லோரையும் நேர்வழியில் செலுத்துபவனாகவும் அருள் பாலிப்பவனாகவும் இருக்கிறான்.

அடுத்து இஸ்லாமியக் கொள்கையில் மண்ணறையின் வேதனையை குறித்து நம்பிக்கை கொள்வது மிகமிக அவசியமாகும். இங்கே மண்ணறை என்பதன் கருத்து 'ஆலமுல் பர்ஸக்' என்பதாகும். இது இவ்வுலகத்திற்கும் மறுமைக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு உலகமாகும். இங்கே வைத்துத்தான் இறைமறுப்பாளர்கள் மீதும் பெரும்பாவிகளான விசுவாசிகள் மீதும் வேதனை நடத்தப்படுகிறது. இவர்கள் இந்த உலகத்தை மிகுந்த வேதனையோடும் கஷ்டத்தோடும் கழிப்பார்கள்.

இவர்களையன்றி இறைவனுக்கு வழிப்பட்டோரும் அவனது கட்டளையை ஏற்று நடந்தோரும் அவனுடைய பேரருளைக் கொண்டு நல்லபலனை பெறுவார்கள். அத்துடன் இறைவன் தனது அருட்கொடைகளை தான் விரும்பியவாறு அவர்கள்வரை கொண்டும் சேர்ப்பான். அதுமட்டுமின்றி முன்கர் நகீர் என்னும் இரு மகத்தான பயங்கரத் தோற்றம் கொண்ட வானவர்கள் கறுப்பு நிறமும் நீலநிறக் கண்களுமுடையவர்கள் விசாரணைக்காக மண்ணறைக்கு வருகை தருவார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரிடமும் இறைவனை பற்றியும் அவனது தூதரைப் பற்றியும் அவர் ஏற்று வாழ்ந்த மார்க்கத்தைப் பற்றியும் கேள்வி கேட்பார்கள். இதில் இறையருளைக் கொண்டு அவர்களின் கேள்விக்;கு சரியான பதிலளிப்போர் மீது இறைவனது அருட்கொடைகளின் கதவுகள் திறக்கப்பட்டு அவர்கள் புதுமணத் தம்பதிகளை; போன்று கனவுலகில் சுகமாக இருப்பார்கள். பின்னும் அவ்விருண்ட மண்ணறை அவர்களுக்கு சுவர்க்கத்தின் பூங்காக்களில் ஒரு பூங்காவாக மாற்றப்படும். அவ்வாறின்றி அவரது பதில் சரியில்லாது போனால் அவர்களுக்கு வேதனையையும் துன்பத்தையும் தவிர வேறொன்றும் மிஞ்சாது. அத்துடன் அவர்களது மண்ணறை நரகின் படுகுழியில் ஒரு படுகுழியாக மாறிப்போய் விடும்.

இதை குறித்த வேத வசனங்களும் நபிமொழிகளும் கணக்கின்றி காணப்படுகின்றன. நாம் அவைகளையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அத்துடன் மண்ணறை சம்பந்தமான விஷயங்கள் அனைத்தையும் நாம் நம்முடைய இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்க வேண்டும். மேலும் மண்ணறை சம்பந்தமான விசயங்கள் ஆலமுல் பர்ஸகிலோ அல்லது ஆன்மாவிலோ எதில் இறைவன் நாடுகிறானோ அதில் நடக்கும்.

இனி சுன்னத் வல் ஜமாஅத் என்னும் அமைப்பை சார்ந்த அறிஞர்கள், இவ்வளவு மட்டும் தெரிந்து கொள்வதே போதுமானதென்றும் இதை உணர வேண்டுமென்ற அவசியமில்லை என்றும் கூறுகின்றனர். இதில் சில அறிஞர்கள், முன்கர் நகீர் என்னும் அவ்விரு வானவர்களும் பாவம் செய்தவர்களிடம்தான் பயங்கரமான தோற்றத்தோடு வருவார்களென்றும், நல்லோரிடம் 'பஷீர்' (சுபச் செய்தியாளர்கள்) என்னும் வானவர்கள் வருவார்களென்றும் கூறுகின்றனர். இக்கருத்தும் ஆதாரமற்ற ஒன்றல்ல. இருப்பினும் நபிமொழிகளில் இதை பற்றி மிகமிகக் குறைவாகவே பேசப்படுகிறது.

இன்னும் வருகைதரும் வானவர்கள் எல்லாவகையான மனிதர்களிடமும் கேள்வி கேட்பார்களென்றும், அவர்களில் சிலர் பதிலளிக்க முடியாமல் மறுப்பார்களென்றும், சிலர் சரியாக பதிலளிப்பார்களென்றும் கூறப்படுவதால்தான் அவர்களுக்கு முன்கர் என்றும் நகீர் என்றும் பெயரிடப்பட்டதாக மேற்கண்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

அதுமட்டுமின்றி ஒவ்வோர் மனிதனிடமும் அவனது செயல்பாடுகளை குறிக்க இரு வானவர்கள் நியமிக்கப்பட்டடுள்ளதால் அவ்விருவரும் எல்லா இடத்திலும் எல்லா நேரத்திலும் ஒரே மாதிரியான தோற்றத்திலும் மொழியைக் கொண்டும் வெளிப்படுவார்கள்.

பஸ்ஸாஸ் போன்ற நூலாசிரியர்கள் தமது மார்க்கத் தீர்ப்பில், முன்கர், நகீர் என்னும் வானவர்களுடைய விசாரணை இறந்து போன ஒரு மனிதனிடம் அவன் இறந்து அடக்கம் செய்யப்பட்ட பின் நடைபெறுவதில்லை என்றும், மாறாக வெளிரங்க உலகின் தொடர்பை விட்டும் ஒரு மனிதன் எப்போது நீங்குகிறானோ அப்போதே துவங்கி விடுகிறதென்றும், பின்னும் இறந்தவனை ஒரு பெட்டியிலிருந்து இன்னொரு பெட்டிக்கோ அல்லது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கோ மாற்றினாலும் சரி. அல்லது விலங்குகள் அவனை தின்று விட்டாலும் சரி. அந்த இடத்தில் வைத்தே விசாரணை நடத்தப்படும் என்றும் கூறுகின்றனர். இதுபோன்றே இறை தூதர்களிடம் அவர்களது மண்ணறையில் வைத்து அவர்களுக்கு விசாரணை நடத்தப்படுவதில்லை. அதற்கு மாறாக அவர்களிடம் ஏகத்துவம் பற்றியும் அவர்களுடைய சமூகத்தார் பற்றியுமே விளக்கம் கேட்கப்படும். அப்போது அவர்களின் கண்ணியமும் மகத்துவமும் முழுமையாக கவனத்தில் கொள்ளப்படும்.

**விசுவாசிகளின் குழந்தைகளிடம் விசாரணை**

இறைநம்பிக்கையாளர்களது குடும்பத்தில் இறந்துபோகும் குழந்தைகளிடம் விசாரணை நடத்துதல் சம்பந்தமாக இஸ்லாமிய அறிஞர்களிடையே கருத்து பேதம் காணப்படுகிறது. இதில் பெரும்பான்மையோர் விசாரணை நடத்தப்படுமென்றே கூறுகின்றனர். எனினும் அவ்வானவர்கள் அக்குழந்தைகளுக்கு விசாரணை என்னும் பெயரில், 'தல்கீனை' சொல்லிக் கொடுப்பார்கள். அதாவது, எனது இறைவன் அல்லாஹ், எனது இறைத்தூதர் முஹம்மத் நபி, எனது மார்க்கம் இஸ்லாம் என சொல்லிக் கொடுப்பார்கள். அல்லது இறைவன் அக்குழந்தைகளுக்கு இல்ஹாம் என்னும் உதிப்பின் மூலம் அக்கேள்விகளுக்குரிய பதில்களை சொல்லிக் கொடுப்பான். எவ்வாறு ஈஸா நபியவர்கள் பிறந்ததும் பேசினார்களோ அவ்வாறு என்பதாகக் கூறுகின்றனர்.

**இணை வைப்போரின் குழந்தைகளிடம் விசாரணை**

இணைவைப்போரது குடும்பங்களில் இறந்து போன குழந்தைகளிடம் விசாரணை நடத்துதல் சம்பந்தமாக இமாம் அபூஹனீபா என்பார் எதுவுமே சொல்லவில்லை. காரணம் அவர்கள் அதற்குரிய ஆதாரத்தில் கருத்து வேறுபாட்டை கண்டதால் மௌனம் சாதித்தனர். ஆனால் வேறுசில அறிஞர்கள் அக்குழந்தைகள் நரகத்திற்கு செல்லும் என்பதாக அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விஷயத்தில் முஹம்மத் பின் ஹுஸைன் என்பார், இறைவன்

குற்றமற்றவர்களை வேதனை செய்ய மாட்டான் என்றும், அக்குழந்தைகளிடம் விசாரணை நடத்தப்பட மாட்டாது என்றும், தான் நம்புவதாகக் கூறுகிறார்.

அடுத்து ஜின்களாகிய பூதகணங்களிடமும் மண்ணறையில் விசாரணை நடத்தப்படும். காரணம் அதை குறித்த ஆதாரங்கள் கணக்கின்றி காணப்படுகின்றன. இதில் இமாம் அபூ ஹனீபா ரஹிமஹுல்லாஹ் என்பார் ஜின்கள் நன்மை பெறும் என்னும் விசயத்தில் தமது வாயை மூடிக் கொள்கின்றனர். அதேநேரம் அவைகள் வேதனை செய்யப்படும் என்பதை ஆமோதிக்கின்றனர். இதுபோன்றே இமாம் அப்துல் பர்ரு ரஹிமஹுல்லாஹ் என்பார், இறை மறுப்பாளரென தீர்மானிக்கப்பட்டோரிடம் விசாரணை எதுவும் நடைபெறாது என்றும், அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படாமலேயே நேரடியாக வேதனைக்குள் இறக்கப்பட்டு விடுவார்கள் என்றும், அதேநேரம் நயவஞ்சகர்களான முனாபிக்குகளிடம் விசாரணை நடத்தப்படுமென்றும் கூறுகிறார்.

இவ்வாறே நபிமொழிகளின் விரிவுரையாளர்களில் சிலர், விசுவாசிகளில் பிராணத்தியாகம் செய்தோரும், இறைபாதையில் தம்மை அர்ப்பணித்தோரும், வெள்ளி மற்றும் வியாழன் போன்ற நாட்களில் இறந்தோரும், தினந்தோறும் சூறா முல்க் என்னும் அத்தியாயத்தை ஓதிவந்தோரும், தாகத்தால், வயிற்றுப் போக்கால் இறந்தோரும் மண்ணறையின் விசாரணையை விட்டும் நீங்கி விடுவார்கள் என்பதாகக் கூறுகின்றனர்.

மேலும் இமாம் திர்மிதி, இமாம் அப்துல் பர்ரு ரஹிமஹுல்லாஹ் போன்றோர், மண்ணறைக்குரிய விசாரணை என்பது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தாருக்கு மட்டுமே உரிய ஒன்றாகும் ஒன்றும், பர்ஸகுடைய உலகில் அவர்களை வேதனை செய்வதில், அவசரம் காட்டப்படுவதற்குரிய நுணுக்கமானது, அவர்களுடைய பாவங்களை அவர்களை விட்டும் விரைவாக நீக்கி மறுமையில் அவர்கள் தூய்மையானவர்களாக வந்துசேர வேண்டும் என்பதற்காகவே என்று கூறுகின்றனர். இதே கருத்து 'ஷரஹுல் அகீதா தஹ்தாவி' என்னும் நூலிலும் காணப்படுகிறது.

**மண்ணறை வேதனைகள்**

பெரும்பாலான நபிமொழிகளில் பாவம் செய்தோரது மண்ணறைகளில் எழுபது பாம்புகளும் தேள்களும் இருக்குமென்றும், அவைகளின் விஷத் தன்மையானது, அதில் ஏதாவது ஒன்று இப்பூமியை தீண்டுமாயின் இப்பூமியிலுள்ள தாவரங்களனைத்தும் எரிந்து சாம்பலாகிப் போய்விடும் என்றும், கூறப்படுகிறது. இதில் அப்பாம்பு,. தேள்களின் தோற்றத்திற்குரிய எதார்த்த நிலை என்பது என்னவெனில், மனிதனுடைய குணங்களும் தீய நடத்தையும்தான் அப்படிப்பட்ட தோற்றத்தை பெறுகின்றன என்றும் கூறப்படுகிறது. அவைகளைத்தான் மண்ணறையில் இறந்தவன் பாம்பாகவும், தேளாகவும் பார்க்கிறான். இதில் எழுபது என்னும் எண்ணிக்கை அதிகத்தை குறிப்பதற்காக என நபியவர்கள் கூறுகின்றனர். அதேநேரம் இவைகள் மீது நம்பிக்கைகொள்ள வேண்டுமென்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இது இரு வகைப்படும்.

ஒன்று: இந்த பாம்பு தேள்களின் தோற்றங்களும், அவை இறந்தோனை வேதனை செய்வதும் உண்மைதான் என்பதோடு அவற்றைப் பெரும்பான்மையான அகப்பார்வை உடையோர் பார்த்தும் உள்ளனர். ஆனால் நம்மால் அவற்றை பார்க்க முடியாது.

மேலும் இவ்வுலகில் தனது வெளிப்பார்வையை கொண்டு வானவர்களின் உலகத்தை காணுதல் என்பது ஒரு சராசரி மனிதனாலல் இயலாத காரியமாகும். அதேநேரம் யாருடைய பார்வை வானவர்களின் உலகை காணும் சக்தி பெற்றுள்ளதோ அவர்களுக்கு இது ஒரு சிரமமான காரியமேயில்லை. உதாரணமாக, சில இறைத்தூதர்களும் இறைநேசர்களும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னும் வானவரை பொதுவான தோற்றத்தில் பார்த்துள்ளனர். அதேநேரம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவரை அவரது சொந்த உருவத்திலேயே பார்த்துள்ளனர். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறுயாரும் அவரை அவருடைய சொந்த உருவத்தில் பார்த்ததில்லை. இப்படி பார்ப்பதோ அல்லது பார்க்க வைக்கப்படுவதோ இறைவனுடைய திருஷ்டாந்தமாகும். இது தேகத்தை கொண்டாயினும் சரி. அல்லது ஆன்மாவை கொண்டாயினும் சரியே.

பாருங்கள்! ஒரு மனிதனுக்கு முன்னால் பெரும்மலையொன்று உள்ளது. அவனும் தனது கண்களை திறந்து கொண்டுதானிருக்கிறான். இந்நிலையில் இறைவன் அவனுடைய பார்வைக்கு அம்மலையை காட்டாதிருந்தால் அவனால் ஒருபோதும் அம்மலையை பார்க்கவே முடியாது என்பதுதான் உண்மை. அவ்வாறின்றி இறைவன் அம்மலையை அவனுக்கு காண்பித்துவிட்டால் படைப்புக்களிலுள்ள மிக மிகத் திடமற்றதாக உள்ள ஆன்மாக்களை கூட அவன் பார்க்கத் துவங்கி விடுகிறான். இந்த இடம் விசுவாசம் விசுவாசம் மற்றும் நம்பிக்கை கொள்வதற்குரிய சோதனை களமாகும். மனிதன் இதில் நம்பிக்கை கொள்கிறானா?இல்லையா? முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவாக்ளின் வார்த்தையை ஏற்று அவர்களுக்கு வழிப்படுகிறானா? இல்லையா? என்பதையெல்லாம் சோதித்துப் பார்க்கும் ஸ்தலமாகும்.

இரண்டு: அவைகள் மீது நம்பிக்கை கொள்வதாகும். எவ்வாறெனில் அப்பாம்பு தேள்களை கனவில் காண்பதாகும். அதாவது கனவில் அவைகள் ஒருவனை தீண்டுவதும், அதன் வேதனையை அவன் கனவிலேயே உணருவதும் கனவை காணும் அவனைத் தவிர வேறு யாருக்கும் தெரிவதில்லை. இதேபோன்றுதான், ஒருவுன் மண்ணறையில் வேதனை செய்யப்படுவதுமாகும் என்பதை நாம் அனுமானித்துக் கொள்ள வேண்டும். இருப்பினும் இவ்வாறு நம்பிக்கை கொள்ளுதல் என்பது விசுவாசத்திற்குரிய நிலையில் மிகவும் பலவீனமான நிலையாகும். எனவே நபியவர்களின் வார்த்தையை அப்படியே ஏற்றுக் கொள்வதுதான் நிறைவான விசுவாசமாகும்.

**இறப்புக்குப் பின்னுள்ள வாழ்க்கை**

இறந்தோரை மண்ணறையிலிருந்து எழுப்புவதும் அதன்பின் அவர்களுக்கொரு நிரந்தரமான வாழ்க்கை தரப்படுவதும் உண்மையாகும். இதுபற்றி இறைவேதம் மற்றும் நபிமொழிகளில்

எண்ணற்ற ஆதாரங்கள் காணப்படுகின்றன. மேலும் இஸ்லாமியக் கொள்கையின் அடித்தளமே இதன்மீது தான் அமைந்துள்ளதென்று சொன்னால் மிகையாகாது. இன்னும் எதுஇல்லாமை என்னும் நிலையிலிருந்து உள்ளமை என்னும் நிலைக்கு படைப்புக்கள் அனைத்தையும் தோற்றுவித்து வெளிக்கொண்டு வந்து அவைகளுக்கு ஒரு ஜீவியத்தை தந்ததோ, அது அவைகளுக்கு பின்னர் இறப்பு என்றொரு நிலையை கொடுத்து அதன்பின் மீண்டும் ஒரு நித்திய ஜீவியத்தை கொடுக்க ஆற்றலுடையதே என்பதில் என்ன சந்தேகமிருக்க முடியும்? இறைவன் தனது வேதத்தில் கூறுவதைப் பாருங்கள்...

هوالذي يبدؤ الخلق ثم يعيده وهواهون عليه

'அவன் எப்படிப்பட்டவன் எனில், முதலில் அவன்தான் படைத்தான். பின்னர் அவைகளை அவன் மீண்டும் படைப்பான். இது அவனுடைய அறிவில் அவனுக்கு மிக மிக லேசான ஒன்றாகும்.'

உண்மைநிலையை நாம் கொஞ்சம் உற்று நோக்குவோமாயின் மனித வாழ்க்கையை நிலைப்படுத்தி வைத்தல் என்பது அவசியமாக உள்ளது. அதனால்தான் மனித இனத்தை 'அஜபுத் தன்பு' (இது ஒருவகை எலும்பு. அரிசியைப் போல் இருக்கும். இதில் மனித தேகத்தை நெருப்பிலிட்டு எரித்தாலும் அல்லது அமிலத்திலிட்டு கரைத்தாலும் அல்லது லேசர் போன்ற கதிரியக்கத்தை கொண்டு பஸ்பமாக ஆக்கி விட்டாலும் இந்த அஜபுத்தன்பு என்னும் எலும்பு மட்டும் அழியாது) என்னும் உருவில் நிலை நிறுத்தப்படுகிறது. மேலும் எவ்வாறு வனங்களிலும் மலைகளிலும் பொழியும் மழைக்குப் பின் புற்பூண்டுகள் முளைத்துக் கிளம்புகின்றனவோ, அவ்வாறே இறுதிநாளில் மனிதர்கள் தமது மண்ணறையிலிருந்து வெளிப்பட்டு வருவார்கள்.

இதன்றி நபிமொழிகளில், மழை வானத்திலிருந்து பொழிகிறது. ஆனால் மனிதர்கள் பூமியிலிருந்து வெளிப்பட்டு வருவார்கள். மனிதர்கள் மட்டுமல்ல. மிருகங்கள், பறவைகள், ஆடு மாடு போன்ற பூமியில் உலவித் திரிந்தவைகளும் கூட அவை அவைகளுக்குரிய நீதி வழங்கப்படுவதற்காக அந்நாளில் வெளிப்படும்.

இன்னும் அஹ்மத், முஸ்லிம் போன்ற நபிமெதரி கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளதாவது, மறுமையில் படைப்புக்கள் ஒன்று மற்றொன்றிடம் பழிக்குப் பழி வாங்கும். எதுவரையெனில், கொம்பில்லாதிருந்த ஆடு பூமியில் கொம்பிருந்த ஆட்டிடம் தன்னை குத்தியதற்காக பழிவாங்கும். இதுபோன்றே படைப்பினங்களிலேயே மிகவும் சிறியதாக உள்ள எறும்பும் முறையற்ற வகையில் துன்புறுத்தப்பட்டிருந்தால் அதுவும் தனக்குரிய பழியை அங்கே வாங்கும். இதில் ஒரு சிறு அளவுகூட கூட்டவோ குறைக்கவோ மாட்டாது. இதுபற்றி சில அறிஞர்கள் கூறும்போது, ஒரு குழந்தை இன்னொரு குழந்தையிடம் பழிவாங்கும் என்பதாகக் கூறுகின்றனர். அதன்பின் விலங்குகளனைத்தும் அழிக்கப்பட்டு அவை மண்ணோடு மண்ணாக ஆக்கப்படும்.

www.sufimanzil.org

அதன்பின் சூர் என்னும் எக்காளம் ஊதப்படும். முதல் எக்காளம் மறுமை ஏற்பட்டதும் ஊதப்படும். அதன் காரணமாக பூமியிலிருப்போரும் வானத்திலிருப்போரும் திடுக்கமடைவார்கள். எந்த அளவுக்கு எனில், அவர்களின் அமைதியும், நிம்மதியும் அவர்களை விட்டும் முற்றிலுமாக அகன்று விடும். இதில் அனைத்து உயிரினங்களும் அழிந்து போய் விடும். இதுபற்றி திருமறையில்....

يوم ينفخ في الصور ففزع من في السموات ومن في الا رض الا من شاء الله. ونفخ فى الصور فصعق من فى السموات ومن فى الا رض

الا من شاء الله

'அந்நாளில் எக்காளம் ஊதப்பட்டதும் வானம் மற்றும் பூமியிலுள்ளவை அனைத்தும் அழிந்துபோய்விடும். ஆனால் இறைவன் நாடியவைகளைத் தவிர' மேலும் எக்காளம் ஊதப்பட்டால் வானம் பூமியிலுள்ளவை அனைத்தும் முடிந்து போய்விடும். ஆனால் இறைவன் நாடியவைகளைத் தவிர' எனக் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்றே இரண்டாவது எக்காளம் ஊதப்பட்டால் இறந்தோர் அனைவரும் தத்தம் தமது மண்ணறைகளிலிருந்து எழுந்து இங்குமங்குமாக பரவத்துவங்குவர். இதனை அடுத்து வரும் திருமறை வசனம் நமக்கு இவ்வாறு சொல்லிக் காட்டுகிறது...

ثم نفخ فيه اخري فاذا هم قيام ينظرون

'பின்னர் இரண்டாவது எக்காளம் ஊதப்பட்டதும்அனைவரும் எழுந்து நிற்பார்கள்.'

ونفخ فى الصور فاذا هم من الاجداث الى ربهم ينسلون

'எக்காளம் ஊதப்பட்டதும் அவர்கள் மண்ணறைகளிலிருந்து ரட்சகனை நோக்கி விரைந்தோடுவார்கள்'

என்றும் கூறுகிறது. இதில் இவ்விரு நிலைகளுக்கும் இடையே நாற்பது வருடங்கள் கடந்து போய் விடும். இன்னொரு வசனத்தையும் பாருங்கள்...

من فى السموات ومن فى الارض

'திடனாக விண்ணிலும் மண்ணிலும் இருப்பவை அனைத்தும் இறைவனுக்குரியதே'

எனக் கூறுவதால் நமக்கு இங்கே ஒரு விசயம் தெளிவாக்கப்படுகிறது. அதாவது, எக்காளம் ஊதப்பட்டதும் வானம் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் ஒருசேர வெளியாகும். இதில் மனிதர்கள், ஜின்கள், வானவர்கள் போன்ற அனைவரும் அடங்குவர். 'இல்லா மாஷா அல்லாஹ்'

(இறைவன் நாடியவர்களைத் தவிர) என்னும் வாக்கியத்தில் ஜிப்ரீல், மீக்காயீல், இஸ்ராயீல், இஸ்ராபீல், ஹூருல்ஈன்கள், அர்ஷ் என்னும் தெய்வாசனப் பீடத்தை சுமக்கும் வானவர்கள் போன்றோரைத் தவிர என்பது கருத்தாகும்.

**மறுமை என்பது என்ன?**

பொதுவாக எக்காளம் ஊதப்படுவதற்கு மறுமைம எனக் கூறப்படுகிறது. ஆனால் சில அறிஞர்கள், மரணத்தின் துவக்கத்திலிருந்து சுவர்க்கத்தில் நுழையும் வரையுள்ள அனைத்தையுமே மறுமை என்றே கூறுகின்றனர். இருப்பினும் நாம் கொஞ்சம் கூர்ந்து கவனிப்போமாயின் ஒவ்வொரு நாளும் இப்படிப்பட்ட நிலைகள் மனிதர்கள் மீது நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. இருந்தும் மனிதர்கள் மறுமையைப் பற்றிய அச்சமற்றவர்களாகவும் மறுமையை மறந்தவர்களாகவுமே காணப்படுகின்றனர். இதுபற்றி நபிமொழியில், எப்போது மாலை நேரம் வருகிறதோ அப்போது மனித உள்ளங்களை மறதியும், பயமும், திடுக்கமும் கவ்விக் கொள்கின்றன. அத்துடன் பறவைகளெல்லாம் தத்தம் தமது கூடுகளுக்குள் வந்து அடைந்து கொள்கின்றன. அதன் பின் இருள் கவிழ்ந்ததும் உறக்கமென்றும் மரணத்தின் சகோதரன் அவைகளைத் தழுவிக் கொள்கிறான். இதுமுதல் எக்காளத்திற்குரிய ஒரு சிறு அடையாளமாகும். அதன்பின் இருள் விலகி வெளிச்சம் தோன்றும்போது ஜீவராசிகளனைத்தும் விழித்தெழுந்து தத்தம் தமது காரியங்களுக்காக நாலா பக்கமும் பரவுகின்றன. இது இரண்டாவது எக்காளத்திற்குரிய ஒருசிறு அடையாளமாகும் எனக் கூறப்படுகிறது.

**மீஸான் (தராசு)**

மறுமைநாளன்று மனிதர்களின் செயல்களனைத்தும் நிறுக்கப்படும். இதில் இறைவனுக்கு மனிதர்களின் எல்லா செயல்களை குறித்தும் தெரியுமென்றாலும் செயல்களை நிறுப்பதில் பல்வேறு நுணுக்கங்கள் அடங்கியுள்ளன. அதிலொன்று, செயல்களை நிறுப்பதைக் கொண்டு மனிதனுக்கு தான் என்ன செய்தோம் என்பது அவனுக்குத் தெரிந்து விடுமல்லவா! இதை தவிரவுள்ள நுணுக்கங்களை இறைவனையன்றி வேறுயாரும் அறிய மாட்டார்கள். ஏனெனில், அவன்தான் அனைத்தையும் அறிந்தவன். இருப்பினும் நாம் மீஸான் என்னும் தராசையும் அதில் நமது செயல்களனைத்தும் நிறுக்கப்படும் என்பதையும் நம்ப வேண்டுமேயன்றி அதைவிட்டு அது எப்படி? எவ்வாறு? என்பயெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது நம்மீது கட்டாயமல்ல.

அடுத்து மீஸானைக் குறித்து, அதோர் எதார்த்தமான தராசு என்றும், அதற்கு இரு தட்டும் ஒரு கபை;பிடியம் ஒரு முனையும் உள்ளதென்றும், ஒவ்வொரு தட்டும் வானம் பூமியைவிட மிகப்பெரியது என்றும் கூறப்படுகிறது. இதுபற்றி ஹழ்ரத் ஸல்மான் பார்ஸி ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர், வானம் பூமி மற்றும் அவைகளிலுள்ள சிருஷடிப் பொருட்களனைத்தையும் மீஸானுடைய ஒரு தட்டில் வைத்தால் அது அவையனைத்தையும் தனக்குள் வாங்கிக் கொண்டுவிடும் என்பதாகக் கூறுகிறார். இதில் நன்மையின் தட்டு அர்ஷின்

வலப்பக்கம் சுவர்க்கத்திற்கு மிக அருகாமையிலும் தீமையின் தட்டு அர்ஷுக்கு இடப்பக்கம் நரகத்திற்கு மிக அருகாமையிலும் இருக்கும்.

வேறு சில அறிஞர்கள் மீஸானைப் பற்றி கூறும்போது, மீஸான் ஒரு பொருள் என்றும் என்றும், அதைக் கொண்டு செயல்களை அளவிடப்படும் என்றும், அது எந்த மாதிரியான தோற்றத்தில் இருந்தாலும் அதைக் கொண்டு நியாயத்தை நிலை நிறுத்துவதே அதனுடைய நோக்கமென்றும், மற்றபடி மீஸான் என்பது ஒரு உவமைதானென்றும் கூறுகின்றனர். இது அவர்களுடைய விருப்பக் கருத்தேயன்றி மீஸான் என்பது ஒரு உவமையல்ல. மாறாக அது எதார்த்தமான ஒன்றாகும். இதைப்பற்றி நபிமொழிகளில் எண்ணற்ற ஆதாரங்கள் காணப்படுவதால் இதன்மீது நம்பிக்கை கொள்வது அவசியமாகும். அதற்கு மாறாக அறிவின் சூழ்ச்சிக்கு நாம் நம்மை பலி கொடுத்துவிடக் கூடாது.

இனி எந்தெந்த செயல்கள் மீஸானில் நிறுக்கப்படுமோ அவைகளுக்கு ஒரு தோற்றமிருக்கும். அதாவது இறைவன் நற்செயல்களை ஒளியின் தோற்றத்திலும், தீய செயல்களை இருளான சரீரத்திற்குரிய தோற்றத்திலும் வெளிப்படுத்துவான். இவ்வாறே செயல்களின் பட்டோலைகள் மனிதர்களின் செயல்களுக்குத் தக்கவாறு பளுவானதாகவோ பளுவற்றதாகவோ இருக்கும்.

மேலும் 'பதாகா'வை பற்றி நபிமொழிகளில் இன்னும் அதிகமாக விளக்கப்படுகிறது. அதாவது பதாகா என்பது ஒரு காகிதத் துண்டுக்கு சொல்லப்படும். அதில் ஒரு பொருளின் விலை குறிக்கப்பட்டிருக்கும். இதனுடைய கருத்து என்னவெனில், எவரது தட்டு கனம் குறைந்து போகுமோ அதில் 'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' (இறைவனையன்றி வேறு யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனின் திருத்தூதராகும்) என்று எழுதி வைக்கப்படும். அதன் காரணமாக அத்தட்டு கனத்து விடுமென்று கூறுகின்றனர். வேறுசில அறிஞர்கள், இவ்வி நபிமொழிகளையும் இணைத்து செயல்களும் பட்டோலையும் நிறுக்கப்படும் என்பதாகக் கூறுகின்றனர். இதுபற்றி அருள்மறையில்...

ونضع الموازين القسط ليوم القيامة

'மறுமை நாளில் நீதிக்குரிய நிறுவைகளை நாம் வைப்போம்' என பன்மையில் சொல்லப்பட்டதற்குக் காரணம், ஒவ்வொரு சமூகத்திற்கும், கூட்டத்தாருக்கும் அவரவர்களின் ஒவ்வொரு செயலுக்கும் தக்கவாறு மீஸான் அமையும். இதுபோன்றே ஒருவரின் நன்மை, தீமை நிறுக்கப்படுவது இன்னொருவருக்கு காட்டப்பட மாட்டாது. அத்துடன் மீஸானுடைய மகத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அதைப் பற்றி பன்மையில் பேசப்பட்டது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஒருவரிடம், ஒரேயொரு நன்மையோ அல்லது தீமையோ இருந்தாலும் அதுவும் மீஸானில் நிறுக்கப்படுவதற்குரிய காரணம், அவரும் புறக்கணிக்கப்படவில்லை

என்பதற்காகவோ அல்லது அவரது மதிப்பை உயர்த்திக் காட்டுவதற்காகவோ என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறே இறை மறுப்பாளர்களின் செயல்களை நிறுப்பதிலும் பல்வேறு நுணுக்கங்கள் உள்ளன. இல்லையேல் அவர்களிடம் நன்மையென்ற ஏதாவதொன்று இருந்தாலல்லவா அவைகளை நிறுப்பதற்கு? எனினும் இறை மறுப்பாளர்களது குறிப்பாக்கப்பட்ட சில நன்மைகள் அவர்களுடைய வேதனையை எளிதாக்க காரணமாக அமையும். பின்னும் மறுமைநாளில் தராசு பளுவாகவோ அல்லது பளுவற்றதாகவோ இருக்கும் எனக் கூறப்படுவது உலகிலுள்ள தராசுகளை போல மேலே ஏறுதலோ அல்லது கீழே தாழுதலோ போன்றதல்ல. அவ்வாறு நினைப்பதும் தவறாகும். காரணம் பதாகாவின் நபிமொழி இக்கருத்தை மறுக்கிறது.

**செயல்களின் பட்டோலை**

அஃமால் நாமா என்னும் மனிதர்களின் நன்மை, தீமைக்குரிய பட்டோலை என்பதும் உண்மையே. இதில் விசுவாசிகளின் பட்டோலை அவர்களின் வலதுகரத்தில் கொடுக்கப்படும். இறை மறுப்பாளர்களுக்கு அவர்களின் இடது கரத்தில் கொடுக்கப்படும். இதில் இறைமறுப்பாளர்களின் இடது கரம் அவர்களின் நெஞ்சுக்கு நேராக பின்புறம் முதுகுக்குப் பின்னால் மடக்கப்பட்டிருக்கும். இது விசுவாசிகளுக்கும் இறைமறுப்பாளர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை காட்டுவதற்காகவும், விசுவாசிகளை கண்ணியப்படுத்துவதற்காகவும் இறை மறுப்பாளர்களை இழிவுபடுத்துவதற்காகவும் இவ்வாறு செய்யப்படும்.

பாவம் செய்த விசுவாசிகள் குறித்த பிரச்சனையில் இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிலர் அவர்களின் பட்டோலை அவர்களுடைய வலக்கரத்தில் கொடுக்கப்படுமென்றும், ஆனால் அது அவர்கள் நரக வேதனையை அனுபவித்து முடித்து வெளியே வந்த பின்பே கொடுக்கப்படுமென்றும் கூறுகின்றனர். வேறு சிலர் பட்டோலை வலக்கரத்தில் கொடுக்கப்படுமென்றும், ஆனால் அதை அவர்களால் படிக்க முடியாதென்றும், நரகின் வேதனையை அனுபவித்து முடித்து வெளியே வந்தபின் தான் படிக்க முடியுமென்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர் பட்டோலை வலக்கரத்திலோ இடக்கரத்திலோ கொடுக்கப்படாமல் அவர்களுக்கு முன்னால் வைக்கப்படுமென்றம், மற்றும் சிலர் பட்டோலை கொடுக்கப்படுவதற்குப் பதிலாக வாசித்துக் காட்டப்படுமென்றும் கூறுகின்றனர். ஆனால் இதுபற்றி எந்த ஆதாரங்களும் இல்லை.

**விசாரணையும், தீர்ப்பும்**

இறைவன் தனது அடியார்களிடம் அவர்களது நன்மை தீமை குறித்து கேள்வி கேட்பான் என்பது உண்மை. இவ்வாறே வானவர்களிடமும் கேள்வி கேட்கப்படும். முதலில் ஜிப்ரீலிடம், அவர் இறைத்தூதர்களிடம் வஹி என்னும் தெய்வ அறிவிப்பை எவ்வாறு கொண்டுபோய் சேர்த்தார் என்பது குறித்து கேட்கப்படும்.

சில நபிமொழிகளில், முதலில் சிருஷ்டிப்பொருட்களின் விதியம்சத்தை குறித்து வைத்துள்ள லௌஹுல் மஹ்ஃபூழி(பாதுகாக்கபட்ட பலகையி)டம் தான் கேள்வி கேட்கப்படும் எனக் கூறப்படுகிறது. அதைக் கொண்டு வந்து ஆஜர்படுத்தும்போது அது இறைவன் மீதுள்ள அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருக்கும். அப்போது அதைநோக்கி, நீ இறையறிவை ஜிப்ரீலிடம் ஒப்படைத்தாய் என்பதற்கு யார் சாட்சி என்க கேட்கப்படும். அதற்கு அது இஸ்ராபீல் என்று சொல்லும். அதுகேட்டு இஸ்ராபீல் ஆஜர்படுத்தப்படுவார். அவரும் இறைவன் மீதுள்ள அச்சத்தால் நடுங்கிக்க கொண்டிருப்பார். அதன்பின் இறைத்தூதர்கள் ஆஜர்படுத்தப்படுவர். அவர்கள் தமது தூதுத்துவத்தை தங்களின் சமூகத்தாரிடம் எவ்வாறு ஒப்படைத்தனர் என்பது குறித்து வினவப்படும். வணக்கங்களில் முதன்முதலாக தொழுகையை குறித்து கேட்கப்படும். மனிதக் கடமைகளில் முதன்மையானதாக ரத்த சம்பந்தத்தை குறித்தே கேட்கப்படும். அதுபோது அநீதம் இழைக்கப்பட்டவருக்கு அநீதமிழைத்தவரின் நன்மையை கொடுக்கப்படும். இவ்வாறே அநியாயத்திற்கு உட்படுத்தப்பட்டவரின் தீமைகள் அநியாயம் செய்தவரது தலையில் வைக்கப்படும்.

இதுபோன்றே பழி சுமத்தப்படுவதற்குரிய விசயத்தில் ஆறில் ஒரு பங்குக்குப் பகரமாக எழுநூறு அங்கீகரிக்கப்பட்ட தொழுகைக்குரிய நன்மைகள் கொடுக்கப்படும் என்பதாக நபிமொழிகளில் காணப்படுகிறது. வேறுசில அறிவிப்புக்களில், ஒருவனிடம் எழுபது இறைத்தூதர்களின் நன்மை இருந்தால் அவன் ஆறின் மூன்று பங்கு நன்மையை கொடுக்க வேண்டும். மேலும் எதுவரை கடன் வாங்கியவரை ஒருவர் திருப்திப்படுத்த மாட்டாரோ அதுவரை அவர் சுவர்க்கத்திற்குள் நுழைய முடியாது.

இதில் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவெனில், இத்தகைய ஒருநாள் தனக்கு வரப்போகிறது என்பது நிச்சயமாக தெரிந்திருந்தும் மனிதன் தனது படுக்கையில் நிம்மதியாக சாய்ந்தவண்ணம், என்னிடம் இருப்பது வேறு யாரிடம் இருக்கிறது? என்றும், எனக்குத் தெரிந்தது வேறு யாருக்குதெரியுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறான். இதில் பாமரர்கள் மறதியில் மூழ்கிக் கிடக்கின்றனர். அறிஞர்களோ வாதப்பிரதிவாதங்களில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். ஞானிகள் பெருமை பேசிக் கொண்டுள்ளனர். இந்நிலையில் உண்மைநிலை என்னவென்பதை இவர்கள் அறிந்து கொள்ளவில்லை. மறுமையில் இவர்களுக்கு நேரப்போவது என்ன? இவர்கள் எப்படியெல்லாம் விசாரணைக்கு உட்படுதத்தப்படப் போகிறார்கள்? என்பதையெல்லாம் ஒரு சிறிதும் யோசித்துப் பார்க்காமலேயே இருக்கின்றனர். பின்னும் இவர்கள் எப்படிப்பட்ட வேதனைக்குரிய ஒருநாளை நாம் சந்திக்கப் போகிறோம் என்பது தெரியாமலேயே மறுமையை மறந்து மரணத்தை பற்றிய அச்சமற்றவர்களாக தன்னை மறந்து வாழ்ந்து கொண்டுள்ளனர். இறைவன் சொல்வதைப் பாருங்கள்....

انا للہ وانا الیہ راجعون

'திடனாக நாம் இறைவனுக்குரியவர்களே. மேலும் திடனாக நாம் அவனிடமே மீளுகிறவர்களாக இருக்கிறோம்'

இறையடியார்களே! இனியேனும் இறைவனின் நல்லருளை தேடுங்கள். ஒருவேளை அவன் நாடினால் உங்களுக்கு தனது சுவனத்தை தொலைவிலிருந்து காட்டித் தருவதன் மூலம் உங்களை அவன் பொருந்திக் கொள்ளலாம். அத்துடன் உங்களில் அதை வாங்கப் போகிறவர் யாரென்றும் அவன் கேட்பான். அத்தனை செல்வத்திற்கு நாங்கள் எங்கே போவோம் என நீங்கள் திருப்பிக் கேட்க, அதற்கவன்: உங்களால் வாங்க முடியும். அதற்குரிய செல்வமும் உங்களிடமுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்களின் உரிமையை உங்களுடைய சகோதர முஸ்லிமுக்கு தந்து விடுங்கள். அவர்களை மன்னித்து விடுங்கள். அவ்வாறாயின் சுவர்க்கம் உங்களுடையதே என்று கூறுவான். அதைக் கேட்டு நீங்களும் உங்களுக்குரிய உரிமையை தந்து சுவனத்தை பெற்றுக் கொள்வீர்கள்.

மேலும் நபிமொழியில் கூறப்பட்டுள்ளதாவது, மறுமைநாளில் தன்னடியார்களிடம் இறைவன் கேள்வி கேட்கும்போது தனது பேரருளின் திரையை கொண்டு மறைத்துக் கொள்வான். மற்றவர் அறியாவண்ணம், எவ்வாறு நான் உலகில் உங்களின் பாவங்களை மறைத்துக் கொண்டேனோ, அவ்வாறே இன்று எனது பேருருளை கொண்டு உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறுவான். அதன்பின் இறைமறுப்பாளர்களையும் நயவஞ்சகர்களையும் கேவலப்படுத்தப்படும். அவர்களை நோக்கி,...

الا لعنة الله على الظالمين

'அநியாயக்காரர்களின் மீது இறைவனின் சாபமுண்டாகட்டும்'

எனக் கூறப்படும். என்னதான் அவனது பேரருள் அதற்குரிய வேலையை செய்தாலும் அவனுடைய நீதத்தைக் கண்டு நாம் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் திருமறையில்....

الا ان اولیائ الله لا خوف علیهم ولا هم یحزنون

'எச்சரிக்கை! திடனாக இறைவனின் காரியகர்த்தர்கள் அச்சமுறவோ துக்கப்படவோ மாட்டார்கள்' என்றும்,

لا یسئل عما یفعل وهم یسئلون

'அவன் செய்வதை குறித்து அவர்கள் வினவப்பட மாட்டார்கள். ஆனால் அவர்கள் செய்தததை குறித்து அவர்கள் வினவப்படுவார்கள்' என்றும் கூறப்படுகிறது. எனவே இறை விஷயத்தில் பணிவையும் திகைப்பையும் இயலாமையையும் தவிர நமக்கு வேறு வழியேதுமில்லை. நாம் அவனது பேரருளின் மீதும் தண்டனையின் மீதும் விசுவாசம் கொள்ள வேண்டும். நமக்கு அரசனும் அதிகாரியும் அவனையன்றி வேறுயார் இருக்கிறார்? அவன்தான் அனைத்து வஸ்துக்களின் மீதும் பேராற்றல் உள்ளவன்.

**கௌஸர் (தடாகம்)**

ஹௌழுல் கௌஸரென்ற ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதும், அது இருக்கிறது என்பதும் நிச்சயமாக்கப்பட்ட உண்மையாகும். இறைவன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மறுமை நாளன்று ஹௌழுல் கௌஸரின் அதிபதியாகவும் அதிகாரியாகவும் நியமித்திருக்கிறான். இதுபற்றி வேதத்தில்,....

انا اعطیناك الكوثر

'திடனாக நாம் உமக்கு கௌஸரை அருள் புரிந்திருக்கிறோம்' என்று கூறுகிறான். இதனுடைய விசாலமானது ஒரு மாதத்திற்குரிய தொலைதூரமாகும். இதனுடைய நீர் பால்போன்று வெண்மையாகவும், கஸ்தூரியை விட மணமுள்ளதாகவும், இதனுடைய கூஜாக்கள் நட்சத்திரங்களுள்ள விண்ணிலிருந்து பிரகாசிக்கும். ஒருமுறை ஹௌழுல் கௌஸரின் நீரை அருந்தினால் அதன்பின் தாகமே எடுக்காது. ஹௌழை குறித்து பல்வேறு நபிமொழிகள் காணப்படுகின்றன. அது கேட்போரின் விளக்கத்திற்குத் தக்கவாறு விளக்கித் தரப்பட்டுள்ளது. உதாரணமாக எமன் தேசத்தைச் சேர்ந்தோருக்கு.......

صنعا والی عدن

'ஹௌழுல் கௌஸர் ஸன்ஆ என்னும் தேசத்திலிருந்து அத்ன் என்னும் தேசம்வரை இருக்கும்'

என்றும், ஷாம் தேசத்தோருக்கு அவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலும், இவ்வாறு ஒவ்வொருவருக்கும் அவரவர் விளக்கத்திற்குத் தக்கவாறு விளக்கித் தரப்பட்டுள்ளதை கொண்டு அவர்கள் விளங்கியிருந்தனர். வேறுசில நபிமொழிகளில் அதனுடைய விலாசத்தன்மையை குறித்து காலத்தை கணக்கில் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. இதை நாம் முன்னால் கூறியிருக்கிறோம். இவ்வாறு விளக்கமளிக்கப்பட்ட அறிவிப்புக்களனைத்தின் நோக்கமும் ஹௌழுல் கௌஸரின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுவதேயன்றி வேறல்ல. இதில் சில அறிஞர்கள், மறுமை நாளன்று ஒவ்வொரு இறைத்தூதருக்கும் அவரவர் தகுதிக்கும் மாண்புக்கும் தக்கவாறு ஹௌழுல் கௌஸர் வழங்கப்படுமெனக் கூறுகின்றனர்.

இமாம் குர்துபி ரஹிமஹுல்லாஹ் என்பார், நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இரு ஹௌழுகள் இருக்குமென்றும், இரண்டின் பெயரும் கௌஸரென்றே கூறப்படுமென்றும் கூறுகிறார்.இதில் ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் ஹௌழுல் கௌஸரின் நீரை புகட்டக் கூடியவர்களாக இருப்பார்கள். இப்பூமியில் அவர்களை யார் நேசிக்கவில்லையோ, அவர்களை காணும் ஆசை கொள்ளவில்லையோ அவர்கள் ஹௌழுல் கௌஸரிலிருந்து நீர் அருந்துவது மிகவும் கஷ்டம்தான். அத்துடன் ஹழ்ரத் அலியவர்கள், யாருடைய உள்ளத்தில் ஹழ்ரத் அபூபக்கர்

ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் நேசமில்லையோ அவர்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தரமாட்டேனென்று கூறுகின்றனர்.

**சிராத் என்னும் பாலம்**

சிராத் என்னும் ஒரு பாலம் இருப்பது உண்மையாகும். மறுமைநாளன்று இறைவன் நரகத்துடைய முதுகின்மீது ஒரு பாதை அமைப்பான். அது ரோமத்தை விட மெல்லியதாகவும் வாள் முனையை விட கூர்மையானதாகவும் இருக்கும். அந்தப்பாதையைத்தான் சிருஷ்டிகளனைத்தும் கடந்து செல்ல வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்படும். சுவர்க்கவாதிகள் அதை கடந்து விடுவார்கள். இதில் சிலர் மின்னலை போன்று அப்பாலத்தைக் கடந்து செல்வர். வேறு சிலர் காற்றைப் போலும், இன்னும் சிலர் குதிரையை போலும் அவரவர் தகுதிக்குத் தக்கவாறு கடந்து செல்வர். இப்பாலத்தை உலகிலுள்ள மார்க்கம் மற்றுமு; நீதத்திற்குரியி பாதையை போலென்று சொல்லலாம். இதில் நரகவாதிகளின் கால்கள் தடுமாறி அவர்கள் நரகில் விழுந்து விடுவர். இதுபற்றி வேதத்தில், 'வ இன் மின்கும் இல்லா வாரிதுஹா' என்னும் வசனம் சொல்லிக் காட்டுகிறது. இதைக் கொண்டு அப்பாலத்தை அனைவரும் கடந்து செல்ல வேண்டுமென்பதும், இத்தனை ஏன்! இறைதூதர்களும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூட கடந்து செல்வார்கள் எனக் கூறப்படுகிறது.

இதில் சில அகப்பார்வையுடையோர், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்பாலத்தை கடந்து செல்வதிலுள்ள நுணுக்கத்தை வெளிப்படுத்துகின்றனர். அதாவது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தாரில் பாவிகளான சிலர் அசம்பாவிதமாக நரகில் சிக்கிக் கொள்வார்கள். அவர்களை பிரிந்த சோகத்தில் நபியவர்கள் இருப்பார்களென்று கூறுகின்றனர். ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் கூறும்போது,மேற்கண்ட வசனத்தின் பொதுவான நிலையிலிருந்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பாக்கப்படுகின்றனர் என்றும், அவர்கள் நின்று கொண்டே தனது சமூகத்தார் அப்பாலத்தை கடந்து செல்வதை பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்றும், அதன்பின் அவர்களும் அப்பாலத்தை கடந்து செல்லும்போது அந்த நரகமும் சோலைவனமாக மாறிவிடும் என்றும் கூறுகின்றனர். இதில் ஒரு சராசரி விசுவாசி நரகத்தை கடந்து சென்றாலே நரகம் அவனை நோக்கி...

جريا مؤمن فان نورك اطفألهبي

'விசுவாசியே! வேகமாகக் கடந்து செல். உனது பேரொளி எனது கங்குகளை அணைத்து விட்டது.'

என்று கூறுமாயின், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசுவாசிகளுக்கெல்லாம் தந்தையாக இருப்பவர்கள். அவர்களுக்கு முன் நரக நெருப்பின் நிலைமை என்னவாகும்? ஆம். அவர்களின் பேரொளி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் நெற்றியிலிருந்த போது, நம்ரூத் என்னும் அரசனால் வார்க்கப்பட்ட நெருப்புக்

குண்டத்தையே சோலைவனமாக மாற்றிவிட்டதே! இந்நிலையில் அந்த ஜோதி எவ்வித தேகத்தின் துணையுமின்றி நேரடியாக வந்தால் நரகத்தின் நிலைமை என்னவாகும் என்பதை நாம் ஒருகணம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

**ஷபாஅத் (பரிந்துரை)**

இறைத்தூதர்கள், இறைநேசர்கள், இணக்கமான நற்செயல் புரிந்த நல்லடியார்கள், இறை சமீபத்துவத்தை பெற்ற வானவர்கள் போன்றோருக்கு இறை சன்னிதானத்தில் எத்தனை கண்ணியமும் மரியாதையும் உள்ளதோ அதற்குத் தக்கவாறு அவர்கள் பரிந்துரை செய்வார்கள். முதன்முதலாக அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான் ஷாஅத்தென்னும் பரிந்துரைக்குரிய கதவை திறந்து வைப்பார்கள். அதைக் கொண்டு இறைவனிடம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எத்தனை கண்ணியமும் சங்கையும் இருக்கிறதென்பது அப்போது அனைவருக்கும் தெரியவரும். அத்துடன் அவர்கள் அந்நாளில் எத்தனை மிகப்பெரும் அதிகாரியாக திகழுவர் என்பதும் தெரிந்து விடும்.

மேலும் மனித குலமனைத்தும் பயத்திலும் அச்சத்திலும் உறைந்துபோய், மஹ்ஷர் வெளியில் இன்று நம்மை இந்த வேதனையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் காப்பாற்றி நமக்காக பரிந்துரைப்பவர் யாராவது இருக்கிறார்களா எனத் தேடி பரிதவித்தவர்களாக மனித குலத்தின் முதல் தந்தையான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்று, இறைவன் உங்களை தனது ஆற்றலுக்குரிய கரத்தை கொண்டல்லவா உருவாக்கினான். அத்துடன் சுவர்க்கத்தில் உங்களுக்கொரு உயர்ந்த இடத்தையுமல்;லவா தந்திருந்தான். அனைத்தையும் விட வானவர்களையெல்லாம் உங்களுக்கு சிரம்பணியச் செய்ததுடன், அனைத்து வஸ்துக்களின் பெயர்களையும் உங்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளானே! இன்று இத்துன்பத்திலிருந்து எங்களை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். எங்களுக்காக இறைவனிடம் பரிந்துரை செய்ய வேண்டுமெனக் கேட்பார்கள்.

அதற்கு ஆதம் நபியவர்கள், எனது படித்தரமெல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும். அதேநேரம் பரிந்துரைக்குரிய படித்தரம் என்பது அதைவிட மேலானது. ஆதலால் அத்தனை உயர்வான படித்தரத்தில் ஏறி நின்று இறைவனின் திருமுன் எனது நாவை கூட என்னால் இன்று அசைக்க முடியாது. அத்துடன் ஒரு மரம் சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் அன்றைக்கு எனக்குள் ஏற்பட்ட வெட்கம் இன்றும் எனது தலையை நான் உயர்த்த முடியாதிருக்கிறேன். ஆம். நான் இறையாணையை மீறிய ஒரு குற்றவாளியாக இன்று நின்று கொண்டிருக்கிறேன். ஆதலால் உங்களின் கோரிக்கை ஒருவேளை நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு நிறைவேறலாம். நீங்கள் அவரிடம் செல்லுங்களென்று கூறுவார்கள். அதைகேட்டு ஜனங்கள் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வருவார்கள். அவர்கள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்று முறையிடுமாறு கூறுவார்கள். அதையடுத்து இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமும்

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமும் செல்லுமாறு கூறுவார்கள்.

மேற்காணும் 'உலுல் அஸ்ம்' என்னும் படித்தரத்தை கொண்டுள்ள இவ்விறைத் தூதர்களெல்லாம் தங்களின் வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்ட அசம்பாவிதத்தை எண்ணி நாணமுற்றவர்களாக அவ்வேளையில் இருப்பார்கள். இந்நிலையில் வேறு யாருமே அவ்வுயரிய படித்தரத்தின் உன்னத நிலையினை நினைத்து அங்கே செல்லத் துணியாதபோது மனித சிருஷ்டிகளனைத்தும் இறுதியில் காத்தமுல் அன்பியா, தீர்க்கதரிசிகளின் தலைவர், மறுமைநாளின் பரிந்துரைப்பாளர், யாரைப் பார்த்து இறைவன், 'உமக்காக உமது சமூகத்தாரின் முன்பின் பாவங்களனைத்தையும் இறைவன் மன்னித்தான்' என்று சொன்னானோ அத்தகைய மாபெரும் உயர்நிலையினை கொண்ட முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தங்களின் நிலையைக் கூறி முறையிடுவார்கள்.

அதைகேட்டு அண்ணலார் எழுந்திருப்பர். ஜலாலிய்யத்தெனும் அடக்கியாளும் வல்லமை கொண்ட தனது ரட்சகனின் சன்னிதானத்திற்கு வருகைதந்து இப்பூவுலகில் வாக்களிக்கப்பட்ட 'மகாமுல் மஹ்மூத்' (புகழுக்குரிய ஸ்தானம்) என்னுமிடத்தை சென்றடைந்து, (இந்த இடத்தில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை தவிர வேறு யாராலும் நிற்க முடியாது) தங்களின் நெற்றியை தரையில் வைப்பர். அப்போது, தலையை உயர்த்துவீர். விரும்பியதைக் கேளும். நீர் கேட்பது இன்று கிடைக்கும் என்பதாக ஆணை பிறக்கும். அதைக் கேட்டு நபியவர்கள் தமது தலையை உயர்த்தி இறைவனை அளவின்றி புகழுவர். அதன்பின் பாவிகளுக்காக பரிந்துரை செய்யத் துவங்குவர். பின்னர் மீண்டும் நெற்றியை தரையில் வைத்து அடுத்த நிலையிலுள்ள பாவிகளுக்காக பரிந்துரை செய்வர். அதன்பின் மூன்றாம் முறையாக தமது நெற்றியை தரையில் வைக்கும்போது எப்போது தங்களின் தலையை உயர்த்துவர் எனில், அனைத்து பாவிகளுமே மன்னிக்கப்பட்டு விடுவர். யாருமே மீதமிருக்க மாட்டார்கள். அதேநேரம் யாரை குறித்து வேதத்தில், இறை மறுப்பாளர்களையும், இறை வைத்தோரையும் நிரந்தரமான நரகத்திற்குரியவர்கள் என வரையறுத்துச் சொல்லப்பட்டிருந்ததோ அவர்களைத் தவிர மற்றவர்களனைவரும் சுவர்க்கத்திற்குச் சென்று விடுவர்.

இதே தலைப்பில் புகாரி, முஸ்லிம் போன்ற நபிமொழிக் கிரந்தங்களில் சில நபிமொழிகள் காணப்படுகின்றன. அதில் ஒவ்வொரு குற்றவாளிக்கும் பரிந்துரைக்குரிய வாய்ப்புக் கிடைக்குமென்றும், மற்ற தீர்க்கதரிசிகளின் சமூகத்தாருக்கு அந்த வாய்ப்பு கிடைக்காதென்றும், அல்லுது மற்றவர்களுக்கு பரிந்துரைப்பதற்குரிய வாய்ப்பு கிடைக்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்றே இன்னொரு நபிமொழியில், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிந்துரைக்குப் பின் எந்தப் பாவியும் இருக்க மாட்டார்களென்றும், இவ்வாறே லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதைத் தவிர வேறு எந்த நன்மையும் அறவே இல்லாத, தவிறும் பாவத்திலும் மூழ்கிப் போனவர்களுக்காகவும் நபியவர்கள் பரிந்துரைப்பதற்கு அனுமதி கேட்பார்கள். அதற்கு இறைவன் தரப்பிலிருந்து, இவர்கள் எனக்குச் சொந்தமானவர்கள்.

இவர்களுக்காக நானே பரிந்துரைப்பேன். ஆதலால் இவர்களை நரகிலிருந்து வெளியேற்றுங்களென ஆணையிடுவான்.

சுருங்கக் கூறின் அந்தநாள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குரிய நாளாகும். அந்த இடம் மகாமெ முஹம்மதி என்னும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குரிய இடமாகும். மேலும் இதில் கவனிக்கதோர் முக்கியமான விசயம் யாதெனில், அன்றையதினம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனின் விருந்தாளியாக இருப்பார்கள். மற்றவர்களனைவரும் அவர்களைக் கொண்டு அவர்களுக்காக இருப்பார்கள்.

இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் என்பார் சரியான வரிசைத் தொடரைக் கொண்டு தமது 'முஸ்னத்' என்னும் நூலில், அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

خيرت بين اشفاعة وبين ان يدخل شطر امتي الجنة فاخترت الشفاعة لانها اعم واكفى اترونها للمؤمنين المتقين لا ولكنها

للمذنبين الخاطئين

'இறைவன் என்னிடம், ஒன்று பரிந்துரைப்பதை எடுத்துக் கொள்ளும். அல்லது உமது சமுதாயத்திலுள்ள சரிபாதிப் பேர் சுவர்க்கம் செல்வதை எடுத்துக் கொள்ளும் என்று சொன்னபோது, நான் பரிந்துரையை தேர்ந்தெடுத்தேன். ஏனெனில், அதிகம் நிறைவானதும் அதிகமதிகம் பலனளிக்கக் கூடியதும் பரிந்துரையேயாகும். என்ன! எனது பரிந்துரை பரிசுத்தமான இஸ்லாமியர்களுக்கென எண்ணிக் கொண்டீர்களா? இல்லை. பாவங்களில் மூழ்கிப் போயுள்ளார்களே! அவர்களுக்காக என்று கூறினர்'

அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் வபாரிக் அலைஹி வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். இவ்வாறே இப்னு அதீ ரஹிமஹுல்லாஹ் என்பார், விசுவாசிகளின் தாயாகிய அன்னை உம்முஸல்மா ரலியல்லாஹு அன்ஹா என்பாரைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்....

شفاعتي للهالكين من امتي

'எனது பரிந்துரை எனது சமூகத்திலுள்ள பாவங்களில் அழிந்து போனவர்களுக்காகும்' பரிந்துரைப்பாளரே! உம்மீது என்னை அர்ப்பணிக்கும் நற்பாக்கியத்தை தாரும்.

இதுபோன்றே அபீதாவூத், திர்மிதி, இப்னு ஹிப்பான், ஹாகிம், பைஹகி போன்ற நூலாசிரியர்கள் அனஸ் பின் மாலிக் என்னும் நபித்தோழரைக் கொண்டும், திர்மிதி, இப்னுமாஜா, இப்னு ஹிப்பான், ஹாகிம் போன்றோர் ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு என்னும்

நபித்தோழரைக் கொண்டும், தப்ரானி முஃஜமுல் கபீர் என்பார் அப்துல்லாஹ் பின் அப்பாஸ், கதீப் பக்தாதி,அப்துல்லாஹ் பின் உமர், கஃப் பின் உஜ்ரா ரலியல்லாஹு அன்ஹும் போன்றோரைக் கொண்டும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்....

شفاعتي لاهل الكبائر من امتي

'எனது பரிந்துரை எனது சமூகத்திலுள்ள பெரும் பாவிகளுக்காகும்.'

இதேபோல அபூபக்கர் அஹ்மத் பின் அலி பக்தாதி ரஹிமஹுல்லாஹ் என்பார், அபீதர்தா ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்....

شفاعتي لاهل الذنوب من امتي. وا زني وان سرق على رغم انف ابن درداء

'எனது பரிந்துரை எனது சமூகத்திலுள்ள பெரும் பாவிகளுக்காகும் என நபியவர்கள்; சொல்ல, அதுகேட்ட அபீதர்தா என்பார், அவர் விபச்சாரம் செய்தாலுமா? திருடினாலுமா? என்று கேட்க, அவர் விபச்சாரம் செய்தாலும் திருடினாலும் அது அபீதர்தாவின் விருப்பத்திற்கு மாற்றமாகத்தான் இருக்கும் என நபியவர்கள் கூறினர்'

அடுத்து தப்ரானி, பைஹகி என்பார், புரைதா ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டும், தப்ரானி, முஃஜமுல் அஸ்வத் போன்றோர் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

اني لاشفع يوم القيامة الاكثر مما على وجه الارض من شجر وحجر ومدر

'பூமியில் எத்தனை இலைதழைகள் இருக்கின்றனவோ அதை விட அதிகமான எண்ணிக்கை உடையோருக்கு மறுமை நாளில் நான் பரிந்துரை செய்வேன்'

இதுபோன்றே புகாரி, முஸ்லிம், ஹாகிம், பைஹகி போன்றோர் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்....

شفاعتي لمن شهد ان لا اله الا الله مخلصا يصدق لسانه قلبه

'உண்மையான நாவைக் கொண்டுமும், உள்ளத்தைக் கொண்டும் கலிமா சொன்ன ஒவ்வொருவருக்கும் எனது பரிந்துரை உண்டு'.

இதேபோல அஹ்மத், தப்ரானி, பஸ்ஸார் போன்றோர் மஆத் பின் ஜபல் ரலியல்லாஹு அன்ஹு மற்றும் அபூமூஸா அஷ்அரி ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர்களைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்....

انها اوسع لهم هي لمن مات ولا يشرك بالله شيئا

'எவருடைய இறுதிமுடிவு இறைநம்பிக்கையோடு நிகழ்ந்துள்ளதோ, இன்னும் யார் இறைவனுக்கு இணைவைக்காது இருந்தாரோ, அவர்களனைவருக்கும் எனது பரிந்துரை விசாலமாக்கப்பட்டுள்ளது'

இவ்வாறே தப்ரானி, மு.ஃஜமுல் அஸ்வத் என்பார், அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்,....

آتي جهنم فاضرب بابها فيفتح لي فادخلها فاحمد الله محامدا ماحمده احد قبلي مثله ولا يحمده احد بعدي مثله ثم اخرج

منها من قال لا اله الا الله مخلصا

'நான் நகரத்தின் கதவை திறந்து கொண்டு செல்வேன். அங்கே வைத்து என் இறைவனை நான் புகழுவேன். அது எனக்கு முன்போ அல்லது பின்போ புகழ்ந்த அளவிற்குரியதாக இருக்காது. அதன்பின் உண்மையான உள்ளத்தோடு கலிமா சொன்ன அனைவரையும் நான் நரகத்தை விட்டு வெளியேற்றுவேன்'.

இதுபோன்றே ஹாகிம், தப்ரானி, பைகஹி போன்றோர் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

يوضع للانبياء منابر من ذهب فيجلسون عليها ويبقى منبري ولم اجلس لا ازال اقيم خشية ان ادخل الجنة ويبقي امتي

بعدي فاقول يا رب امتي امتي فيقول الله يا محمد وماتريد ان اضع يامتك فاقول يا رب عجل حسابهم فما ازال حتي اعطى قد

بعثت بهم الي النار وحتي ان مالكا خازن النار فيقول يا محمد ما تركت لغضب ربك في امتك من بقية

'இறை தூதர்களுக்கு தங்கத்தாலான மிம்பர் (மேடைகள்) அமைக்கப்பட்டு அதில் அவர்கள் அமர்ந்திருப்பார்கள். எனது மிம்பர் மட்டும் காலியாக இருக்கும். நான் அதில் அமரமாட்டேன். என்னை சுவர்க்கத்திற்கு அனுப்பிவிட்டால் எனது சமுதாயத்தினரெல்லாம் எங்கே தங்கி விடுவார்களோ என்பதற்காக இறைவனுக்கு அருகில் நான் நின்று கொண்டிருப்பேன். அதுபோது

நான் இறைவனிடம், இறைவா! என் சமுதாயம் என் சமுதாயம் என்பேன். அதைக் கேட்டு இறைவன், முஹம்மதே! உமது விருப்பமென்ன? உமது சமுதாயத்தை நான் என்ன செய்யட்டும் என்று கேட்பான். அதற்கு நான், இறைவா! அவர்களின் விசாரணையை துரிதப்படுத்து. அவர்களுக்காக நான் பரிந்துரை செய்வேன். எதுவரைஎனில், நரகை நோக்கிச் சென்றோருக்கு அதிலிருந்து விரைவில் விடுதலை கிடைக்கும் என்பேன். அப்போது நரகத்திற்குரிய அதிகாரி நபியவர்களை பார்த்து, முஹம்மதே! நீர் உமது சமுதாயத்தில் இறைகோபத்திற்குரிய பெயர்கள் எதையும் விட்டு வைக்கவில்லை என்று கூறுவார்'

இன்னும் புகாரி, முஸ்லிம்,. நஸாயி போன்றோர், ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டும், அஹ்மத் ஹஸன் ரஹிமஹுல்லாஹ் என்பாரின் சரியான ஆதாரத்தைக் கொண்டும், புகாரி, பஸ்ஸார், தப்ரானி, பைஹகி, அபூநயீம் போன்றோர் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டும், தாரமி, இப்னு ஷைபா, அபூய.்லா அபூநயீம், பைஹகி போன்றோர் அபூதர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டும், தப்ரானி போன்றோர், மு.்ஜம் அஸ்வதில் நின்றும் அபூஸயீத் குத்ரி ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டும், அஹ்மத், இப்னுஷைபா, தப்ரானி போன்றோர், அபூ மூஸா அஷ்அரி ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

واللفظ لجابر قال قال رسول الله صلى الله عليه وسلم واعطيت مالم يعطين احد قبلي الى قوله صلى الله عليه وسلم واعطيت

الشفاعة

'நான் பரிந்துரை செய்வோனாக நியமிக்கப்பட்டிருக்கிறேன். மேலும் பரிந்துரை என்பது எனக்கு மட்டுமே சொந்தமாக்கப்பட்டுள்ளது. என்னைத் தவிர வேறு எந்த இறைதூதருக்கும் இது வழங்கப்படவில்லை'

இப்னு அப்பாஸ், அபூ ஸயீத், அபூமூஸா ரலியல்லாஹு அன்ஹு அன்ஹும் போன்ற நபித்தோழர்களைக் கொண்டும், அனஸ் ரலியல்லாஹு அன்ஹு மற்றும் இன்னமிருவரை கொண்டும், அபூஹுரைறா ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

ان لكل نبي دعوة قد دعا بها في امة واستجيب له وهذا اللفظ لانس ولفظ ابي سعيد. ليس من نبي الا وقد اعطى دعوة فتعجلها

(ولفظ ابن عباس) لم يبق نبي الا اعطى له رجانا الى لفظ انس والفاظ الباقين كمثله معني قال واني اختبأت دعوتي شفاعة لامتي

يوم القيامة (زاد ابو موسي) جهلنها لمن مات من امتي لا يشرك بالله شيئا

'இறைதூதர்களின் ஆயிரக்கணக்கான பிரார்த்தனைகள் இறைவனை கொண்டு அங்கீகரிக்கப்பட்டாலும் இறைதரப்பிலிருந்து ஒவ்வொரு தூதருக்கும் சொந்தமாக ஒரு பிரார்த்தனை வழங்கப்படுகிறது. அப்பிரார்த்தனையில் அவர்கள் என்ன கேட்டாலும் கிடைக்கும். அப்பிரார்த்தனையை ஆதம் நபியிலிருந்து அனைத்து இறைத்தூதர்களும் இப்பூமியிலேயே கேட்டுவிட்டனர். ஆனால் நான் அதை இறுதி நாளுக்காக தாமதப்படுத்தி வைத்திருக்கிறேன். அதுதான் எனது பரிந்துரையாகும். மறுமைநாளன்று எனது அனைத்து சமூகத்தாருக்காகவும் (எவரெல்லாம் இப்பூமியில் இறை விசுவாசத்துடன் இறந்தார்களோ அவர்களுக்காகவும் தேக்கி வைத்திருக்கிறேன்.'

அல்லாஹு அக்பர்! ஓ! பாவிகளாகிய சமுதாயத்தினரே! உங்களின் அதிபதியும் உங்களை அளவுகடந்து நேசிப்பவருமான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் ரட்சகத்தன்மையை உங்களின் மீது எந்த அளவுக்கு பொழிந்து கொண்டுள்ளனர் என்பதை ஒரு கணமாவது நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அடுமட்டுமா? இறைவனிடமிருந்து மூன்று பிரார்த்தனைகள் அருமை நபியவர்களுக்கு கிடைத்தன. அதைவைத்து என்ன கேட்டாலும் தருவதாக வாக்களிக்கப்பட்டவை அவை. ஆனால் நபியவர்கள் அம்மூன்றில் எதையுமே தமக்காக கேட்கவில்லை. எல்லாவற்றையுமே தமது சமுதாயத்தினராகிய உங்களுக்காகத்தான் கேட்டனர். அம்மூன்றில் இரண்டை இப்பூவுலகிலேயே கேட்டனர். மூன்றாவதை இறுதி நாளில் நீங்கள் ஆதரவற்று நிர்க்கதியாக நின்று கொண்டிருக்கும் போது, உங்கள் மீது இரக்கமும் கிருபையும் கொண்டுள்ள அவர்களையன்றி உங்களுக்கு வேறு நாதியே இல்லையெனும் அத்தருணத்திற்காக அல்லவா அதை நிறுத்தி வைத்துள்ளனர். அதனால்தான் இறைவனும் அருள்மறையில் அவர்களை குறித்து கூறும்போது...

عزيز عليه ما عنتم حريص عليكم بالمؤمنين رؤوف رحيم

'உங்களின் மீது பேராசை கொண்டவர். நீங்கள் துன்புறுவது அவருக்கு கஷ்டத்தை கொடுக்கிறது. மேலும் உங்களின் மீது கிருபையும் இரக்கமும் உடையவர் அவர்'

என்று கூறுகிறான். மகத்துவத்திற்குரிய இறைவன் மீதாணை! எவன் அவர்களை உங்களின் மீது கிருபையுடையவராக ஆக்கினான்.? ஒரு தாய் தனது குழந்தை மீது கூட இத்தனை அன்பு வைத்திருப்பாளா என்பது சந்தேகமே. அந்த அளவுக்கு தமது சமுதாயத்தினர் மீது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்பு வைத்துள்ளனர் என்றால் மிகையாகாது. இறைவா! நீ எங்களின் பலவீனத்தை புரிந்துள்ளது போன்று அவர்களின் மேலான மகத்;துவத்தையும் உயர்நிலையையும் நீதான் அறிந்திருக்கிறாய். ஆதலால் உங்கள் தரப்பிலிருந்து அவர்கள் மீதும், அவர்களின் சந்ததியினர் மீதும் அபிவிருத்தி செய்யப்பட்ட ஸலவாத்தை அவர்களது தகுதிக்கேற்ப அவர்கள் மீது இறக்கியருள்வாயாக. மேலும் அவர்கள் மீது உனது பேரருளையும் சொரிவாயாக.

இனி இச்சமுதாயத்தை சார்ந்தோர், அப்பெருமகனாருடைய ரட்சகத்தன்மையின் மீதும் மகத்துவத்தின் மீதும் இப்போது சந்தேகத்தை கிளப்புகின்றனர். இன்னும் சிலர் அவர்களின் பரிந்துரையை பற்றிய ஐயப்பாட்டை எழுப்புகின்றனர். வேறு சிலர் அவர்களின் புகழை தன்னைப் போன்றே கருதுகின்றனர். மற்ற சிலர் அவர்களின் கண்ணியத்தின் மீது கட்டுப்பாடு விதிக்கின்றனர்.அவர்களை நேசிப்பதை புதியதோர் விஷயமென்றும், இணைவைத்தலென்றும் ஒரு சட்டத்தையே விதிப்படுத்தப் பார்க்கின்றனர். இவர்களை நினைத்தால் நமக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது.

அடுத்து முஸ்லிம் என்பார், உபை இப்னு க.்ப் ரலியல்லாஹு அன்ஹு என்பாரைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்.

'இறைவன் எனக்கு மூன்று கேள்விகளை தந்தான். அதில் இரண்டை இப்பூமியிலேயே கேட்டு விட்டேன்' அது...

اللهم اغفر لامتي. واخرت الثالثة فيوم يرغب الى فيه الخلق حتي ابراهيم

'இறைவா! எனது சமுதாயத்தை மன்னிப்பாயாக. இறைவா! எனது சமுதாயத்தை மன்னிப்பாயாக என்பதாகும். இனி மூன்றாவது கேள்வியை அந்த நாளுக்காக பிற்படுத்தி வைத்திருக்கிறேன். அந்த நாளில் சிருஷ்களனைத்தும் என்னிடமே தேவையாகும். எதுவரை எனில், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உட்பட' எனக் கூறுகின்றனர்.

மேலும் பைஹகீ என்பார், அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு என்பாரை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

اعطيتك خيرا من ذالك (الى قوله) خبأت شفاعتك ولم اخبأها لنبي غيرك

'அருமை நபியவர்கள் மி.்ராஜுடைய இரவின்போது இறைவனிடம், இற¡வா! நீ இறைத்தூதர்களுக்கு இன்னின்ன சிறப்புக்களையெல்லாம் தந்தாய் என்று சொல்ல, அதற்கிறைவன், நான் உமக்குத் தந்தது அவையனைத்தையும் விட மிக மேலானதாகும். அடுமட்டுமின்றி உமக்காக நான் பரிந்துரையை மறைத்து வைத்தேன். உம்மைத் தவிர அது வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லை' என்று சொன்னான்.

அபீஷைபா, திர்மிதி போன்றோரால், அழகானதென்றும், உண்மையானதென்றும், இவ்வாறே இப்னுமாஜா என்பார், உண்மையான வரிசைத் தொடர் மூலம் உபை இப்னு க.்ப் ரலியல்லாஹு அன்ஹு என்பாரைக் கொண்டும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

واذا كان يوم القيامة كنت امام النبيين وخطيبهم وصاحب شفاعتهم غير فخر

'இறுதி நாளன்று நான் இறைத்தூதர்களின் தலைவனாகவும் அவர்களின் போதகனாகவும் அவர்களுக்காக பரிந்துரை செய்பவனாகவும் இருப்பேன். இதனை நான் பெருமைக்காக சொல்லவில்லை'

இப்னு முனீர் என்பார், ஸைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு போன்ற பதினான்கு நபித்தோழர்களை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்...

شفاعتي يوم القيامة حق فمن لم يؤنت بها لم يكن من اهلها

'இறுதிநாளில் எனது பரிந்துரை உண்மையாகும். இதனை யார் விசுவாசிக்கவில்லையோ அவர் அதற்குரியவராக மாட்டார்'

பரிந்துரையை மறுப்போர் முத்தவாத்திர் (தொடர்வரிசை) என்னும் தரத்திலுள்ள இந்த நபிமொழியை பார்த்தாவது தமது ஆன்மாவின் மீது இரக்கப்பட்டு நபியவர்களது பரிந்துரை மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும் இறைவன் தனது மாமறையில்....

ஓ! முஹம்மதே! (எனது நேசரே! என்னால் நேசிக்கப்பட்டவரே! தேடப்பட்டவரே!) 'நான் எந்த அளவுக்கு எனது அருட்கொடையையும் இரட்சகத்தன்மையையும் உமக்கு அருள் புரிவேன் எனில், நீர் அதனை பொருந்திக் கொள்வீர்.' அதன்பின் உமது உள்ளத்தில் எவ்வித எதிர்பார்ப்பும் இருக்காது. ஓ! என் நேசரே! ஒவ்வொருவரும் எனது திருப்தியை தேடிக் கொண்டுள்ளனர். ஆனால் நானோ உமது திருப்தியை தேடுகிறவனாக இருக்கிறேன். நீர் சொல்வீர்! எனது சமூகத்திலுள்ள ஒரேயொரு குற்றவாளி கூட மன்னிக்கப்படாதவரை நான் திருப்தியுற மாட்டேனென்று. இந்நிலையில் மார்க்க அறிஞர்கள் ஒரு திருமறை வசனத்தை கூறி அதற்கு விளக்கமளிக்கின்றனர். அந்த வசனமாவது...

لا تقنطوا من رحمة الله ان الله يغفر الذنوب جميعا

'(பாவிகளே!) இறைவனுடைய ரஹ்மத்தி(இரட்சிப்புத் தன்மையி)ன் மீது நீங்கள் நிராசையுற்று விட வேண்டாம். நிச்சயமாக இறைவன் அனைவருடைய பாவங்களையும் மன்னிப்பான்'

என்னும் இவ்வசனத்தில் குறிப்பாக்கப்படுவோர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுதாயத்தினரே எனக் கூறுகின்றனர். அதேநேரம் நூஹ் நபியவர்களின் சமூகத்தாரை குறித்து உயர் மறையில் குறிப்பிடும்போது...

يغفر لكم من ذنوبكم

'இறைவன் உங்களின் சில பாவங்களை மன்னிப்பான்' எனக் குறிப்பிடுகிறது. அரபிமொழி இலக்கணத்தில் 'மின்' என்னும் பதம் 'சில' என்பதைக் குறிப்பிடுவதாகும். அதாவது, நூஹ்

அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சமூகத்தாருடன் இறைவனது பேருள் இணைந்திருக்கும் எனக் கூறப்பட்டாலும் அவர்களது சில பாவங்களின் மீது விசாரணை நடத்தப்படும் என்பதாகும்.

இனி உண்மைநிலை என்னவெனில், இறைவனது மன்னிக்கின்ற அவனுடைய 'பேருள்' மீதுள்ள நம்பிக்கை தான் பாவிகளுக்குரிய சுபச் செய்தியாகும். காரணம் விருந்தாளி என்றாலே கண்ணியப்படுத்தப்படுவதுதான் வழக்கம். பின்னும் அந்த விருந்தாளியின் பொருட்டு அவரை சார்ந்தவர்களும் கண்டிப்பாக கண்ணியத்துடன்தான் பார்க்கப்படுவார்கள்.

ஆதலால் நீ முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுதாயத்தில் வந்து உடனடியாக இணைந்துவிடு. உன்னை அவரிடம் முழுமையாக ஒப்படைத்துவிடு. உனது எல்லாக் கஷ்டங்களும் தீர்ந்து விடும். தற்போது உன்னைப் பற்றிக் கொண்டுள்ள கஷ்டமும் துன்பமும் அவருக்கும் உனக்குமிடையேயுள்ள தொடர்பின்மையால் ஏற்பட்டதாகும். இவர் தொடர்பு நேராகிவிட்டால் அதன்பின் எந்தத் துன்பமும் இல்லை. கஷ்டமுமில்லை. எண்ணிலடங்கா பாவங்கள் அவர் மீதுள்ள விசுவாசத்தின் காரணமாக வித்தியாசப்படுத்திப் பார்க்கப்படாமலேயே ஒதுக்கப்பட்டுப் போய்விடும். அத்துடன் ஒருவரது உள்ளத்தில் விசுவாசத்தின் பேரொளி இலங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அதில் இருளோ பாவங்களோ இடம்பிடிக்க அறவே வாய்ப்பில்லை. இந்நிலையில் யாருக்கு விசுவாசத்தை பற்றிய கவலை உள்ளதோ அவருக்கு உலகை பற்றிய எந்தக் கவலையும் இராது.

ஒருமுறை சுப்யானுல் தௌரி ரஹிமஹுல்லாஹ் என்னும் ஞானியொருவர், இரவு முழுவதும் அழுது கொண்டே இருந்தார். அதுபோது ஜனங்கள் அவரைப் பார்த்து, ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள்? சந்தோஷமாக இருங்களேன். உங்களின் கழுத்தில்தான் பாவத்தின் சுமை ஏதும் இல்லையே! என்று கேட்க, அதற்கவர்: ஒருவேளை மலைகள் போன்ற பாவச் சுமைகள் இருந்தாலும் அவைகளெல்லாம் இறைவனது இரட்சிப்புத் தன்மைக்கு முன்னால் ஒரு பொருட்டாகவே கருதப்படாது. அதேநேரம் நான் இவ்வுலகினின்றும் இறைவிசுவாசத்தோடு செல்வேனா? மாட்டேனா? அது எனக்குத் தெரியவில்லையே! அதை எண்ணித்தான் அழுகிறேன் என்றார்.

**பரிந்துரைக்குரிய ஸ்தானங்கள்**

இதுவரை பரிந்துரை பற்றிய பல்வேறு நபிமொழிகளையும், அவைகளுக்குரிய விளக்கங்களையும் பார்த்த நீங்கள், இப்போது அதற்குரிய வகைகளையும் தெரிந்து கொள்ளுங்கள். அதாவது பரிந்துரை என்பது பல்வேறு படித்தரங்களைக் கொண்டதாகும். ஒன்று: இறுதிநாளன்று சமவெளியில் ஜனங்கள் பயத்திலும் திகைப்பிலும் உறைந்து போய் நின்றவாறு பல்வேறு துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டிருப்பர். அதுபோது அத்துன்பங்களையும், வேதனைகளையும் அவர்களைவிட்டு அகற்றுவதற்காக பரிந்துரை செய்யப்படும். இரண்டு: விசாரணை நடத்தப்படும் போது அது எளிதாகப்படுவதற்காகவும், அவர்களில் யாரும் பிரிக்கப்பட்டுவிடக் கூடாதென்பதற்காகவும் பரிந்துரை செய்யப்படும்.

இதுபற்றிய நபிமொழியில், 'விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர் வேதனையில் சிக்கிக் கொண்டார்' எனக் கூறப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும். மூன்று: வேதனை செய்யப்படுவதற்குரிய கட்டளை பிறப்பிக்கப்படும் போது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக பரிந்துரை செய்யப்படும். நான்கு: சுவனத்திலுள்ள தகுதி உயர்த்தப்படுவதற்காகவும், அதிகமான நன்மைகள் அளிக்கப்படுவதற்காகவும் பரிந்துரை செய்யப்படும்.

அது எவ்வாறெனில், ஒரு குற்றவாளி அரசனுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டால் அவன் பயத்தில் உறைந்து போனவனாக நின்று கொண்டிருக்கும்போது, அரசனுக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் எழுந்து நின்று அக்குற்றவாளிக்காக சிபாரிசு செய்தால் அரசன் அவரை அமரச் சொல்லிவிட்டு அக்குற்றவாளியிடம் லேசான முறையில் கேள்வியைக் கேட்கிறான். அதன்பின் இன்னொருவர் எழுந்து நின்று அக்குற்றவாளிக்காக சிபாரிசு செய்தால், அரசன் அக்குற்றவாளியிடம் கேள்வி எதுவும்கேட்க வேண்டாமென்றும், ஒருவேளை கேள்வி கேட்கப்பட்டத்தான் செய்ய வேண்டுமெனில், மிகவும் மிருதுவாக வாஞ்சையோடு கேட்க வேண்டுமென்றும் தனது அதிகாரிகளிடம் கூறுகிறான்.

பல சந்தர்ப்பங்களில் குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்படும்போது அவனை சிறையில் அடைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்படுவதுண்டு. அதேநேரம் அவனுக்காக செய்யப்படும் பரிந்துரை காரணமாக அவன் விடுவிக்கப்பட்டு விடுவதுமுண்டு. இவ்வாறே சிறைச்சாலைக்கு சென்று சிலகாலம்வரை தண்டனை அனுபவித்தபின் அக்குற்றவாளிக்காக செய்யப்படும் பரிந்துரை காரணமாகவும் அவன் விடுவிக்கப்படுவதுண்டு. சிலபோது அக்குற்றவாளி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் அவனுக்கு பதவி போன்ற அந்தஸ்த்தும் கொடுக்கப்படுவதுண்டு. ஆதலால் ஒவ்வொரு குற்றவாளியும் தனக்காக, தனது வழிநடத்துனராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அhவ்ள் பெற்றுள்ள உயர்நிலை காரணமாக எல்லாவகையான பரிந்துரையும் செய்வார்கள் என்பதை உறுதியாக நம்ப வேண்டும்.

அடுத்து அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிந்துரை எல்லா சமுதாயத்தை சார்ந்தோருக்கும் பொதுவாகக் கிடைக்கும். அதாவது எல்லா சிருஷ்டிகளுக்குமே இப்பரிந்துரை கிடைக்கும். அதிலும் குறிப்பாக மதீனாவை சேர்ந்தவர்களுக்கும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அடக்கத்தலத்தை தரிசித்தோருக்கும், நபியவர்களின் மீது அதிகமதிகம் ஸலவாத்துச் சொன்னோருக்கும் இப்பரிந்துரை கண்டிப்பாகக் கிடைக்கும்.

திட ஞானிகள் என்னும் இறைவனை அறிந்தோர் பரிந்துரைக்குரிய அகமியத்தை குறித்து சொல்லும்போது, இறைவனுடைய இரட்சகத்தன்மைக்குரிய பேரொளியானது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இதயத்திற்கு பாய்ச்சப்படுகிறது. அதில் அவ்விதயத்திற்கு நேராகவோ அல்லது சமீபமாகவோ எத்தனை இதயங்கள் இருக்குமோ அவைகளின் மீதும் அப்பிரகாசம் பாய்கிறது. உதாரணமாக, சூரியனுடைய நிழல் நீரின்மீது

விழுந்தால் அந்த நீரும் பிரகாசிக்கிறது. அதன்பின் அந்த நீரின் நிழல் சுவற்றில் விழுந்தால் அந்தச் சுவரும் பிரகாசிக்கிறதல்லவா!

அதேபோல முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பக்கமாக தமது இதயத்தை திருப்புவரை கொண்டும், அவர்களை பின்பற்றுவதைக் கொண்டும் அப்பிரகாசம் வாய்க்கின்றது. இதில் நபியவர்களின பேரொளியை மிகப்பலமாக பற்றிக் கொள்வதற்குரிய ஒரேவழி அவர்களின் வழிமுறையை கைக் கொள்வதுதானெனக் கூறப்படுகிறது. இதில் பின்பற்றுதல் எத்தனைக்கு எத்தனை இறுக்கமாகிறதோ அத்தனைக்கத்தனை பிரகாசமும் அதிகப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இனி பரிந்துரையை பெறுவதற்கும் பல்வேறு படித்தரங்கள் குறிக்கப்படுகின்றன. ஆனால் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு இறைநம்பிக்கை என்னும் விசுவாசம் பூரணமாக இருந்தால்தான் பரிந்துரைக்குரிய உத்திரவாதம் கிடைக்கும். இதற்கு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருப்புகழை பாடி வருவதே கைகண்ட பலனாகும்.

**சுவர்க்கம், நரகம்**

சுவர்க்க நரகத்தை குறித்து திருமறை மற்றும் நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் சத்தியமாகும். அதேநேரம் சுவர்க்க நரகத்தை குறித்து அறிஞர்களிடையே பல்வேறு வகையான கருத்துக்கள் காணப்படுகின்றன. சிலர் சுவர்க்கம் வானத்திலுள்ளது எ;ன்றும், அதிலும் சிலர் நான்காவது வானத்திலுள்ளது என்றும், இன்னும் சிலர் ஆறாவது வானத்திலுள்ளது என்றும் இவ்வாறே நரகின் நெருப்பு பூமிக்குக் கீழே இருக்கிறதென்றும், வேறுசிலர் நரகமும் வானத்தில்தான் இருக்கிறதென்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர் நரக சுவர்க்கம் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் உள்ளது என்பதற்கு எத்தகைய ஆதாரமுமில்லை என்றும், அதைப் பற்றி அவைகளை தோற்றுவித்த இறைவனே நன்கறிவான் என்றும் கூறுகின்றனர். 'ஷரஹுல் மகாஸித்' என்னும் நூலில், நரக சுவர்க்கம் எங்கே இருக்கிறது என்பதற்குரிய தெளிவான ஆதாரம் எதுவுமில்லை என்றும் அதேநேரம் பெரும்பான்மையான அறிஞர்கள், சுவர்க்கம் வானத்தில் இறைவனது தெய்வாசன பீடத்திற்குக் கீழே இருக்குமென்றும், நரகம் ஏழாவது பூமிக்குக் கீழே இருக்குமென்றும் கூறுகின்றனர். ஆனால் இதில் ஒரு சிக்கலான பிரச்சனை என்னவெனில்,....

وجنة عرضها السموات والارض

'சுவர்க்கத்தின் விசாலமானது வானங்களும் பூமியுமாகும்' எனக் கூறப்படுவதால் வானங்களுக்கும், பூமிக்கும் சரியான அகல நீளத்தை கொண்டுள்ள சுவர்க்கம் வானத்தில் உள்ளதெனக் கூறுதல் எப்படி சரியாகும்? இதற்குரிய விளக்கத்தை வேத வியாக்யானிகள் நமக்கு கீழ்க்கண்டவாறு விளக்குகின்றனர். அதாவது, மனித அறிவுக்கு முன் வானம் பூமியைப் போன்ற விசாலமான சிருஷ்டி என்பது வேறு எதுவுமேயில்லையாதலால் மனித அறிவு

இதனை இலகுவாக புரிந்து கொள்வதற்காக வேண்டி சுவர்க்கத்திற்கு வானத்தையும், பூமியையும் உவமைப்படுத்தப்பட்டதே அன்றி சுவர்க்கத்தை வானத்துடனேயோ அல்லது பூமியுடனேயோ வரையறை செய்வது அவர்களின் நோக்கமல்ல. இருப்பினும் சுவர்க்கம் எவ்வளவு பெரிது என்பதை இறைவனையன்றி வேறுயாரும் அறியமாட்டார். அதேநேரம் சுவர்க்கத்திலுள்ள ஒரு சிறிய வீடு வானம், பூமியை விடக் கூட பெரிதாக இருக்கலாம்.

**அஃராப்**

இது சுவனத்திற்கும் நரகத்திற்கும் இடையேயுள்ள ஓர் இடமாகும். இந்த இடத்தில் சுவர்க்கத்திற்குரிய சுகங்களோ அல்லது நரகத்திற்குரிய கஷ்டங்களோ எதுவும் இருக்காது. பின்னும் அஃராப் என்பதற்குரிய சரியான ஆதாரங்களோ முறையான அறிவிப்புக்களோ எங்குமே காணப்படவில்லை. ஆனால் சிலர் இதுகுறித்து கூறும்போது, இணை வைத்தோரின் குழந்தைகளும், யாருக்கு இப்பூமியில் தெய்வ அறிவிப்பை குறித்த தகவல் எதுவும் இறுதிவரை கிடைக்கவில்லையோ அவர்களும் இந்த இடத்தில் இருப்பார்களெனக் கூறுகின்றனர். இதில் இமாம் சுப்கீ என்பார், அஃராப் என்பதை பற்றிய ஆதாரம் எதுவுமே நபிமொழிகளில் காணப்படவில்லை என்றும், அறிஞர்களும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், ஆனால் திருமறையில்,...

وعلى الاعراف رجال يعرفون كلا بسيماهم

'இன்னும் சில மனிதர்கள் அஃராபில் இருப்பார்கள். அவர்களுடைய அடையாங்களைக் கொண்டு ஒவ்வொருவரையும் அவர்கள் அறிவார்கள்' எனக் கூறப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் சொல்லப்படும் அஃராப் என்பது, சுவர்க்கம் மற்றும் நரகத்துடைய சுவர்களும் திரைகளுமாகும். அதில் சில மனிதர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பது, இறைத்தூதர்களும் பிராணத் தியாகம் செய்தவர்களும் விசுவாசிகளும் அறிஞர்களும் வானவர்களும் என்பது கருத்தாகும். இதேபோல சுவர்க்கவாதிகளும் நரகவாதிகளும் அவர்களுடைய நெற்றியிலுள்ள அடையாளங்களைக் கொண்டு ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

இன்னும் அவை இரண்டு (சுவர்க்கமும், நரகமு)ம் இப்போது இருக்கின்றன. அன்றி, இறுதிநாளன்று தோற்றுவிக்கப்படும் என்பது தவறான கருத்தாகும். மேலும் மனித சிருஷ்டிகளின் முதல் தோற்றவாளர்களான ஆதம் மற்றும் ஹவ்வா அலைஹிமஸ்ஸலாம் ஆகிய இருவரும் படைக்கப்பட்டு சுவர்க்கத்தில் இருந்தனர் என்பது சுவர்க்கமும், நரகமும் முன்பே படைக்கப்பட்டு விட்டன என்பதற்குரிய மிகப்பெரிய ஆதாரமாகும்.

وهما مخلوقتان موجودتان . باقيان ولا يفنيان ولا يفني اهلهما

'சுவர்க்கம், நரகம் அதில் சுவர்க்கவாதிகளும் நரகவாதிகளும் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். எப்போது அனைவரும் ஒருமுறை மரணிக்கச் செய்யப்பட்டு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு விட்டனரோ அதன்பின் அவர்கள் இறக்கவே மாட்டார்கள். சுவர்க்க நரகில் யாருக்குமே மரணம் வராது'. இதனாலேயே...

وخلقتكم لابد

'நான் உங்களை நிரந்தரமாக ஜீவிக்கச் செய்து விட்டேன்' என்பதாக இறைவன் கூறுகிறான்.

*இதன் தொடர்ச்சி இரண்டாம் பகுதியில்....*